வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 79 | பக்கங்கள் : 20


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




07
சொல்லச் சொன்னார்கள் சொன்னேன்




08
உள்ளூராட்சி தேர்தல்களுக்கு எதிரான அரசின் கெடுபிடிகள்



09
தேர்தலுக்கு நிதி இல்லை! ரணிலிடம் நேர்மை இல்லை!



10
தேசியமென்னும் வெற்றுக் கூடு அன்றும் இன்றும்?

# உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு; சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு!

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தீர்மானம்

கொழும்பு, பெப்ரவரி 26

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திட்டமிட்டபடி எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் நாள் நடத்தப்படாமை தொடர்பில் அனைத்துலக சமூகத்துக்கு அறிவிக்கவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அறிவித்துள்ளன என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

19

## வீட்டில் எரிந்த நிலையில் 2 பெண்களின் சடலங்கள்

### ஊர்காவற்றுறையில் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 26

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு பெண்கள் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் சென். மேரிஸ் வீதியில் அமைந்துள்ள அவர்களின் வீட்டில் இருந்தே சடலங்கள் மீட்கப்பட்டன.

நேற்று காலை இருவரும் தீக்குளித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் கூறினர் உயிரிழந்த பெண்கள் இருவரும் 65 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

19

## விரைவில் 6 இலட்சம் குடும்பங்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படலாம்!

### கட்டணம் அதிகரிக்கப்பட்டமையால்

கொழும்பு, பெப். 26

அதிகரித்துள்ள கட்டணத்தைச் செலுத்த முடியாத 6 இலட்சத்துக்கும் அதிகமான மின் பாவனையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மிகவும் ஆபத்தில் இருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறின.

பொருளாதார நெருக்கடியின் ஆரம்பத்திலிருந்து மின்சாரம்

19

## அமெரிக்க உளவுத்துறையின் வருகையால் இந்தியா மீண்டும் நாட்டை ஆக்கிரமிக்கும்!

### அரசுக்கு விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, பெப். 26

அமெரிக்க உளவுத் துறையின் வருகையினால் இந்தியா மீண்டும் எமது நாட்டை ஆக்கிரமிக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெப்ரவரி 14 காதலர் நாளன்று ஜெடிடியா றோயல் உள்ளிட்ட இருபது பேர் கொண்ட குழுவினர் சிறிலங்காவுக்கு வருகை

19

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதான சந்தேகநபர் தப்பியோட்டம்

### நான்கு பொலிஸார் கைது

கொழும்பு, பெப். 26

போலியான பெயரில் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற பாரிய குற்றவாளி ஒருவர், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் 4 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர் நேற்று முன்தினம் இரவு மற்றுமொரு நபருடன் வெளிநாடு செல்வதற்காக இரண்டு கார்களில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

19

## மயந்த பதவி விலகுவதாக தகவல் எதுவுமே இல்லை!

### கூறுகிறார் சபாநாயகர்

கொழும்பு, பெப். 26

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க விலகுகிறார் என தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் அவ்வாறான தகவல் எதுவும் தமக்கு கிடைக்கப்பெறவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க, அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து

19

## ஜெனிவாவில் மார்ச் 8,9 இல் இலங்கை குறித்து ஆராய்வு

ஜெனிவா, பெப். 26

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத் தொடர் நாளை திங்கள் கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன், ஐ.நா மனித உரிமைகள் குழு கூட்டமும் அன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

மார்ச் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு கூட்டத்தின் போது இலங்கை விவகாரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

மார்ச் மாதம் 8 ஆம் திகதியும் 9 ஆம் திகதியும் இலங்கை தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இம்முறை ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் தான்

19

## விக்கிரமசிங்க மலர்ச்சாலையில் உள்ளூராட்சித் தேர்தலின் உடல்

### டலஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, பெப். 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் உடல் விக்கிரமசிங்க மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைதியற்ற வரலாற்று சம்பவத்திற்கு அழைப்பு விடுப்பதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடவடிக்கைகளுக்கு

19

## நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஜனநாயகத்தைச் சீர்குலைக்க முயற்சி!

### ரணிலைச் சாடினார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, பெப். 26

நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டு ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளார் என முஜிபுர் ரஹ்மான் விமர்சித்துள்ளார்.

கொழும்பு-07 மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

19

## ஊர்காவற்றுறை குளத்தில் விழுந்து ஒருவர் உயிரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள குளம் ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# தேர்தலை பிரகடனப்படுத்துவது குறித்து ஜனாதிபதி கருத்து வெளியிடமுடியாது!

## அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 26

தேர்தலை பிரகடனப்படுத்துவது தொடர்பில் கருத்து தெரிவிக்க ஜனாதிபதிக்கு உரிமை இல்லை என்றும் அவை அனைத்தும் நீதிமன்றத்தால் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை என்றும் ஜே.வி. பி. தலைவர் அனுரகுமார திஸ ாநா யக்க தெரிவித் தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு சட்டரீதியாக செயற்படாவிட்டால் ஜனாதிபதி நீதிமன்றத்தை நாடலாம் எனவும் தேர்தல் குறித்து ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன்வைத்த விடயங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தலுக்கான திகதியை அறிவித்து, வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தபால் மூல வாக்களிப்பிற்கான திகதியும் அறிவிக்கப்பட்ட நிலையில், உத்தியோக பூர்வ அறிவிப்பு விடுக்கவில்லை என ஜனாதிபதி கூறுவது அப்பட்டமான பொய் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரிக்கை விடுத்தனர் என ஜனாதிபதி தெரிவித்திருந்தால், தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என அனுரகுமார திஸாநா யக்க கூறினார்.

ஆகவே ஜனநாயகம் மற்றும் மக்களின் வாக்குரிமைக்கு எதிரான ஜனாதிபதியின் நகர்வுகளை தோற்கடிக்க அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்பு களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (அ)






## பொன் அணிகளின் கிரிக்கெட் போட்டி

# பத்திரிசியார் கல்லூரி வெற்றி!

யாழ்ப்பாணம், பெப். 26

106 ஆவது பொன் அணிகளின் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி இனிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

பொன் அணிகளின் போர் என வர்ணிகப்படும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்குமிடையிலான 106 ஆவது கிரிக்கெட் போட்டி நேற்று முன் தினம் காலை ஆரம்பானது.

தொடர்சியாக இரண்டு நாட்கள் இரண்டு இனிங்ஸ்களாக நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி 74 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது முதல் இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி சார்பில் அபிலாஸ் 54 ஓட்டங்களையும் சமிதன் 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்த னர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாண கல்லூரி சார்பில் பிருந்தன், நர்தனன், ரோய் ஜெனிசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை பெற்றனர்.

பதிலுக்கு முதலாம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 42 ஓவர்களில் 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாண கல்லூரி சார்பில் அதிகபட்சமாக மதுசன் 24 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி சார்பில் சாருசன், சதுர்ஜன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

202 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பலோன் ஆட்ட முறையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்கியது.

அதனடிப்படையில் இரண்டாம் இனிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 64.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாண கல்லூரி சார்பில் அதிகபட்சமாக மதுசன் 54 ஓட்டங்களையும், நர்தனன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி சார்பில் சாருசன், அபிலாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனடிப்படையில் 106 ஆவது பொன் அணிகளின் துடுப்பாட்டப் போட்டியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி இனிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாண கல்லூரி வீரர் மதுசனும் சிறந்த பந்துவீச்சாளராக புனித பத்திரிசியார் கல்லூரி வீரர் சாருசனும் போட்டியின் ஆட்டநாயனாக புனித பத்திரிசியார் கல்லூரி வீரர் அபிலாஸ் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# யாழ். பல்கலை மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை!

கடந்த 22ஆம், 23 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலைவார நிகழ்வுகளின் போது, மூன்றாம் வருட மாணவர்களால், இரண்டாம் வருட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் சுதந்திரமான - முறை சார்ந்த விசாரணையை மேற்கொள்வதற்கு ஏதுவாக நான்கு பேருக்கும் உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான விதிமுறைகளுக்கு அமையக் கடந்த 23 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை விடுதி உட்பட பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கும், கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், பல்கலைக்கழகம் தொடர்புபட்ட எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கலைப் பீடாதிபதியின் உள்நுழைவுத் தடைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கலைவார நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மூன்றாம் வருட மாணவர்களுக்கும், இரண்டாம் வருட மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றி, கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கைகலப்பாக மாறியுள்ளது. இந்தச் சம்பவத்தின்போது தலை மற்றும் தோள்பட்டைப் பகுதியில் உபாதைக்குள்ளான இரண்டாம் வருட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார்.

சம்பவம் தொடர்பில், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் நான்கு மாணவர்களுக் கும் சம்பந்தமிருப்பதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், பல்க லைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாகக் கலைப் பீடாதிபதியினால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# போலியான ஆவனங்களை தயாரித்து அரச காணி அபகரிக்கும் அதிகாரிகள்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, பெப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில அரச அதிகாரிகள் போலியான ஆவணங்களை தயாரித்து அரசகாணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு,மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி பகுதியில் மக்களினால் முன்னெடுக்கப்பட்ட காணி கோரிக்கை தொடர்பான போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

சவுக்கடி பகுதியில் காணியற்ற மக்கள் அரச காணிகளில் குடியேறமுற்பட்ட நிலையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டது.

சவுக்கடி பகுதியில் பெருமளவான மக்கள் காணியற்று உள்ள நிலையில் அங்குள்ள அரச காணிகளை தனவந்தர்கள் பெருமளவில் அபகரித்துவரும் நிலையில் காணியற்ற மக்கள் தொடர்ந்து காணியற்ற மக்களாகவேயிருந்துவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அப்பகுதி மக்கள் நேற்று முன் தினம் மாலை அங்கு போராட்டம் நடத்திய நிலையில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் அப்பகுதிக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

குறித்த பகுதியில் நீண்ட காலமாக காணி அபகரிப்புகள் பெருளமவில் நடைபெற்று வருவதால் அதனைத் தடுக்க முனையாதவர்கள் தாங்கள் இருப்பதற்கு காணிகளை அடைக்கமுனையும்போது தங்களை கைது செய்யமுனைவதாக மக்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

ஏவ்வாறாயினும் தமக்கான காணிகளை பெற்றுத்தர அதிகாரிகள், அரசியல்வாதிகள் முயற்சிகளை செய்யவேண்டும் என இங்கு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் அரச காணிகளை பாதுகாப்பதற்கு உயர் அதிகாரிகள் நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டி காணி மாபியாக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடப் போவதாகவும் காணிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உறுதியளித்தார். (அ)

# வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 26

நாட்டில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வேலைவாய்ப்பின்மை 20 வீதம் வரை அதிகரித்துள்ளதாக திணைக்களத்தின் மனித வள மற்றும் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பா ர் பி.எச்.சி.ஷிரோமாலி தெரிவித்தார்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை தொழில்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் சென்று, அங்குள்ள வேலைவாய்ப்பற்ற இளம் சமூகத்தினரின் பெயர்ப்பட்டியலை பெற்றுக் கொள்ளவும் அவர்களின் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவித்தது. (அ)

# மார்ச் 19 இற்கு முன்னர் தேர்தல் கட்டாயமாக நடத்தப்படவேண்டும்!

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், பெப். 26

**அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற தேர்தல் எதிர்வரும் மார்ச் 19 ம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக நடத்தப்படவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- விலைவாசிகள் உயர்ந்த வண்ணம் உள்ளன.விலைவாசி அதிகப்பினாலும் வரி அதிகரிப்பினாலும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை காணப்படுகிறது.

பலருக்கு வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத கடும் கஷ்டமான நிலை காணப்படுகின்றது.அப்படியான சூழ்நிலையிலே இந்த உள்ளூராட்சித் தேர்தல் என்கின்ற விடயத்தைப் பேசுபொருள் ஆக்கி நாட்டில் அதைக் குறித்த ஒரு சர்ச்சை உருவாக்கி மக்களின் கவனத்தை அதன்பால் திருப்புவதற்காகவும் சில முயற்சிகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அப்படியான அந்த திசை திருப்புவதற்காக அரசாங்கம் சார்பிலும் ஜனாதிபதி சார்பிலும் முயற்சிகள் நடைபெற்றாலும் கூட தேர்தல் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒரு விடயம். ஒரு நாடு ஜனநாயக நாடா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது உரிய காலத்தில் தேர்தல்கள் கிரமமாக நடத்தப்படுவது முக்கியமான ஒரு அம்சமாகும்.

ஆகையினால் நாட்டில் பாரிய மாற்றங்கள் சென்ற வருட நடுப்பகுதியிலே இடம்பெற்றன. தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் அதாவது ஜனாதிபதி நாட்டை விட்டு ஓடினர். பிரதமர் தானாக பதவி விலகினாலும் கூட தங்களுடைய பாராளுமன்றத்தில் இருந்தவர்கள் ஆட்சியைத் தொடர்ந்து வருவதோடு நாட்டை ஆட்டிப் படைக்கின்ற ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் மிகவும் முக்கியமான ஒரு கருத்துக்கணிப்பாக அனைவராலும் நோக்கப்படுகின்றது. நாட்டு மக்களின் அரசியல் நோக்கம் என்ன என்பது இந்தத் தேர்தல் ஊடாக வெளிப்படவுள்ளது.

தேர்தல்களை நடத்தாது பின்போடுவது நாட்டின் சுபாவத்தை மாற்றிவிடும். எனவே உள்ளூராட்சித் தேர்தல் சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது அந்தப்படியே நடத்தப்படவேண்டும். சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

அதற்கு ஏற்றவிதமாக நிதியமைச்சும் ஆரம்ப விடயங்களுக்கென்று சிறு சிறு தொகைகளை ஏற்கனவே கொடுத்து இன்று வரைக்கும் 100 மில்லியன் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதற்கு மேல் எதையும் கொடுப்பதற்கு நிதியமைச்சரின் அனுமதி இல்லாமல் என்னால் கொடுக்க முடியாது என்று திறைசேரியின் செயலாளர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருக்கின்றார்.

நிதி அமைச்சராக இருப்பவர் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதேபோல ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராகவும் இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க.ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் கொழும்பு மாநகர சபையை அண்டிய பகுதிகளில் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

தேர்தல் ஒரு அத்தியாவசிய மற்ற தேவை என ஜனாதிபதி கூறுவதை நாங்கள் மறுக்கின்றோம்.ஜனநாயக நாடு என்கின்ற சுபாவத்தை நாங்கள் தொடர்ந்து பேணுவதாக இருந்தால் தேர்தல் கட்டாயமாக நடத்தப்படவேண்டும்.

தேர்தலை பிற்போடமுடியாது. இது ஒரு அத்தியாவசியமான தேவைப்பாடு. தேர்தல் நடத்துவதற்கு பணம் தேவை. அதை யார் யாருக்கு செலுத்துவது என்ற கேள்வி உள்ளது.

எங்களைப் பொறுத்தவரை மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் ஏனென்றால் ஏற்கனவே காலம் தாழ்த்தப்பட்டுள்ளது.

அதேபோல ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடாது கட்டாயமாக நடத்தப்படவேண்டும். ஒன்பதாம் திகதி சாத்தியமற்றது எனக் கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியது. அத்தோடு மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டு ஆக வேண்டும்.

அதை தேர்தல் ஆணைக்குழு செய்யும் என எதிர்பார்க்கின்றோம். அரச ஊழியர்கள் ஜனாதிபதியாக இருக்கலாம் நிதி அமைச்சராக இருக்கலாம். ஆனால் எந்த கோதாவிலும் தேர்தலை நடத்துவதை தடுக்கிற செயற்பாட்டிற்கு அவருக்கு உதவியாக செயற்படக்கூடாது - என்றார். (அ)

# 200 ஏக்கர் அரச காணி மோசடி மொட்டு உறுப்பினர் சிக்கினார்!

கொழும்பு, பெப். 26

புத்தளம், மஹகும்புக்கடலை, வல்பலுவ பிரதேசத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் காணியை வெளிநாட்டவருக்கு 24 மில்லியன் ரூபாவுக்கு குத்தகைக்கு வழங்கி மோசடி செய்த குற்றச்சாட்டின்பேரில் பொதுஜன பெரமுனவின் ஆனமடு உள்ளூராட்சிச் சபையின் முன்னாள் உறுப்பினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் பொலிஸ் பிரிவில் வசிக்கும் 50 வயதுடைய முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரிவு இலக்கம் 3 இன் பொலிஸ் குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர் கைதானார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினரை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# உள்ளம் பொற்கிழி பரிசுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 26

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி இளையோரை ஊக்குவிக்கும் முகமாக உள்ளம் சஞ்சிகை கலை, இலக்கிய, சமூக, கலாச்சாரத் துறைகளுக்கான மாபெரும் போட்டிகள் மற்றும் தெரிவுகளை நடத்தி ரூபா 1.2 மில்லியனுக்கும் அதிகமான, மிகவும் பெறுமதி வாய்ந்த எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட பொற்கிழிப் பரிசுகளை வழங்கவுள்ளது.

பின்வரும் விடயங்களில் போட்டிகள் நடத்தப்படும்- சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் மற்றும் மொழிபெயர்ப்பு, ஓவியப்போட்டி, புத்தாக்கம், சுயதொழில்- குடிசைக் கைத்தொழில், வீட்டுத் தோட்டம், கால்நடை வளர்ப்பு , 2022 இன் சிறந்த ஆண் / பெண் விளையாட்டு சாதனையாளர், சதுரங்கம், சிறந்த நாடகக் குழு மற்றும் கூத்துக் குழு, சமூக சேவை - அமைப்பு / குழு, வலைப்பந்து / குழு, உதைபந்து - குழு, கிரிக்கெட் -குழு.

இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கேற்க முடியும்.

சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர் பெண்/ ஆண் போட்டிகளில் 35 வயதுக்குட்பட்டோர் மட்டுமே பங்கேற்க முடியும். ஏனைய போட்டிகளுக்கு வயதெல்லை கிடையாது.

போட்டி விபரங்களை **https ://ullamm.com/2023reg/** என்ற இணையதளத்தில் பார்வையிட முடியும்.

உள்ளம் பொற்கிழிப் பரிசுப் போட்டி களுக்கான முடிவுத் திகதி மார்ச் 25 ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

# மயந்த திஸாநாயக்க மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

## ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, பெப். 26

பொதுநிதிக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவர் பதவிக்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள கண்டி மாவட்ட உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொதுநிதிக்கான பாராளுமன்ற குழுவின் தலைமைப் பதவி எதிர்க்கட்சிகளுக்கே வழங்கப்படுவது வழக்கம்.

எனினும், ரணில்- பெரமுன அரசு இம்முறை அதில் திருகுதாளம் விட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் அதிருப்தியடைந்து, அரசு தரப்பு தாவுவார் என கருதப்படும் வந்த மயந்த திஸாநாயக்கவுக்கு தலைமைப் பதவியை வழங்கியுள்ளது.

ஊழல் விவகாரங்களை மறைக்க இந்த நடவடிக்கையெடுக்க ப்பட்டுள்ளதா என பரவலாக விமர்சிக்கப்படுகிறது.

முன்னதாக, எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரான லக்ஷ்மன் கிரியெல்ல, பொது நிதிக் குழுத் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை முன்மொழிந்தார்.

எனினும், ஆளுந்தரப்பு மயந்த திஸநாயக்கவின் பெயரை முன்மொழிந்தது.

தலைவர் பதவிக்கு மயந்த திஸநாயக்கவின் பெயரை ஆளும் கட்சி உறுப்பினர்கள் முன்மொழிந்ததையடுத்து, லக்ஷ்மன் கிரியெல்ல, திசநாயக்கவை தொலைபேசியில் அழைத்து, பதவியை ஏற்கப் போகிறீர்களா எனக் கேட்டுள்ளார்.

அப்போது மயந்த திஸநாயக்க அந்த பதவியை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

ஹர்ஷ டி சில்வாவை அந்தப் பதவிக்கு நியமிக்க கட்சி முன்மொழிந்துள்ளதால், அந்தப் பதவியில் இருந்து விலகுவீர்களா என திஸநாயக்கவிடம் கிரியெல்ல வினவியபோது, அந்தப் பதவியை ராஜினாமா செய்யத் தயாரில்லை என்றும் மயந்த தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியின் தீர்மானத்துக்கு புறம்பாக செயற்படும் மயந்த திஸநாயக்கவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரியவருகின்றது.

பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஹர்ஷ டி சில்வா ஏன் நீக்கப்பட்டார் என வினவியபோது, அவர் தனது கடமைகளை சரியாகச் செய்தமையினால் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கலாம் என எண்ணுவதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (அ)

# நீண்டகால மின் உற்பத்தி திட்டம் எரிசக்தி அமைச்சரால் சமர்ப்பிப்பு

கொழும்பு, பெப். 26

நீண்ட கால மின் உற்பத்தித் திட்டம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் தொடக்கம் இந்த வருடம் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற எரிபொருள் இறக்குமதி தொடர்பில் விரிவான அறிக்கையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தமது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க சக்தி வலுவில் இருந்து மின் உற்பத்தியை 70 சதவீதமாக அதிகரித்தல் மற்றும் புதிய நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கக்கூடாது என்ற அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் இந்த நீண்டகால மின்னுற்பத்தித் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# அதானி குழுமத்தால் மன்னாரை விட்டே மக்கள் வெளியேறவேண்டிய நிலைமை!

## மன்னார் பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

மன்னார், பெப். 26

மன்னார் மாவட்டத்தில் அதானி நிறுவனத்திற்கு காற்றாலை செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிராகவும் அதேநேரம் காற்றாலை அமைக்கும்போதோ விரிவுபடுத்தலின் போதோ மன்னார் தீவு மக்களின் ஆலோசனையோ கருத்துக்களையோ அரசாங்கம் உள்வாங்கவில்லை எனவும் இந்த திட்டம் மன்னார் மாவட்டத்தில் சர்வாதிகாரமான முறையில் பலவந்தமாக மேற்கொள்ளப்படுவதாகவும் மன்னார் பிரஜைகள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின்போது பிரஜைகள் குழுவினரால் இந்தக் குற்றசாட்டு முன்வைக்கப்பட்டது.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு பகுதியில் ஏற்கனவே அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டிருக்கும் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தற்போது விரிவுபடுத்துவதற்காக இந்தியாவின் தனியார் நிறுவனமான அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் மன்னார் தீவுப் பகுதியில் அமைக்கப்பட்டது போன்று மிகப்பெரியதொரு காற்றாலை மின் திட்டத்தை அமைப்பதற்காக அரசாங்கத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கின்றது என்ற செய்தி எங்களுக்கு ஒரு பேரிடியாக கிடைத்திருக்கின்றது.

எமது மன்னார் மாவட்ட மக்கள் இந்த காற்றாலை பிரச்னையின் காரணமாக ஏற்கனவே பல்வேறு போராட்டங்களை அமைதி வழியில்-சாத்வீகமான முறையில் நடத்தி இந்த நாட்டு அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் தங்கள் ஆதங்கங்களை தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

இந்த காற்றாலை மின் பூங்கா திட்டத்தின் மூலமாக மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்னைகள் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் அனைத்தையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தும் கூட அவற்றை எல்லாம் கருத்தில் எடுக்காமல் மக்களின் வேண்டுகோளை புறந்தள்ளி திரும்பவும் தெற்கு பகுதியில் முடித்து வட பகுதியில் உள்ள கடற்கரை பகுதியிலே இந்த திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றார்கள்.

இந்த விடயத்தை மக்கள் சார்பாக நாங்கள் கவலையுடனும் ஆதங்கத்துடன் திரும்பவும் எங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

ஏற்கனவே தலைமன்னார் தொடக்கம் தாழ்வுபாடுவரை கிட்டத்தட்ட 36 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த குறிப்பிட்ட பகுதிக்குள் தலைமன்னார், நடுக்குடா ,பேசாலை, பெரியகரிசல், புதுகுடியிருப்பு, சின்னகரிசல், தோட்டவெளி, தாழ்வுபாடு,கீரி போன்ற கிராமங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இப் பகுதி மக்கள் மீன்பிடி, சிறு விவசாயம் அதேபோல் அந்த பகுதியில் இருக்கின்ற பனை ,தென்னை வளங்களை பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட இந்த திட்டத்தின் ஊடாக மீனவர்கள் மீன்பிடியில் கடும் வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றனர். ஏற்கனவே இந்திய மீனவர் வருகையினால் பாதிக்கப்பட்டிருக்கும் எங்கள் மக்கள் இந்தக் காற்றாலை அமைப்பின் மூலமாக பாரம்பரிய கரைவலை தொழில் மற்றும் கரையோர மீன்பிடி தொழிலைச் செய்யமுடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டு தொழிலை கைவிடக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது மண்ணெண்ணெய் உட்பட்ட எரிபொருள் என்பவற்றை மிக உயர்ந்த விலையில் மீனவர்கள் கொள்வனவு செய்து கஷ்டப்பட்டு கடலுக்குள் சென்று வெறும் வலையுடன் வீடு திரும்புகின்ற ஒரு துர்பாக்கியமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே தான் நாங்கள் இந்த விடயத்தை அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வந்திருக்கிறோம்.

வீதிகளில் போராட்டங்களை மேற்கொண்டு மன்னார் மக்கள் தங்கள் அவல நிலையை பல முறை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இவை எவற்றையும் கவனத்தில் எடுக்காமல் திரும்பவும் இப்படியான ஒரு செயல் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது என்பதை நினைக்கின்றபோது எமக்கு மிகவும் மனவேதனையாக இருக்கின்றது.

நமது மன்னார் மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் மன்னர் தீவுப் பகுதிக்குள் தான் வாழ்ந்து வருகின்றார்கள். நகரமும் தீவுப்பகுதிகுள் தான் அமைந்திருக்கின்றது.

எனவே இத்திட்டத்திற்காக பெருமளவு காணிகள் தனியாரிடம் இருந்து அதிகமான விலை கொடுத்து வாங்கப்பட்டதன் காரணமாக தற்போதும், எதிர்காலத்திலும் இந்த மக்கள் விவசாயத்தை,கடல்தொழிலை அதே போன்று பனை தென்னை வளங்களினால் தங்கள் ஜீவனோபாயத்தை நடத்தும் பலர் அனைத்தையும் இழந்து ஒரு வறுமை நிலைக்குள் செல்லும் நிலை ஏற்படும்.

இதனால் நகரத்தில் உள்ள வியாபாரிகளின் வியாபாரங்களும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படியான துன்ப நிலையில் இந்த செயற்திட்டத்தை வேறு பயன்பாடு இல்லாத இடங்களுக்கு மாற்றுமாறு அரசை மன்றாட்டமாகக் கேட் டுக் கொள்கின்றோம்-என்றனர்.(அ)

# நிலாவரையில் இராணுவம் வைத்த புத்தர் சிலை உடன் அகற்றப்பட்டது!



யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணம் -அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவரை கிணறு அமைந்துள்ள பகுதியில் அரச மரத்துக்கு கீழே இராணுவத்தினரால் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது.

தவறுதலாக புத்தர் சிலை வைக் கப்பட்டுள்ளதாக இராணுவ பொறுப்பதிகாரி வருத்தம் தெரிவித்தார் என வலி கிழக்கு பிரதேசசபை தவிசா ளர் தி. நிரோஷ் தெரிவித்தார்.

நிலாவரை கிணற்றுப் பகுதியை தொல்லியல் திணைக் களத்தினர் உரிமை கொண்டாடும் நிலையில், அந்த பகுதியில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. நிலாவரை கிணறு அமைந்துள்ள பகுதி யில் புத்தர்சிலை வைக்க ஏற்கனவே முயற்சிகள் செய்யப்பட்ட நிலையில், அவை தடுத்து நிறுத்தப்பட்டு வந்தன.

நேற்று அதிகாலை அங்கு சிறிய குடில் அமைக்கப்பட்டு புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டதாக பரவிய தகவலையடுத்து அங்கு பொதுமக்கள் குழுமினர். வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாக ராஜா நிரோஸின் சம்பவ இடத்துக்கு சென்றார்.

“பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து அங்கிருந்த புத்தர் சிலையை இராணுவம் அகற்றியது. நான் அங்கு சென்றபோது குடில் மாத்திரமே இருந்தது. அந்த குடிலையும் உடனடியாக அகற்றவேண்டுமென கூறினேன். அங்கிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தொலைபேசியில் மேலதிகாரிடம் பேசிவிட்டு, கோபமாக குடிலை பிடுங்கிச் சென்றார்.

“பின்னர் முகாமிலிருந்து வந்த அதிகாரியொருவர் தன்னை மேஜர் மஞ்சுள என அறிமுகப்படுத்தி, சிறு தவறு நடந்துவிட்டதாக வருத்தம் தெரிவித்தார்.

“சம்பவ இடத்திற்கு பொலிஸாரும் வந்தனர். புத்தர் சிலை அகற்றப்பட்டு நிலைமை சுமுகமாகிய பின்னர் அவர்கள் சென்றனர்” - என்றார். (அ)

# தலவாக்கலை நகரிலும் போராட்டம்!



கொழும்பு, பெப். 26

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி தலவாக்கலை நகரில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபாலவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் கட்சி செயற்பாட்டாளர்களும், மக்களும் கலந்துகொண்டனர்.

” தேர்தலை ஒத்திவைத்து மக்கள் சாபத்துக்கு உள்ளாகாதே, தேர்தலை உடன் நடத்து, மனித உரிமைகளைமீறி சர்வாதிகார ஆட்சி செய்யாதே, பொருட்களின் விலையை குறை” என்பன உட்பட பல கோஷங்கள் எழுப்பட்டன.

அத்துடன், தமது கோரிக்கைகளை பதாகைகளில் எழுதி அவற்றை தாங்கிபிடித்தவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அரச ஊழியர்கள் தேர்தல் நடக்கும்வரை சேவையில் ஈடுபடமுடியாது

கொழும்பு, பெப். 26

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறும் வரை சேவையில் ஈடுபட முடியாது.

தேர்தல் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் தான் அவர்கள் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தார்கள். தேர்தல் இல்லை என்று குறிப்பிடவில்லை, தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அரச சேவையாளர்கள் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் அவர்கள் மூன்று மாத காலம் சம்பளமில்லாத விடுமுறை என்ற அடிப்படையில் சேவையில் இருந்து இடை விலக வேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

தவிர்க்க முடியாத காரணிகளினால் எதிர்வரும் மாதம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் தற்போது பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறும் வரை அரச சேவையில் ஈடுபட முடியாது.

தேர்தல் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் தான் அவர்கள் தேர்தலில் போட்டியிட தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இல்லை என்று குறிப்பிடவில்லை. தவிர்க்க முடியாத காரணங்களினால் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம் திகதி அறிவிப்படும்-என்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படும் நிலையில் சம்பளம் இல்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பிரதமரிடம் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
26.02.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மகிந்தவிடமுள்ள தீர்வு என்ன?

13வது திருத்தச்சட்டம் நாட்டிற்கு தேவையற்ற ஒன்றென்று மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக கூறிய போது, மகிந்த ராஜபக்ஷ அப்பிராயங்கள் எதனையும் தெரிவித்திருக்கவில்லை. ஆனால், பௌத்த பிக்குகளின் கூச்சல்களை தொடர்ந்து, 13 தேவையற்ற ஒன்றொன்று கூறியிருக்கின்றார்.

13 தேவையற்ற ஒன்றென்று கூறுவதுடன் பிரச்சினை முடிந்துவிடப்போவதில்லை – அது பொருத்தமற்றதென்றால், அடுத்தது என்ன – எது பொருத்தமானதென்று, மகிந்த கூற வேண்டும். மகிந்தவின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பிரத்தியேகமான அரசியல் பிரச்னைகள் எதுவுமில்லையென்று கூறியிருந்தார். மகிந்தவும், அவரது சகோதரரின் வழியில் சிந்திக்கின்றாரா?

உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்காவை பாராட்டி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தில் கூட, இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வாக, 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் தீர்வை காணவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர், ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீ மூனுடனான சந்திப்பின் போதும், மகிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதியளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து பல்வேறு சந்தர்பங்களில் 13 பிளஸ் தொடர்பில் மகிந்த பேசியிருந்தார். இந்திய விஜயத்தின் போதும் இதனை வலியுறுத்தியிருந்தார். அதாவது, 13இற்கும் அப்பால் சென்று பிரச்னைகளை தீர்க்கப் போவதாக கூறியிருந்தார். ஆனால் இப்போது 13 நாட்டிற்கு பொருத்தமில்லையென்று குத்துக்கரணமடித்திருக்கின்றார்.

ஒன்றை நிராகரிக்கின்ற போது, அதற்கு மாற்று வழியொன்றை முன்வைக்க வேண்டும். அது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். 13 போதாது – என்பதே தமிழர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. 13இற்கு அப்பால் செல்ல வேண்டுமென்பதே தமிழர்களின் நிலைப்பாடு. ஒற்றையாட்சிக்குள் பகிரப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் பொருத்தமானதல்ல என்பதே, கடந்த 74 வருடங்களாக, தமிழர்களின் நிலைப்பாடாக இருந்திருக்கின்றது.

ஆனாலும் முதலில், 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துங்கள், பின்னர் அதிலிருந்து முன்னோக்கி பயணிக்கலாமென்னும் நிலைப்பாட்டிற்கு பெரும்பாலான தமிழ் தேசிய கட்சிகள் உடன்படுகின்றன. ஆனால் அதனை தென்னிலங்கையால் நிறைவேற்ற முடியவில்லையாயின், சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து வாழமுடியுமென்னும் நம்பிக்கையை எவ்வாறு ஏற்படுத்த முடியும்?

இலங்கைத் தீவை அதளபாதாளத்தில் தள்ளிவிட்டதில் மகிந்த ராஜபக்ஷவின் தவறான கொள்கைகளும், குடும்ப அதிகார ஆசையுமே பிரதான காரணங்களாகும். இந்த நிலையில் மீண்டும் அதிகாரத்தை தக்கவைப்பதற்காக தமிழர் விரோத துருப்புசீட்டையே மகிந்த மீளவும் கைக்கொள்ள முயற்சிக்கின்றார். மகிந்தவை மீண்டும் பிரதமராக நியமிக்க வேண்டுமென்னும் கோரிக்கை சிலரால் முன்வைக்கப்பட்டுவரும் சூழலில்தான், மகிந்த இவ்வாறானதொரு கதையை கூறியிருக்கின்றார். அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தை பொருத்தமற்றதென்று கருதினால், அதனைவிடவும் சிறப்பான ஒன்றை கொண்டுவருவதன் ஊடாக, பொருத்தமற்றதை நீக்க முடியும். ஆனால் இருப்பதையே அமுல்படுத்த முடியாதவொரு சூழலில், அதனைவிடவும் சிறப்பான ஒன்றை எவ்வாறு கொண்டுவருவது?

# யாழ். வைத்தியசாலை கழிவுகளை வவுனியாவில் எரிக்க இடமில்லை!

## செல்வம் அடைக்கலநாதன் அறிவிப்பு

*மன்னார், பெப். 26*

யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை வவுனியாவில் எரிப்பதற்கு வட மாகாண சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக தனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அதற்கு எவ்விதத்திலும் உடன்பட முடியாது என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை தெல்லிப்பழையில் எரிக்க முடியாது எனவும் வரும் காலங்களில் வவுனியாவில் எரிப்பதற்கான முடிவை வட மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

இவ்வாறான முடிவை எடுப்பதற்கு முன் வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்களுடன் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும். வெறுமனே அலுவகத்திற்குள் இருந்துகொண்டு எடுக்கும் முடிவுகள் சமூகங்களுக்கிடையில் பிரிவினையையும் குழப்பத்தினையும் ஏற்படுத்தும். இதனை அதிகாரிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வவுனியா வைத்தியசாலையின் கழிவுகள் தற்போது ஓமந்தை வைத்தியசாலை எரியூட்டும் நிலையத்தில் எரியூட்டப்படுவதால் அருகாமையில் உள்ள ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் யாழ்.போதனா வைத்தியசாலையின் கழிவுகளையும் வவுனியாவில் எரிக்க முற்படுவதானது ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடாகும்.

எனவே புதிய பொறிமுறைகளையும் திண்ம கழிவகற்றல் முகாமைத்துவத்தினூடான புதிய செயற்றிட்டங்களையும் கையாண்டு யாழ் போதனா வைத்தியசாலை கழிவுகளை யாழ்ப்பாணத்திலேயே எரிப்பதற்கு வட மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது. (அ)

# முக்கிய நாடுகளுடன் நல்ல உறவு வேண்டும்

## எரான் விக்கிரமரத்ன வலியுறுத்து

*கொழும்பு, பெப்.26*

தமது ஆட்சி காலத்தில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவும், பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யவும் சீனா, இந்தியா மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து முக்கிய நாடுகளுடன் நல்ல உறவுகளைப் பேணுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது சுதந்திரத்தை வலுவாகப் பாதுகாப்பதாகவும், சுதந்திர நாடாக இருப்பதற்கு வெளியுறவுக் கொள்கை மிகவும் முக்கியமானது என்றும் ஆகவே ஐ.நா.வுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையினரில் தற்போது இலங்கையின் பங்கு பிராந்திய நாடுகளை விட மிகவும் குறைவாக இருப்பதாகவும், நல்லாட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அது வீழ்ச்சியடைந்து வருவதாகவும் எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டினார்.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் நடவடிக்கையில் தீவிர கவனம் செலுத்த தற்போதைய அரசாங்கம் தவறுமானால் இலங்கையை முன்னேற்ற முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலக சந்தைகளில் பொருளாதாரம் தங்கியிருக்கும் நிலையில் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் உலக சந்தையில் விற்கப்பட வேண்டும் என்றும் எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டினார். (அ)

# 85,000 மில்லியன் ரூபாய்க்கு திறைசேரி உண்டியல் ஏலம்

*கொழும்பு, பெப். 26*

85,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான மற்றுமொரு திறைசேரி உண்டியல் ஏலம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அவை 91 நாட்களில் 45,000 மில்லியனுக்கும், 182 நாட்களில் 20,000 மில்லியனுக்கும், 364 நாட்களில் 20,000 மில்லியனுக்கும் ஏலம் விடப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -70

# கள்ள வழியில் கடல் பயணம் மேற்கொள்பவர்கள் கவனத்துக்கு...

**கணபதி சர்வானந்தா**

“கனடாவிற்கு சட்டவிரோதமாக படகு மூலம் செல்ல முயன்ற நிலையில் , படகு பழுதடைந்து வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 302 இலங்கையர்களில் 152 பேர் இலங் கைக்கு மீண்டும் வர விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படு கின்றது.நாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்த 152 பேரும் நாடு திரும்புவதற்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். மேலும், இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கோரிக்கைக்கு இணங்க 302 இலங்கையர்களுக்கு உதவியதற்காக ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புக்கு அமைச்சர் அலி சப்ரி நன்றிகளையும் கூறியுள்ளார்.” – என் பது அண்மைக்கலத்தில் நடைபெற்ற பாரிய மனிதக் கடத்தல் களில் ஒன்று. இது உலகளாவிய ரீதியில் பேசப்பட்ட விடயம்.

வியட்நாம் கடற்பகுதியில் சிக்கியிருந்த குறித்த குழுவினர் களில் 152 இலங்கையர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் விசேட விமானம் மூலம் இலங் கைக்கு அழைத்து வரப்பட்டதாக இடம்பெயர்வுக்கான சர்வ தேச அமைப்பு தெரிவித்துள்ளது.பயணித்தவர்களில் அதிகமானோர் வட பகுதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

குறிப்பாகப் பயணத்துக்காக ஆட்களைச் சேர்க்கும்போது அந்த மனிதக் கடத்தல் கும்பல்கள் கையாளும் முறைகள் தான் அவர்களை வெற்றியாளர்களாக்குகிறது. குறிப்பாக ஒரு கிராமத்தைச் சேர்ந்த இரு குடும்பங்கள் போகும் ஆனால் ஒருவர் போவது மற்றவருக்குத் தெரியாது.கப்பலில் சந்தித்த பிறகே அவர்கள் அதனைத் தெரிந்து கொள்ளுவர். இது போன்று கண்ணைக் கட்டிக் காட்டில் விடுவதாகத்தான் பயண ஒழுங்குகள் அமையும்.

இதன் பின்னால் உலக மாபிஃயா ஒன்று இயங்குவதா கவும், பதிசெய்யப்படாக கப்பல் ஒன்று வாங்கியே கடத்தல் நாடகம் அரங்கேற்றப்படுவதாகச் சொல்லப்படுகிறது. உளவியல் ரீதியாக மனிதர்களளைக் கையாளக் கூடிய வர்கள் அது சார்ந்த நிபுணர்கள் இருக்கிறார்களாம்.உயர் அரச அதிகாரிகள் தொடர்பு, பொலிஸ் அதிகாரிகள் தொடர்பு, கடற்படை அதிகாரிகள் தொடர்பு, இதெல்லாவற் றிற்றும் மேலாக சில வருடங்கள் முன்னர் பக்ஸக்களிக் கரங்கள் அருப்பதாகப் பேசப்பட்டாலும் அது உறுதிப்படுத்தப் படவில்லை.அது மட்டுமல்லாது பணத்தையும் எந்த வித ஆதாரமும் இல்லாது பெற்றுக் கொள்ளுகிறர்களாம்.

பயணத்தின் முதற்கட்டமாக சகல பயண ஆவணங்களு டனும் அவர்கள் வெளியேற்றப்பட்டு இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள். பல பேருக்கு முதல் அனுபவமாக இருக்கும். ஆனந்தமாகவும் இருக்கும். சொகுசு விமானப் பயணம். சிற்றுண்டி, மென் பானங்கள், குடிவகைகள் போன்ற உபசரிப்பு.சில மணி நேரத்தின் பின்னர் அருகிலுள்ள தீவுகளில் இறக்கப்பட்டே மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த வியட்நாம் அகதிகள் தொடர்பில் பி.பி.சி அறிவித்தா வது ”இந்த அகதிகள் எவ்வாறு கனடா நோக்கி செல்ல தயாராகினார்கள் என்பது குறித்த தகவல்களை, பிபிசி தமிழ் ஆராய்ந்தது. குறிப்பாக இலங்கையின் வடக்கு பகுதியைச் சேர்ந்த தமிழர்களே, அதிகளவில் இந்த கப்பலில் பயணித் துள்ளதாக, அந்த கப்பலில் பயணித்த இலங்கையர் ஒருவ ரின் சகோதரன், பிபிசி தமிழுக்கு உறுதிப்படுத்தினார். அத்துடன், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் இந்த கப்பலில் அதிகளவில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்த கப்பலில் சென்றவர்கள் தமது பூர்வீக சொத்துக்கள் அனைத் தையும் விற்பனை செய்து, மீண்டும் இலங்கைக்கு வர விரும்பாத நிலையிலேயே கனடா நோக்கி செல்ல தயாராகி யுள்ளனர். அமெரிக்க தொலைபேசி இலக்கத்தை பயன்படுத் தும் தமிழ் மொழி பேசக்கூடிய பிரதான முகவர் ஒருவரின் உதவியுடன், ஏனைய முகவர்களின் ஒத்துழைப்புடனும் இவர்கள் இவ்வாறு அகதிகளாக கனடாவை நோக்கி செல்ல முயற்சித்துள்ளனர். கனடா செல்லும் அகதி ஒருவரிடமிருந்து தலா 5000 அமெரிக்க டொலர் அறவிடப்பட்டதாக கப்பலில் பயணித்த அகதியின் சகோதரன் பிபிசி தமிழுக்கு உறுதிப் படுத்தினார். குறித்த இலங்கையர்கள் உரிய வகையில் விஸ ாக்களை பெற்று, விமானத்தின் மூலம் ஒன்றரை மாதத்திற்கு முன்பாக மியன்மார் நோக்கி பயணித்துள்ளனர். முகவரி னால் பெற்றுக்கொள்ளப்பட்ட 5000 அமெரிக்க டொலரின் ஊடாக, விமான பயணச் சீட்டுக்கள், விஸா உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்துக்கொடுக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார். இந்த நிலையில், மியன்மார் நோக்கி சென்ற இலங்கையர்கள், அங்கிருந்து கடந்த மாதம் 10ஆம் திகதி கனடா நோக்கிய தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 28 நாட்கள் கடல் சீற்றம் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பயணித்த குறித்த கப்பலில், அண்மையில் தூவாரமொன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இதையடுத்து, கப்பலுக்குள் நீர் பிரவேசித்துள்ள நிலையில், கப்பல் மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தாக அறிய முடிகின்றது. இந்த நிலையிலேயே, குறித்த கப்பலில் பயணித்த அகதிகள், இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர். இதையடுத்தே, குறித்த படகில் பயணித்த அகதிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர். பாரிய தொகையைச் செலவிட்டு, கனடா நோக்கி செல்ல முடியாது போனமை குறித்து அவர்கள் வருத்தம் தெரிவித்தனர். பலர் விரக்தியின் விளிம்பில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.
– இது பிபிசி செய்தி

இது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்து கின்ற ஒரு செயலமர்வு கடந்த 23.02.2023 அன்று யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக இயங்கும் நாடகமும் அரங்கியலும் – இணுவில் நிறுவனத்தில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஓர் அங்கமாக இயங்கும் ஐ.ஒ.எம் அதனை ஏற்று நடத்தியிருந்தனர். பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் பங்குபற்றியிருந்தனர். அரங்கேற்றப்பட்ட திரு. பராக்கிரம நிரியல்லேயின் இரு நாடகங்களைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்ப்பாண மக்கள் அறிவாளிகள் என்கிறோம். ஆனால் குறிப்பிட்டதொரு சமூகத்தை நோக்கித் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்ற இது போன்ற அனர்ர்தங்களை ஏன் எங்களால் இன்னும் நிறுத்த முடியவில்லை???

# இந்தவார ராசிபலன் 26.02.2023 - 04.03.2023



நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சப்தமி

பெப்ரவரி 26 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 14




அம்மன் வழிபாடு நன்மையளிக்கும். கடந்த வாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். விருப்பங்கள் எளிதாக நிறைவேறும் வாரம் இது. புதிய முயற்சிகள் அனுகூலமாகும். நண்பர்களிடம் எச்சரிக்கை யாக இருங்கள். எண்ணங்கள் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவுகள் வந்தாலும் விரய குருவால் செலவு அதிகரிக்கும். வழிபாட்டிற்காக கோயில்களுக்கு சென்று வருவீர்கள்.




சந்திர பகவானை எண்ணி செயல்பட மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் முன்னேற்றமும், விரும்பியதை வாங்கும் நிலையும் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். முயற்சிக்கேற்ற பலன்களை இந்த வாரம் அடைவீர்கள். இதுவரை இருந்த பிரச்னைகள் மறையும். ஞாயிறு வரையில் குடும்ப வகையில் எதிர்பாராத செலவு உண்டாகும். அதன்பின் எண்ணம் நிறைவேறும். திருமண முயற்சி நிறைவேறும். விஐபிகளின் ஆதரவால் விருப்பங்கள் நிறைவேறும். ஆறாமிட கேதுவால் எதிரி தொல்லை நீங்கும்.




சனிபகவானை எண்ணி செயல்பட சங்கடம் நீங்கும். நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். வேலையில் இருந்த நெருக்கடிகள் விலகும். சிலருக்கு புதிய வேலை அமையும். ஞாயிறு மாலை முதல் வரவு, செலவில் கவனம் தேவை. எதிர்பார்த்தவற்றை அடைய கடுமையாக போராடி சாதிப்பீர்கள். புதிய தொழில் தொடங் கும் முயற்சி வெற்றியாகும். திங்கள், செவ்வாயில் செலவு அதிகரிக்கும். புதனன்று உங்கள் விருப்பம் நிறைவேறும். லாபஸ்தான ராகு நன்மைகளை வழங்குவார்.




குருபகவானை மனதில் நினைத்து செயல்படுங்கள். குருபார்வை யும் செவ்வாய் பலமும் உங்கள் நிலையை உயர்த்தும். நீங்கள் ஈடுபடும் செயல்கள் வெற்றியாகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சிலருக்கு திருமண யோகம் கூடி வரும். உங்கள் செயல்கள் வெற்றிய டையும் வாரம். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். எதிர்பார்த்தவற்றில் சாதகமான நிலை உண்டாகும். பொருளாதாரம் உயரும். உங்கள் முயற்சிகள் லாபமாகும்.




குலதெய்வ வழிபாடு நலம் தரும். கடந்த வார நெருக்கடிகள் நீங்கும். வெள்ளி காலை முதல் திட்டமிட்டு செயல்படுவீர்கள். புதிய முயற்சியில் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். நெருக்கடி நீங்கி நன்மை அடையும் வாரம் இது. தொழிலில் ஏற்பட்ட தடைகள் விலகும். கமிஷன் ஏஜன்சி மூலம் லாபம் தரும். பணியில் இடமாற்றம் ஏற்படும். உங்கள் எண்ணம் நிறைவேறும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும்.




ரங்கநாதரை மனதில் எண்ணி வழிபடுங்கள். வெள்ளியன்று புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும். இது உங்களுக்கு யோகமான வாரம். செயல்களில் தடைகளும் தாமதமும் உண்டாகும். அதன்பின் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் ஆதாயமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும். தெய்வ அருளால் குறைகள் தீரும் வாரம் இது. பு திங்கள் முதல் திட்டமிட்டிருந்த முயற்சிகள் வெற்றியாகும்.




சந்திரன் நன்மைகளை வழங்குவார். குல தெய்வத்தை வணங்கி வழிபட வளமுண்டாகும். முயற்சிகள் நிறைவேறும் வாரம் இது. வியாபாரத்தில் இருந்த தடைகள், குடும்பக் குழப்பங்கள் விலகும். எதிர்பார்த்த வரவு வரும். சுபவிஷயத் தகவல் வந்து சேரும். ஞாயிறன்று நிதானம் அவசியம். உங்கள் செயல்கள் கடும்முயற்சிக்குப்பின் வெற்றி யாகும். புதிய நண்பர்களிடம் எச்சரிக்கை அவசியம். இந்த வாரம் நன்மையாகவே செல்லும்.




நவக்கிரகங்களை வழிபட நன்மை அதிகரிக்கும். வாரம் முழு வதும் உங்கள் முயற்சிகள் பலிதமாகும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் பிரச்னை குறுக்கிட்டாலும் ஆதாயம் காண்பீர்கள். செவ்வாயன்று எச்சரிக்கையுடன் செயல்படுங் கள். உங்கள் வழியில் சென்று நினைத்ததில் வெற்றி பெறுவீர்கள். செல்வாக்கு உயரும். பணவரவும் ஆதாயங்களும் உண்டாகும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.




சனீஸ்வரரை வழிபட சங்கடம் போகும். வெள்ளி, சனியில் எதிர பார்ப்பு இழுபறியாகும். ஞாயிறு முதல் எதிர்பார்த்த லாபத்தை அடை வீர்கள். சிலருக்கு இட மாற்றம், ஊர் மாற்றம் ஏற்படும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். லாப ஸ்தான கேது சங்கடங் களை நீக்குவார், ஆறாமிட செவ்வாய் ஆற்றலை அதிகரிப்பார். எதிர்ப்புகளை விலக்குவார். மூன்றாமிட சூரியன் உங்கள் முயற்சிகளை வெற்றியாக்குவார்.




ராமநாதரை எண்ணி செயல்பட முன்னேற்றம் உண்டாகும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடந்தேறும். ஞாயிறு முதல் செவ்வாய் வரை விருப்பங்கள் நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். புதன், வியாழனில் எதிர்பார்த்த பணம் வரும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிக்கும் வாரம் இது. அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். வழக்குகளால் உண்டான தொல்லைகள் அகலும்.





துர்கையை வழிபட நன்மை அதிகரிக்கும். முதல் இரண்டு நாட்களும் விருப்பங்கள் நிறைவேறும். ஞாயிறு முதல் செயல்களில் வேகம் இருக்கும். வருமானத்திற்குரிய புதிய வழிகள் தெரியும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. மூன்றாமிட ராகு முன்னேற்றத்தை வழங்கு வார். தைரியமுடன் செயல்படுவீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகி பணவரவு தாராள மாகும். வீட்டிற்குத் தேவையான நவீன பொருட்களை வாங்குவீர்கள்.




தட்சிணாமூர்த்தியை வழிபட சங்கடங்கள் தீரும். ஞாயிறு மதியம் வரை உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். அதன்பின் தொழில் மீது அக்கறை அதிகரிக்கும். சிலர் புதிய இடம் வாங்குவது, வீடு கட்டுவது என புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. பிள்ளைகளின் திருமணம், வேலை வாய்ப்பு என உங்கள் சிந்தனை செல்லும். சிலர் பணிபுரியும் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றலாகி செல்வீர்கள்.குடும்பத்தினர் நலனில் அக்கறை அதிகரிக்கும். உங்கள் செயல்களில் தெளிவு உண்டாகும். உடல் நலனில் அக்கறை செலுத்துவது நல்லது.

# “சொல்லச் சொன்னார்கள் சொன்னேன்”



சென்னை மடல்
-பகவான் சிங்-

ஒரு குடும்பச் சூழ்நிலையால் என் இனிய ஈழநாடு நண்பர்களைக் கடந்த ஞாயிறன்று சந்திக்க இயலாமல் போனதில் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். அதிலும் சில சுவாரஷ்யமான நிகழ்வுகளைப் பற்றிக் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள முடியவில்லையே என்கிற ஒரு வருத்தம். லண்டனில் வசிக்கும் எனது ஈழ நண்பர் ஒருவர் தொலைபேசியில் என்னை அழைத்தார். இருதரப்பு நலன் விசாரிப்புகளைத் தொடர்ந்து, அண்மையில், புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும் விரைவில்

வெளிவந்து சிங்களத் தளையிலிருந்து ஈழமக்களை விடுவிக்கத் தலைமை தாங்குவார் என்றும் பழ. நெடுமாறன் போட்டுள்ள வெடிகுண்டைப் பற்றிய அவரது கருத்தைக் கேட்டேன். சிரித்துவிட்டு, “வெடிகுண்டா? அது ஒரு தீபாவளி பட்டாசு கூட இல்லை. இங்கு சிலர் ஓரிரு நாட்களுக்கு வேடிக்கையாக அது குறித்துப் பேசி, பின்னர் மறந்தே போய்விட்டனர்.” என்று கூறிய அவர், ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு, “அதை நீங்கள் தீவிரமாக எடுத்துக்கொண்டீர்களா, பஹவான்? உங்கள் சிந்தனையை நீங்கள் வீணடிக்கிறீர்கள்” என்றார்.

1983இல் கறுப்பு ஜூலை கலவரத்தையடுத்து, இராமேஸ்வரம் கரைக்கு முதலில் அகதிகள் வந்திறங்கிய காலத்திலிருந்து நான் ஈழப் பிரச்னை குறித்துச் செய்தி சேகரித்து வந்தது என் நண்பருக்குத் தெரியும். 2009-இல் முள்ளிவாய்க்கால் ஏரியில் நடந்த பேரழிவுச் சம்பவம் வரை ஈழப் போர் குறித்த செய்திகளுக்காக அடிக்கடி நான் இலங்கைக்கு, குறிப்பாக போர் பாதிப்புப் பகுதிகளான வட, கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று வந்ததையும் அவர் அறிவார். புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இறுதி நாட்கள் மற்றும் தருணங்கள் பற்றி நான் எழுதிய செய்திகளையும் அவர் படித்துள்ளார். மதிப்பு மிக்க எனது ஈழநாடு வாசகர்களுக்கு இதைப்பற்றிய அனைத்து விவரங்களும் நன்றாகத் தெரியும் என்பதால், அதிகம் பேசி அவர்களின் நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. நெடுமாறன் மீண்டும் மீண்டும் இந்தப் பட்டத்தைப் பறக்கவிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டும் மக்கள் பெருமளவில் இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பது எனக்கு வருத்தமளிக்கிறது. இவரையும் இவர் கூறுவதையும் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் விடுவதே உசிதம் என்று எண்ணுகிறேன். பிரபாகரனுக்கு நெருக்கமாக இருந்த நெடுமாறனின் இந்தக் கூற்று, ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தவா அல்லது புலிகள் தலைவர் உயிருடன் இருப்பதான நம்பிக்கையை ஏற்படுத்தி, அதன் பயனாக, நிதி லாபமோ அரசியல் லாபமோ அடைவதற்காகச் சில வெளிப்புற சக்திகளின் முயற்சியா? என்று தமிழ்த் தொலைக்காட்சி சனல்களில் உரத்த விவாதங்கள் இடம் பெற்றன.

நெடுமாறனின் இந்த அறிவிப்பால், ஐரோப்பாவில் புலிகள் மீதான தடை விலக்கப்படவும் இலங்கையில் தமிழர் விரோதக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவும் வாய்ப்புகள் மங்கிவிட்டன என்று இலக்கியச் சாதனைகளுக்காகவும் நேர்மையான அரசியலுக்காகவும் அறியப்பட்ட ஒரு தமிழ்த் தேசியத் தலைவர் என்னிடம் கூறினார். பிராபாகரனின் அன்புச் சகோதரர்கள் என்று மார்தட்டிக் கொள்ளும் வைகோவும் சீமானும் நெடுமாறன் சொன்னதைப் பொய் என்று புறந்தள்ளியுள்ளார்கள்.

இந்த விவகாரத்தின் மீதான ஊடக விவாதங்கள், நேர்காணல்களில் பிரபல பத்திரிகையாளர் ரங்கராஜ் பாண்டேவின் நெடுமாறனுடனான நேர்காணல் மிகச் சிறப்பாக இருந்தது. தனது நேர்காணலில் பாண்டே நெடுமாறனிடம் சில தேடல் மிகுந்த, சூடான கேள்விகளைக் கேட்டார் “அந்தப் போரில் சுமார் 1 லட்சம் பேர் இறந்தார்கள் என்று நமக்குத் தெரியும். அவர்களை இறக்கவிட்டு, பிரபாகரன் தப்பிச் சென்றாரா?, தனது மகன் பாலச்சந்திரனை உயிரிழக்கவிட்டு அவர் தப்பித்தாரா? அவர் எந்த வழியில் தப்பித்தார், சாலை வழியா, ஆகாய மார்க்கமா, கடல் மார்க்கமா?” போன்ற கேள்விகளுக்கு நெடுமாறன் பதில்கள் மழுப்பலாகவே இருந்தன. “சொல்லச் சொன்னார்கள், சொன்னேன்” என்ற தலைப்பில் யூ-டியூபில் அந்த வீடியோ

இருக்கிறது. இன்னும் பார்க்கவில்லை என்றால், எனது ஈழநாடு வாசகர்களை அதைப் பார்க்குமாறு வேண்டுகிறேன். அதைப் பார்த்து, நமது சிறு லாபங்களுக்காக இன்னும் பிரபாகரனின் பெயரைப் பயன்படுத்தலாமா என்று சிந்திக்கவேண்டும்.

நான் பாண்டேவை நீண்ட காலமாக அறிவேன். இன்றைய சூழலில், மிகச் சிறந்த நேர்மையான பத்திரிகையாளர்களில் ஒருவராக நான் அவரைப் பார்க்கிறேன். நேர்மை, கண்ணியம், தேசப்பற்று, சமூக நலனில் அக்கறை ஆகியவை இல்லாமல்




இருள் மேகம் சூழ்ந்துள்ள ஊடக உலகின் விடிவெள்ளியாக இவரைப்போன்றவர் இன்னும் அதிகரிக்க வேண்டும் என்பது தான் எனது ஆசை. நெடுமாறனுடனான பாண்டேவின் அந்த யூடியூப் நேர்காணல் வீடியோவில் வந்த பின்னூட்டங்களில் பலர் எழுப்பியுள்ள ஒரு கேள்வி, 13 வருடங்களாகக் கண்டுபிடிக்கப்படாமல் ஒரு தலைவர் எப்படி மறைந்து வாழ முடியும் என்பதும் ஈழத் தமிழர்கள் இவ்வளவு பிரச்சனைகளைச் சந்தித்த போது அவரால் எப்படி ஒதுங்கி, ஒளிந்து இருக்க முடிந்தது என்பதும் தான். போர்ச் சூழலிலிருந்து தப்பிச் செல்ல எப்படி முடிந்தது என்று ஒருவர் கேட்டிருக்கிறார். பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் பிஸ்கட் சாப்பிடும் புகைப்படத்தையும் நெஞ்சில் குண்டு பாய்ந்து சடலமாக கிடந்த புகைப்படத்தையும் நம்மால் மறக்க முடியாது. தயா மாஸ்டர் மற்றும் கருணாவால் பிரபாகரனின் உடலும் அடையாளம் காட்டப்பட்டது. கருணா மற்றும் தயா மாஸ்டரின் இந்த உறுதிப்படுத்தல் அரசின் அழுத்தத்துக்கு உட்பட்டது அல்லது அரசின் பரிசுக்குப் பதிலுதவியாகச் செய்யப்பட்டது என்று நெடுமாறன் போன்ற புலிகள் ஆதரவாளர்கள் புறந்தள்ளலாம்.

2021 ஒக்ரோபரில், கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்தையொட்டிய விழிஞ்சம் கடற்கரையில், ஒரு படகிலிருந்து மூவாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள போதை பொருட்களும் 5 ஏ.கே 47 ரகத் துப்பாக்கிகளும் ஏராளமான வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதையடுத்து, புலிகளின் முன்னாள் உளவாளி சபேசன் என்கிற சத்குணம் தமிழகக் காவல் துறையால் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. அந்தப் படகு இலங்கையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. விசாரணையின்போது, புளிகளின் நிதிக்காகவே போதைப் பொருள் கடத்தப்பட்டதாகக் கூறியுள்ளான். நெடுமாறனின் அறிவிப்பில் சற்று உண்மை இருக்கலாம் என்பதற்கு ஊடகங்கள் முன்வைக்கும் மற்றும் ஒரு ஆதாரம், இலங்கையிலிருந்து சென்னை வந்த, கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் 2022 ஜனவரியில் சென்னை விமான நிலையத்தில் கைது

செய்யப்பட்ட நிகழ்வு. மும்பையில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஒரு செயல்படாத கணக்கில் உள்ள பெருந்தொகையை எடுக்கவே, தான், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் செயல்படும் புலிகள் அமைப்பினரால் அனுப்பப்பட்டதாகக் கியூ பிராஞ்ச் காவல் துறையிடம் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த இரு கைதுகளையும் புலிகளின் தொடர்புகளுடன் இணைத்து இந்திய உளவுத் துறை விசாரித்து வருகிறது. உலகெங்கிலும் பல வங்கிகளில் குவிந்து கிடக்கும் பணத்தை எடுக்க ஐரோப்பாவிலிருந்து செயல்படும் புலிகள் இயக்கச் செயல்பாட்டாளர்கள் முயன்று வருவதாக இந்த அமைப்புகள் சந்தேகிக்கின்றன.

இவர்களில் சில, ஏதோ ஒரு விதத்தில் புலிகள் இயக்கத்தை உயிர்ப்பித்து, ராஜரீக முறைகள் மூலமாகவும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மூலமாகவும் அரசிடம் செல்வாக்கும் புலிகள் ஆதரவு நிலைப்பாடும் கொண்ட வெளிநாடு வாழ் ஈழத்

தமிழர்களின் துணையுடன் மீண்டும் செயல்பட முயற்சிக்கின்றன என்பது ஒரு பக்கக் கருத்து. கடந்த இரு ஆண்டுகளாக நடந்த போதைப் பொருள் மற்றும் பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்கள் கடத்தல் உள்ளிட்ட புலிகளின் செயல்கள், பாகிஸ்தானிலிருக்கும் போதை மருந்துக் கடத்தல் கூட்டம் மற்றும் தெற்கு இலங்கையில் உள்ள அவர்களது சகாக்களுடன் தொடர்புடையன என்ற வலுவான ஐயமும் நிலவுகிறது. புலிகள் இயக்கம் வலுவாகச் செயல்பட்ட காலத்திலிருந்தே இது போன்ற நடவடிக்கை களில் பழக்கம் இருக்கும் முன்னாள் புலிகள் இயக்கத்தினரை இந்தப் போதை மருந்துக் கடத்தல் கூட்டம் பயன்படுத்தி வரலாம் என்பது மற்றொரு கருத்து.

இந்தக் கைதுகளும் கையகப்படுத்தலும் பிரபாகரன் உயிரோடிருப்பதாகவும் சரியான நேரத்தில் வெளிப்படுவார் என்றும் நெடுமாறன் கூறும் கூற்றுக்கு வலு சேர்ப்பதாகக் கொள்ள முடியாது. அதே நேரத்தில், நெடுமாறனது கூற்று உண்மையாகி, தமிழ் ஈழப் போராட்டத்துக்குப் புலிகள் தலைவர் தலைமை கோரினால், தற்போதைய தமிழ்த் தலைவர்கள் பலர் காணாமல் போய் விடுவார்கள் கடலில் நீந்தி, கனடா, இங்கிலாந்து, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற பாதுகாப்பான தூரதேசங்களுக்குப் போய் விடுவார்கள்!

புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் இருந்த போது, ஈழக் குழுக்கள் சகோதர யுத்தத்தில் ஈடுபட்டு, ஒருவரை ஒருவர் சுட்டு மடிந்தார்கள். இப்போது, ஈழத் தமிழ்த் தலைவர்களிடம் துப்பாக்கிகள் இல்லை. அதனால், தங்கள் கூரான நாக்கையே

ஆயுதமாக்கி ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்துகின்றனர். நெடுமாறன் கூற்று நிஜமானால், நாக்குக்குப் பதிலாக மீண்டும் துப்பாக்கி குண்டுகளே ஆயுதங்களாகும். எல்லாமே அந்தக் கந்தனின் கருணை, சித்தம். மார்ச் 9 அன்று நடைபெறவிருந்த உள்ளாட்சி சபைத் தேர்தலைத் தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்திருப்பதாக வந்த அண்மைச் செய்தியால் வருத்தமும் ஏமாற்றமும் அடைந்திருக்கிறீர்களா? தேர்தலுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிக்கல்களைத் தொடர்ந்து இந்த ஒத்திவைப்பு.

தற்போதுள்ள பொருளாதாரச் சூழலில், கடனில் தத்தளிக்கும் இலங்கையில் தேர்தல் நடத்துவது உசிதமல்ல என்று ஏற்கெனவே எனது ஈழநாடு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். ஜனநாயகத்தையும் ஜனநாயக அமைப்புகளையும் மீட்டெடுத்து வலுப்படுத்த இந்தத் தேர்தல் உதவும் என்று வாதாடலாம். ஆனால், இந்த ஜனநாயக அமைப்புகளின் நிர்வாகம் பெருமளவு கொழும்புவால் கட்டுப்படுத்தப்படும் நிலையில், இவற்றை மீட்பதில் என்ன பொருள் இருக்க முடியும் என்பது தான் என் கேள்வி. மேலும், அரசியல் கூட்டணிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரிவுகளும் உட்பிரிவுகளும் நண்பர்களுக்கிடையிலான கசப்புணர்ச்சியும் இந்தத் தேர்தலால் இன்னும் தீவிரமடைந்துள்ளன. இது ஈழத் தமிழர்களின் பிம்பத்தை சர்வதேச அரங்கில் இன்னும் சிறுமைப்படுத்தியுள்ளது.

இந்தத் தேர்தலின் மூலம், நமது ஒற்றுமையின் பலத்தை நாம் காட்டியிருக்கலாம். ஆனால், நம்மிடையே உள்ள வெறுப்பு மனோபாவத்தால், நாம் பிரிவினையைப் பெரிது படுத்தியுள்ளோம். சமூக-அரசியல் பலத்தை நம் தமிழினச் சகோதரர்களுடன்

பகிர்ந்து கொள்ளவே நாம் தயாராக இல்லாதபோது, சிங்களர்கள் நம்மை மதித்து, சமமாக நடத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்? நாம் பிளவுபட்ட சமூகமாகவே நம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், சர்வதேச வல்லரசுகள் நமக்குப் பொருளாதார உதவிகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்?

தேர்தலுக்குப் பிறகு மீண்டும் தான் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இணையவிருப்பதாகத் தன்னிடம் சி.வி. விக்கினேஸ்வரன் கூறியிருப்பதாக ஒரு ஈழ நண்பர் என்னிடம் கூறினார். இது வெறும் சந்தர்ப்பவாதம் என்றும் இதை ஊக்குவிக்கக்கூடாது என்றும் நான் அவரிடம் கூறினேன். சம்பந்தனுக்குப் பிறகு யார் தலைவர் என்ற போட்டியில் சுமந்திரனுக்குப் போட்டியாளராகத் தன்னை நிறுத்தி நிரூபித்துக் கொள்ள இந்தத் தேர்தலைத் தன்னிச்சையாகச் சந்தித்து மக்களிடம் தன் செல்வாக்கைக் காட்டுவதற்கு விக்கினேஸ்வரன் நினைத்திருக்கலாம். ஒவ்வொருவரும் தங்களுக்காகவே சிந்திக்கிறார்கள். மக்கள் நலனை யாரும் கருதவில்லை.

இந்தத் தலைவர்கள் ஈழத் தமிழர்களின் இணைந்த சக்தியை வெளிப்படுத்துவதை விட்டு, சம்பந்தரின் வாரிசாகத் தங்களது சக்தியை நிருபிக்கவே விரும்புகிறார்கள். ஈழத் தமிழர்கள் பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் இந்தச்

சுயநலப் போக்கு நமது நிலையைக் கீழிறக்கத் தான் போகிறது. இப்போதைக்கு விடை பெறுகிறேன் நன்றி, வணக்கம்.

●

## உள்ளூராட்சி தேர்தல்களுக்கு எதிரான அரசாங்கத்தின் கெடுபிடிகள்

# தேர்தல் ஆணைக்குழு எதிர்நோக்கும் சவால்கள்

## ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தின் இலட்சணத்துக்கு சான்று



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

தேர்தல் ஒன்றை அதுவும் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் செய்வதைப் போன்ற காரியங்களை உலகின் வேறு எந்தவொரு நாட்டின் அரசாங்கமும் செய்திருக்காது. ஜனாதிபதியின் முழுமையான தூண்டுதலில் அரசாங்க இயந்திரத்தின் இடையறாத கெடுபிடிகளுக்கு முகங்கொடுக்கமுடியாத நிலையில், ஏற்கெனவே அறிவித்த பிரகாரம் மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதில்லை என்றும் புதிய திகதி மார்ச் 3 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் இறுதியில் அறிவிப்பதை தவிர தேர்தல் ஆணைக்குழுவுக்கு வேறு வழியிருக்கவில்லை.

அந்த தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நிதியை கிடைக்கச்செய்வதில் தலையிட்டு திறைசேரியை வலியுறுத்துமாறு பாராளுமன்ற சபாநாயகரிடம் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்தது. புதிய திகதி அறிவிப்புக்கு பின்னர் அரசாங்கத்தின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது முக்கியமான கேள்வி.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க முடியுமே தவிர தேர்தல் போன்ற செயன்முறைகளுக்கு நிதியை ஒதுக்கக்கூடிய நிலைமை இல்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். ஆனால், பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி தேர்தல்களை ஒத்திவைக்கும் இந்த அணுகுமுறை தவறான முன்னுதாரணத்துக்கு வழிவகுத்துவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஒன்பது தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக சர்வஜன வாக்குரிமையை அனுபவிக்கும் இலங்கையில் முன்னொருபோதும் இவ்வாறு நடந்ததில்லை.

இலங்கையின் 75 வது சுதந்திரதின கொண்டாட்டங்களுக்கு சுமார் 20 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட்டபோது படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அத்தகைய செலவினம் அவசியமா என்ற கேள்வி எழுந்தது. அதற்கு பதிலளித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க சுதந்திரதினத்தை கொண்டாடுவதற்கு கூட வக்கில்லாதவர்களாக இலங்கையர்கள் இருக்கிறார்களே என்று உலகம் நினைத்துவிடக்கூடாது என்பதற்காக செலவினத்தையும் பொருட்படுத்தாமல் கொண்டாட்டங்களை நடத்தவேண்டியிருக்கிறது என்று கூறினார்.

அதேபோன்றே பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களின் வாக்குரிமையை மதித்து ஜனநாயக செயன்முறைகளை கைவிடாத ஒரு நாடு என்று இலங்கையை உலகிற்கு காண்பிப்பதற்கு உரிய காலத்தில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் ஆணைக்குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருக்கமுடியும். ஆனால் அது விடயத்தில் எமது நாட்டைப் பற்றி உலகம் எந்தவிதமாக நினைத்தாலும் அரசாங்கம் கவலைப்படவில்லைப் போலும்.

தொடக்கத்தில் இருந்தே உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முட்டுக்கட்டைகளை போடும் அணுகுமுறைகளை அரசாங்கம் கடைப்பிடித்துவந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது மக்கள் மத்தியில் படுமோசமாக செல்வாக்கை இழந்த நிலையில் அண்மைய எதிர்காலத்தில் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பதில் அதற்கு சிக்கல் இருப்பது வெளிப்படையானது.

கடந்த வருட முற்பகுதியில் இருந்தே பொருளாதார நெருக்கடி தீவிர மடையத் தொடங்கிய போதிலும், ஒரு வருடத்துக்கு முன்னர் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு நிதியில்லை என்று அரசாங்கம் குறிப்பாக தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே கூறத்தொடங்கியது கவனிக்கத்தக்கது.




ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சியும் அவரின் அரசாங்கத்துக்கு பாராளுமன்ற ஆதரவை வழங்கிவரும் ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் மக்கள் ஆதரவைப் பொறுத்தவரை படுமோசமான நிலையில் இருக்கின்றன. அதேவேளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினதும் மக்கள் செல்வாக்கு பெருமளவுக்கு அதிகரித்திருப்பதாகவும் அண்மைய கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டால் அது அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் மீதான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக அமைந்து ஏற்கெனவே பதவியில் இருப்பதற்கான நியாயப்பாட்டைப் பொறுத்தவரை, பெரும் சவாலை எதிர்நோக்கும் அரசாங்கத்தின் நெருக்கடிகள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

அதேவேளை, எதிரணியின் மற்றைய கட்சிகள் சகலதையும் விட மக்கள் ஆதரவில் பெருமளவுக்கு முன்னணியில் நிற்பதாக நம்பப்படும் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் அவற்றின் செல்வாக்கை நிரூபிப்பதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளூராட்சி தேர்தல்களை கருதுகின்றன. அந்த தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை அவை கடுமையாக எதிர்த்து நிற்பதற்கு அதுவும் ஒரு முக்கிய காரணம்.

அந்த தேர்தல்களில் அரசாங்கம் காணக்கூடிய படுதோல்வி இறுதியில் பாராளுமன்றத்தை கலைத்து புதிய பொதுத்தேர்தல் ஒன்றுக்கு போகுமாறு எதிரணியிடம் இருந்து கோரிக்கை கிளம்புவதற்கு வழிவகுக்கும். தற்போதைய பாராளுமன்றத்தின் ஐந்து வருட பதவிக் காலத்தில் இரண்டரை வருடங்கள் கடந்த வாரம் நிறைவடைந்து அதை எந்த நேரத்திலும் கலைக்கக்கூடிய அரசியலமைப்பு ரீதியான அதிகாரத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க பெற்றுவிட்ட நிலையில் பொதுத் தேர்தலுக்கான கோரிக்கையை நீண்டகாலத்துக்கு அலட்சியம் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுவிடலாம்.

இவை எல்லாவற்றையும் மனதிற்கொண்டே அனேகமாக இவ்வருடத்திற்குள் எந்த தேர்தலும் நடத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற தொனியில் ஜனாதிபதி அண்மையில் கருத்து வெளியிட்டார். அவரைப் பொறுத்தவரை, பொருளாதார மீட்சிக்கு பிறகு மக்கள் தங்களது வாக்குரிமையை பயன்படுத்தி புதிய ஆட்சியாளர்களை தெரிவுசெய்யலாம் என்பதே நிலைப்பாடாக இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ரோட்டரி கழக வைபவமொன்றில் ஆற்றிய உரையில் அவர் அதை வெளிப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நிகழ்த்திய உரை உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற அதன் நிலைப்பாட்டுக்கு அரசாங்கம் கூறிவந்த காரணங்கள் எல்லாவற்றுக்கும் அப்பால் இருக்கின்ற அப்பட்டமான அரசியல் நோக்கங்களை அம்பலப்படுத்தி நிற்கிறது.

தேர்தல் ஆணைக்குழு அறிவித்ததன் பிரகாரம் தனது ஐக்கிய தேசிய கட்சியும் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்கான நியமனப்பத்திரங்களை சமர்ப்பித்த பிறகு இப்போது ஜனதிபதி, தேர்தலுக்கான திகதி அறிவிப்பின் சட்டபூர்வத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார். அவரின் அன்றைய உரை ஜனநாயக செயன்முறைகளை மதிக்கின்ற ஒரு தாராளாவாத ஜனநாயகவாதி என்ற முன்னைய நிலையில் இருந்து அதிகாரத்தை தக்கவைப்பதற்காக தரந்தாழ்ந்த அரசியலையும் முன்னெடுப்பதற்கு தயங்காத ஒருவர் என்ற நிலைக்கு அவர் வந்துவிட்டதை வெளிச்சம்போட்டுக் காட்டியது.

'உள்ளூராட்சி தேர்தல்களுக்கான திகதி சட்டரீதியாக அறிவிக்கப்படவில்லை. அதனால் அந்த தேர்தல்களை ஒத்திவைப்பது என்ற கேள்வி எழவில்லை. தேர்தல் திகதியை தீர்மானித்த ஆணைக்குழுவின் கூட்டத்தில் சட்டரீதியாக பிரசன்னமாக இருக்கவேண்டிய குறைந்த பட்ச எண்ணிக்கையில் உறுப்பினர்கள் பிரசன்னமாகியிருக்கவில்லை. மூன்று உறுப்பினர்கள் இருக்கவேண்டிய இடத்தில் ஆணைக்குழுவின் தலைவரும் இன்னொரு உறுப்பினருமே இருந்தார்கள்.

'ஏனைய மூன்று உறுப்பினர்களினதும் இணக்கத்தை இணைய காணொளி மூலம் பெற்றதாக ஆணைக்குழுவின் தலைவர் கூறுகிறார். அவர்களை எவராவது கேட்டால் அதை ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அதை நிரூபிக்க என்னிடம் சான்று உள்ளது.

'தேர்தல் செயன்முறைகளுக்கான நிதியும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் திறைசேரியிடம் கோரப்படவில்லை. ஆணைக்குழுவின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் ஆஜரானார். அவர் அரசியல் சார்புடையவர் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் என்னிடம் கூறினார்கள். அவரின் உதவியை ஆணைக்குழு நாடுவது ஐக்கிய மக்கள் சக்தியையோ அல்லது தேசிய மக்கள் சக்தியையோ சேர்ந்த ஒரு சட்டத்தரணியின் உதவியை நாடுவதை விட வித்தியா

'அரசியலமைப்புக்கான 21 வது திருத்தம் பாராளுமன்றத்தில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட பிறகு தேர்தல் ஆணைக்குழு ஒழிக்கப்பட்டுவிட்டது. என்றாலும் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை பழைய தலைவரும் உறுப்பினர்களும் இயங்கலாம். தற்போது இருப்பது ஒரு காபந்து தேர்தல் ஆணைக்குழுவே.

'உள்ளூராட்சி தேர்தல்களுக்காக 2023 பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டாலும் கூட ஒரே தடவையில் அதை விடுவிக்கமுடியாது. ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிப்பதற்கென்று விசேடமாக திகதிகள் எங்கும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு விடுவிப்பதாக இருந்தாலும் கூட எதிர்பார்க்கப்படும் வருவாய் கிடைக்கப்பெறாமல் அதை செய்யமுடியாது" என்று விக்கிரமசிங்க சபையில் கூறினார்.

அது போக, வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் பூர்த்தியாகி தேர்தல்களும் முடிவடைந்த பின்னரே அரசாங்க அச்சகத்துக்கு தேர்தல் ஆணைக்குழு கொடுப்பனவுகளை செய்வதே இதுகாலவரையான வழமையாக இருந்துவந்திருக்கும் நிலையில் இத்தடவை மாத்திரம் அரசாங்க அச்சகர் முன்கூட்டியே கொடுப்பனவை செய்யாத பட்சத்தில் வாக்குச் சீட்டுக்களை அச்சிட முடியாது என்று ஆணைக்குழுவுக்கு அறிவித்ததும் கவனிக்கத்தக்கது.

உள்ளூராட்சி தேர்தல்களுக்காக ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் நிதியை வழங்கமுடியாத நிலை இருக்கிறது என்று திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரடியாக கூறியது மாத்திரமல்ல அதை உயர்நீதிமன்றத்துக்கும் சத்தியக்கடதாசி மூலம் அறிவித்தார். அதேவேளை இதுவரையான உள்ளூராட்சி தேர்தல் பணிகளுக்காக ஆணைக்குழு 50 கோடி ரூபாவை செலவிட அனுமதித்தது ஏன் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. அந்த பண விரயத்துக்கு யார் பொறுப்புக் கூறுவது?

அரசியலமைப்பு ரீதியாக உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்துவதற்கு ஆணைக்குழு அதன் அதிகாரங்களுக்கு உட்பட்ட முறையில் முன்னெடுத்த நடவடிக்கைகளை எல்லாம் அரசாங்கம் சகல வழியிலுமான கெடுபிடிகளின் ஊடாக குழப்பியடித்துவிட்டது. இது ஜனாதிபதியும் அரசாங்கமும் மகிழ்ச்சியடையக்கூடிய விடயம் அல்ல. அதன் விளைவுகளுக்கு அவர்கள் முகங்கொடுத்தேயாக வேண்டும்.

ஜனாதிபதியின் மட்டுமீறிய அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்காக சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பதற்காகவே அரசியலமைப்புக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதற்காக பெருமைப்படுகின்ற ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு செய்திருக்கும் குந்தகம் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தின் இலட்சணத்தை நாட்டுக்கும் மக்களுக்கும் வெளிச்சம் போட்டுகாட்டுகிறது. ஆட்சியாளர்களின் விருப்பு வெறுப்புக்கு இசைவாக செயற்படாவிட்டால் ஏனைய ஆணைக்குழுக்களுக்கும் இதே கதிதான் காத்திருக்கிறது.

ஈழநாடு



# தேர்தலுக்கு நிதி இல்லை! தமிழருக்கு நீதி இல்லை! ரணிலிடம் நேர்மை இல்லை!

பனங்காட்டான்

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல என்ற பாடலுடன் இந்த வாரத்தை ஆரம்பிப்பது பொருத்தம் போலத் தெரிகிறது.

13வது திருத்தத்துக்கு ஏற்பட்டுள்ள பரிதாப நிலை, உள்ளூராட்சித் தேர்தல் அகால மரணமடைந்திருப்பது, சுமந்திரனின் தமிழரசுக் கட்சி முஸ்லிம் காங்கிரஸிடம் அடமானத்துக்குள் சென்றிருப்பது, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விளாசும் ஏகவசன சண்டித்தனம், எதிர்க்கட்சிகளுக்குள் புகுந்து அவற்றைச் சீர்குலைக்கும் அட்டகாசத்தின் அபாயம்.....

யானைக்கு மதம் பிடித்தால் என்னென்னவெல்லாம் நடக்குமோ அவையெல்லாம் தாராளமாக நடக்கின்றன. இவைகளைக் காண கண்கள் ஆயிரம் வேண்டும் என்பதுபோல, கேட்பதுக்கும் ஆயிரம் செவிகள் தேவைப்படுகிறது.

முழுமையாக 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்று சொன்னால், முழுமையாக அதனை இல்லாமல் செய்வது என்றொரு அர்த்தம் உண்டென்பது இப்போது தெரிய வந்துள்ளது. 13 பிளஸ் என்று சொல்லி வந்த மகிந்த ராஜபக்ச 13வது திருத்தச்சட்டம் தேவையில்லாத ஒன்று என்றவாறு சொல்லிவிட்டாரென்றால், மகாநாயக்கர்களின் கருத்து எவ்வளவு தூரம் அவரால் உள்வாங்கப்பட்டுள்ளதென்பதை புரிந்து கொள்ளலாம்.

இனி, ரணிலுக்கு வேலை சுலபமாகிவிடும். இதற்காகத்தான் 13ம் திருத்தத்தை எவ்வாறு நீக்கலாம் என்ற வழிமுறைகளையும் அவரே பகிரங்கமாகக் கூறியிருந்தார். 22ம் திருத்தத்தைக் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதனூடாக 13ஐ நீக்கலாமென்ற அவரது முன்மொழிவை சிலவேளை மகிந்தவின் பொதுஜன பெரமுன கூட நிறைவேற்றலாம். அதற்கான கதவு திறக்கப்பட்டுவிட்டது.

இப்போது முக்கிய சமாசாரமாக இருப்பது மார்ச் 9ம் திகதி நடைபெறுமென கூறப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல். நடக்கும், நடக்க விடப்படுமா, நடக்காது, முடிந்தால் நடத்திப் பார்க்கட்டும் என்ற நான்குமுனை பட்டி(யள்) மன்றம் முடிவுக்கு வந்துவிட்டதுபோல் தெரிகிறது. இதற்கும் இரண்டு காரணிகள் காட்டப்பட்டுள்ளன.

போதிய நிதி ஒதுக்கப்படாததால் தேர்தலை நடத்த முடியாதுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவ தெரிவித்துள்ளார். மறுதரப்பில், அறிவிக்கப்படாத தேர்தலை ஒத்தி வைக்கவோ, ரத்துச் செய்யவோ எதற்காக அறிவிக்க வேண்டுமென்ற பாணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் எதனைக் கூறினாலும் அவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத பாதுகாப்பு இருக்கிறது என்ற காரணத்தினால், நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத ஜனாதிபதி ரணில் இப்படிச் சொன்னது அனைவரையும் நாடளாவிய ரீதியில் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது.

தேர்தல் ஆணைக்குழு என்பது சுயாதீனமாக இயங்கும் சட்டபூர்வமான ஓர் அரசாங்க அமைப்பு. சகல தேர்தல்களையும் நடத்தும் அதிகாரங்களைக் கொண்ட இந்த அமைப்பு காணாமல் போனோர் அலுவலகம் போன்ற ஏமாற்று நடவடிக்கைக்குரிய ஒன்றல்ல. இதன் உறுப்பினர்கள் சட்டரீதியாக இயங்கும் உரிமை பெற்றவர்கள். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அதிகாரபூர்வமாக அறிவித்து, வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தி, வேட்புமனுக்கள் தாக்கல் செய்து, தேர்தலுக்கான திகதியும் அறிவித்து, தேர்தலுக்கு எல்லாம் ரெடி என்ற தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் நீதிமன்றத்தில் அறிவித்த பின்னர்.....



நாட்டின் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி விட்டேந்தியாக, 'தேர்தலுக்கு இதுவரை அரசாங்கம் அறிவிக்கவில்லை" என்று நாடாளுமன்றத்தில் கூறுவாரென்றால், இவர் சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார் என்று எதிர்க்கட்சிகள் கூறுவதில் தவறு காண முடியாது. அதேசமயம், ரணில் ஜனாதிபதி என்ற வகையில் இவ்வாறு நடந்து கொள்வது அவரைப் பொறுத்தளவில் சரியாகவும் இருக்கலாம்.

சர்வ என்பதன் அர்த்தம் சகலதும் என்பது. சர்வூஅதிகாரம் என்பது சகல அதிகாரங்களையும் கொண்டவர் என்ற அர்த்தம் கொள்கிறது. 1978ல் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்து தம்மை சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதியாக்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 'ஆணைப் பெண்ணாக்குவதையும், பெண்ணை ஆணாக்குவதையும் தவிர மற்றெல்லாவற்றையும் தம்மால் செய்ய முடியும்" என்று சொன்னதை, ரணில் 45 வருடங்களுக்குப் பின்னர் சகல நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற வகையில் செய்கிறார் என்றால் அதில் தவறு காணமுடியாது.

இவ்வாறு ஜனாதிபதி கூறிய பின்னரும், உள்ளூராட்சித் தேர்தலை எப்போது நடத்துவது என்று மார்ச் மாதம் 3ம் திகதி தீர்மானிக்கப்படுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளது வேடிக்கை விநோதமானது. அரசியமைப்பின் பிரகாரம் புதிய தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்கும் காலம் நெருங்குகிறது. நிமால் புஞ்சிஹேம தலைமையிலான தேர்தல் ஆணைக்குழுவின் ஆயுட்கால நாட்கள் எண்ணப்படுகின்றன. இதற்கிடையில் ரணிலுக்கும் நிமாலுக்குமிடையில் கயிறிழுப்பு நடைபெறுகிறது. இதில் வெல்லப் போவது யாரென்று ஸ்ரீமான் பொதுஜனங்களுக்கு நன்கு தெரியும்.

உள்ளூராட்சித் தேர்தல் இப்போதைக்கு இடம்பெறாது என்பது ஓரளவுக்கு உறுதியாகியுள்ளது. எண்ணாயிரம் வரையான உறுப்பினர்களை பொதுமக்கள் தங்கள் வாக்குகளால் தெரிவு செய்யும் அரிய வாய்ப்பு காணாமலாக்கப்படுகிறது.

> **நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து எச்சரிக்கும் பாணியில் அதிகாரமிடும் ஜனாதிபதி ரணிலின் அரைவருடம் தாண்டிய சாதனைகள் என்ன? எதனைக் கேட்டாலும் இல்லை இல்லை என்றே கூறிக்கொண்டு, தனது கதிரையை எவ்வாறு மீளவும் கைப்பற்றுவது என்பதையே கனவிலும் நினைவிலும் கொண்டு இயங்குவதுதான் இவரின் ஒரேயொரு சாதனை.**

தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் மாநகரசபைகளும், பிரதேச சபைகளும் விசேட ஆணையாளர் நிர்வாகத்தில் போகப்போகின்றன. இதனால் 8,000 வரையானவர்களின் சம்பளம் மீதமாகி, அரசாங்க உண்டியலுக்குப் போகப்போகிறது. மாகாண ஆளுனர்களுக்கு நல் வாய்ப்புக் காலம் தெரிகிறது.

தேர்தல் நிறுத்தப்படுவதால் பல நெருக்கடிகள் உருவாகும். தேர்தலில் பேட்டியிடவென மூன்று மாத சம்பள மற்ற லீவு எடுத்த அரசாங்க ஊழியர்களின் நிலைமை என்ன? தேர்தலின் ஆரம்ப வேலைகளுக்கென இதுவரை இறைக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாவுக்கு யார் பொறுப்பு? தேர்தலுக்குப் போட்டியிட தாக்கலான 87,200 வேட்பாளர்களின் கட்டுப்பணத்தின் நிலை என்ன? மீளளிக்கப்படுமா? குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் நடைபெறாது போகுமானால் கட்டுப்பணம் இழக்கப்படுமென அஞ்சப்படுகிறது. செத்தும் கொடுத்தான் சீதக்காதி போன்று வேட்பார்கள் அரசாங்கத்தின் நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வார்களா?

ஏற்கனவே தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்ட வேட்பாளர்களும் அவர்களின் தொண்டர்களும் ஆங்காங்கே சின்னச் சின்ன அறகலயவை ஆரம்பித்துள்ளனர். தேர்தல் நடத்தாவிட்டால் வீதிகளில் இறங்குவோமென முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறைகூவியுள்ளார். ரணில் ஜனாதிபதியான நாளிலிருந்து இதனையே தாம் செய்து வருகிறேன் என்பது அவருக்குத் தெரியவில்லையா? தேர்தலை நிறுத்தக்கூடாது - நடத்த வேண்டுமென்று தாம் விரும்புவதாக மகிந்த ராஜபக்சவும் தமது பங்குக்கு மென்போக்கில் கூறியுள்ளார்.

தமிழரசு எம்.பி. சுமந்திரன் கொஞ்சம் மேலேறி - சட்டத்தின் ஆட்சியை, குறைத்து மதிப்புக்குட்படுத்தும் எந்தவொரு முயற்சிக்கும் இடமளிக்க முடியாது என்று ரணிலை எச்சரித்துள்ளார். நல்ல விடயம். ஆனால் ஒரு சந்தேகம். தற்போது ரணிலின் அரசாட்சி சட்டத்துக்கு உட்பட்டு இடம்பெறுகிறது என்று சுமந்திரன் எவ்வாறு கூற முடியும்? ரணில் யாழ்ப்பாணம் சென்ற வேளைகளில், முக்கியமாக சுதந்திர தினம் கொண்டாடப் போனவேளை அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவித்த மாணவர்களையும் பொதுமக்களையும் படையினர் நடத்திய அராஜக தாக்குதல் சட்டத்துக்கு உட்பட்டது என்று சுமந்திரன் கருதுகிறாரா?

நல்லாட்சிக் காலத்தில் ரணிலுக்கு வக்காலத்து வாங்கிய பழக்கதோசத்தில் இன்னமும் அதே வசனங்களை சுமந்தினர் பிதற்றுவதை காணமுடிகிறது.

இவை ஒருபுறம் போகட்டும். தேர்தல்கள் அடுத்த வருடம் எனவும், அப்போது மக்கள் தாம் விரும்பும் ஆட்சியை ஏற்படுத்தலாமென்றும் ரணில் விக்கிரமசிங்க கூறியதன் அர்த்தம் என்ன? மொத்தம் நான்கு தேர்தல்கள் - உள்ளூராட்சித் தேர்தல், மாகாணசபைகளின் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவை வரிசையில் காத்திருக்கின்றன. முதலிரண்டு தேர்தல்களும் எப்போது என்பது ரணிலைத் தவிர வேறெவருக்கும் தெரியாது.

அரசியலமைப்பின் பிரகாரம் பெப்ரவரி 20ம் திகதி நாடாளுமன்றம் இரண்டரை ஆண்டுகளை பூர்த்தி செய்து விட்டதால் அதனை எந்த வேளையிலும் கலைக்கும் அதிகாரம் ரணிலின் கைக்கு வந்துவிட்டது. அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி தமது கதிரையை மீண்டும் கைப்பற்றும் நோக்கத்தில் ரணில் இருக்கிறார். எனவே மற்றைய தேர்தல்கள் பற்றிச் சிந்திப்பவர்கள், அதனை ஜனாதிபதித் தேர்தல்வரை ஒத்தி வைப்பதே புத்திசாலித்தனமானது.

இந்தப் பின்னணிகளில் அரையாண்டைக் கடந்துவிட்ட ரணிலின் ஜனாதிபதி ஆட்சியின் சாதனைகளை சுருங்கக் கூறுமாறு கேட்டால் இப்படித்தான் கூற முடியும்! தேர்தலுக்கு நிதி இல்லை! தமிழருக்கு நீதி இல்லை! ரணிலிடம் நேர்மை இல்லை! அவ்வளவுதான்.

ஈழநாடு



# தேசியமென்னும் வெற்றுக் கூடு அன்றும் இன்றும்?



யதீந்திரா



அரசியலில் ஒரு கூற்றுண்டு. அதாவது, பேருந்தை தவறவிடுதல். வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது, அதனை கெட்டியாக பற்றிக்கொள்ள வேண்டுமென்பதுதான் இந்தக் கூற்றின் பொருளாகும். தமிழில் இதனை காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுதல் எனலாம். ஒரு மேற்குலக நாடொன்றின், தூதுவருடனான கலந்துரையாடலொன்றின் போது, இதனை நான் குறிப்பிட்டேன், அவர் திரும்பக் கூறினார், நீங்கள் பேருந்தை தவறவிட்டது மட்டுமல்ல, பேருந்திலிருந்து பாய்ந்துமிருக்கின்றீர்கள்.

திபெத் ஆண்மீகத் தலைவர் தலாய் லாமா கூறுவார். அதிர்ஷ்ட தேவதை எப்போதாவதுதான் கதவை தட்டுவார். அவர் கதவை தட்டும்போது தாமதிக்காமல் கைகை பிடித்து, உள்ளுக்குள் இழுத்துக்கொள்ள வேண்டும். அதிர்ஷ்ட தேவை கதவை தட்டும்போது, சீ போ, என்று கூறி துரத்திவிட்டால், அதன் பின்னர் அவர் ஒருபோதும் கதவை தட்டப் போவதில்லை. அரசியலில் வாய்ப்புக்கள் எல்லா சந்தர்பங்களிலும் கிடைப்பதில்லை. ஓர் அரசியல் சமூகம் என்னதான் திறமைகள் பொருந்தியதாக இருந்தாலும் கூட, அதனிடம் தியாகங்களும் அர்ப்பணிப்புமிருந்தாலும் கூட, வாய்புக்களை சரியாக பயன்படுத்திக்கொள்ளாவிட்டால், அந்தச் சமூதாயத்தின் தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் இறுதியில் விழலுக்கு இறைத்த நீராகும்.

இந்த அனுபவத்திற்கு நாம் வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. நாம்தான் இதற்கு மிகவும் சிறந்த உதாரணம். பதின்மூன்று வருடங்களுக்கு பின்னர், பிரபாகரன் இருக்கின்றாரென்று ஒருவர் கூற, அதனை முன்வைத்து விவாதம் இடம்பெறுகின்றதென்றால், விதியே, இந்த ஈழத் தமிழினத்தை என்ன செய்யப் போகின்றாய் என்று மனம் நோவதை தவிர, இந்த சமூதாயத்தில் வேறு எதனைச் செய்ய முடியும்? 'முறிந்த பனை' நூலின் முகப்பில் ஒரு குறிப்புண்டு. அதாவது, புத்தியுள்ள ஒவ்வொரு மனிதனும் எரிகின்ற தேசத்தை விட்டுவிட்டு, ஆகக் குறைந்த நன்றியுணர்வுகூட இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றான். இன்று தமிழ் தேசியமென்னும் பெயரில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் குத்தாட்ட அரசியலை எண்ணினால், தமிழ் சமூகத்தில் எஞ்சியுள்ள புத்திமிக்க சமூகமும் வீழ்சியடைந்து செல்கின்றதா என்னும் கேள்வியையே, நாம், நமக்குள் கேட்க வேண்டியிருக்கின்றது. மார்டின் லூதர்கிங் கூறுவது போன்று இங்கு பிரச்சினை தீயவர்கள் அல்லர், ஆனால், அந்தத் தீயவர்களின் செயல்களை கண்டும்காணமால் இருக்கின்றார்களே நல்லவர்கள், அவர்கள்தான் நமது தலைமுறையின் பிரச்சினையாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு, நமது காலத்தில் நம்மால் ஆதரிக்கப்பட்ட ஒரு போராட்ட இயக்கம் என்பதில் பலராலும் மாறுபட முடியாது. ஏனெனில் அதுதான் உண்மை. இந்தக் கட்டுரையாளர் உட்பட, தற்போது தமிழ் சூழலில் கருத்துருவாக்கங்களில் முன்னணி வகிக்கும் பலரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருந்தவர்கள்தான். ஆனால் ஒரு வீழ்சியேற்பட்ட பின்னர், சரி பிழைகளை நிறுத்துப் பார்ப்பதுதான் அறிவுக்கு முன்னுரிமையளிக்கும் அல்லது படித்தவர்களென்று கூறப்படும் சமூகமொன்றின் தலையாய பணியாகும். ஆனால் அது நமது சமூகத்தில் நிகழவில்லை. நிகழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் இன்று பதின்மூன்று வருடங்களுக்கு பின்னரும் கூட பரபரப்பில் காலத்தை விரயம் செய்ய வேண்டியேற்பட்டிருக்காது. ஈழத் தமிழ் சமூகத்தின் - படித்தவர்களென்னும் இறுமாப்பு, அதன் கண் முன்னாலேயே சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. அறிவுள்ளவர்கள் என்போர் அனைவரும் வாய் மூடிக் கிடக்கின்றனர். அறிவை ஆயுதமாக்கிக் கொள்ள முடியாத சமூகமொன்றில், அறிவின் பெறுமதியென்ன என்பது இந்தக் கட்டுரையாளருக்கு புரிய வில்லை. புரிந்தவர்கள் கூறுங்கள்.

பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள். இப்படியொரு கூற்றுண்டு. கிடத்தட்ட இப்படியானதொரு நிலையில்தான், இன்றைய தமிழ் தேசிய அரசியல் இருக்கின்றது. முகநூல், வட்ஸ்அப், யுடியூப் இல்லாவிட்டால் தமிழ் தேசியமிலை. முன்னர் செயலால் தீர்மானிக்கப்பட்ட தமிழ் தேசிய அரசியல் இப்போது, சைபர் வெளியால் தீர்மானிக்கப்படுகின்றது. ஈஸி கேஸ் போன்று, ஈஸி தேசியம். ஒரு முகநூல் கணக்கு அல்லது யுடியூப் இருந்தால் தேசியவாதியாகிவிடலாம். ஆனால் நாம் கடந்து வந்த பாதையை எண்ணிப் பார்த்தால் எத்தனை தியாகங்கள், எத்தனை அர்பணிப்புக்கள். பல்லாயிரம் பேர் தங்களின் வாழ்வை கொடுத்திருக்கின்றனர். ஆனால் இப்போது எவ்வித அர்பணிப்புமில்லாத ஒரு குழுவினர் அரசியலை சாதாரணமாக தீர்மானித்துவிட்டுச் செல்கின்றனர்.

இந்தக் கட்டுரையாளர் பல வருடங்களுக்கு முன்னர் தேசியம் ஒரு வெற்றுக் கூடென்னும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். தேசியம் ஒரு வெற்றுக் கூடென்பது, அல்ஜீரிய சிந்தனையாளர் பிரான்ஸ்ட் பேனானின் கருத்தாகும். தேசியவாதம் தொடர்பில் பல பார்வைகள் உண்டு. ஆனால் பேனானின் பார்வை மிகவும் கனதியானது. தேசியம் ஒரு வெற்றுக் கூடென்று கூறுவதால், தேசியவாதம் வெற்றுத்தனமான கோசமென்று எண்ணிவிடக் கூடாது. அந்த அடிப்படையில் நானும் இந்த விடயத்தை பயன்படுத்தவில்லை. ஆனால் ஒரு தேசியவாத அரசியல் போக்கிற்கு எவர் தலைமை தாங்குகின்றாரோ, அவரது அல்லது குறித்த குழுவினுடைய பண்புகளையே குறித்த தேசியவாதப் போக்கு வெளிப்படுத்துமென்பதுதான், பேனானின் வாதம். தேசியவாத அரசியல் போக்குகளை புரிந்துகொள்வதற்கு இது மிகவும் சரியானது.

உதாரணமாக ஒரு தேசியவாத அரசியல் போக்கிற்கு மதவாதத்தை முன்னிலைப்படுத்துபவர் தலைமையேற்றால், அந்த தேசியவாதம் மதவாத முகத்தையே காண்பிக்கும். உதாரணமாக பி.ஜே.பி முன்னிலைப்படுத்தும் இந்துத்வா தேசியவாதம். இந்திய அரசியலுக்கு காங்கிரஸ் தலைமையேற்கும் போது, இந்துத்வா அடையாளம் முன்னிலை வகிக்காது. ஏன்? ஏனென்றால் தலைமை தாங்குபவரின் கருத்தியல் சார்புநிலையே அவர் தலைமையேற்கும் அரசியலை தீர்மானிக்கின்றது. அதே போன்று, இடதுசாரி கருத்தியல் சார்புநிலை கொண்டர்கள் தேசியவாத அரசியலுக்கு தலைமையேற்கும் போது, அங்கு தேசியவாதம் வேறு முகத்தை காண்பிக்கும். இதன் காரணமாகவே தேசியவாதத்தை

> **இப்போது தமிழ் மக்களுக்கு தேவையான தமிழ் தேசியவாதம் தாராளவாத தமிழ் தேசியவாதமாகும். இருப்பதை உச்சமாக பயன்படுத்திக் கொண்டு, கிடைக்கும் ஒவ்வொரு வாய்புக்களையும் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலுள்ள இளைய தலைமுறையொன்று தேசியமென்னும் வெற்றுக் கூட்டை நிரப்ப வேண்டும்.**

வெற்றுக் கூடென்று பேனான் கூறுகின்றார். தேசியவாதமென்னும் வெற்றுக் கூட்டை ஒவ்வொருவரும் தங்களின் விருப்பு வெறுப்புக்களால் நிரப்பிக் கொள்கின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், 2009இற்கு முன்னர் தமிழ் தேசியவாத அரசியல் எவ்வாறிருந்தது, அது இப்போது எவ்வாறிருக்கின்றது என்பதை ஒருவர் இலகுவாக புரிந்து கொள்ள முடியும். 2009இற்கு முன்னர் தமிழ் தேசியவாதம் அன்றைய செயல்களால் தீர்மானிக்கப்பட்டது. அர்பணிப்பும் தியாகங்களுமே அன்றைய தமிழ் தேசியத்தை தீர்மானித்தது. இன்றோ எவ்வித செயல்களுமில்லாதவர்களே தமிழ் தேசியத்தை தீர்மானிக்கின்றனர். இன்று தேசியமென்னும் வெற்றுக்கூடு வெறுமனே தேர்தல் வெற்றிக்கான முயற்சிகளாலும், வெறும் கோசங்களாலும், வெளியாரின் தயவுக்கான எதிர்பார்ப்புக்களாலும் மட்டுமே நிரம்பியிருக்கின்றது.

எங்கு தாங்கள் முன்வைக்கும் விடயங்களை வெற்றிகொள்வதற்கான ஆகக் குறைந்தளவு அர்பணிப்பு கூட, இல்லாமலிருக்கின்றதோ, அங்கிருந்து எந்தவொரு நன்மையையும் மக்கள் பெற முடியாது. இன்றைய தமிழ் தேசியமென்பது வெறும் கோசங்களால் நிரப்பட்டிருக்கும் வெற்றுக் கூடு மட்டுமே. இந்த வெற்றுக் கூடு மக்களுக்கு எவ்வித நன்மையையும் வழங்காது. ஏனெனில் இன்று தமிழ் தேசியத்திற்கு தலையேற்றிருப்பதாக கூறிக்கொள்வோர் எவருமே, தாங்கள் கூறுவதை அடையும் வழிமுறை அறியாதவர்கள். ஒரு வகையில் இன்று தமிழ் மக்களின் நிலைமை, லொட்ரியில் அதிஸ்டம் கிடைக்குமென்று நம்பிக் கொண்டு, தினமும் தவறாமல் லொட்ரிச் சீட்டு வாகிக்கொண்டிருப்பது போன்ற ஒன்றுதான். இதில் இன்னொரு பிரிவு, தேசியமென்னும் பெயரால் மக்களை மேலும் ஒட்டாண்டியாக்கும் இலக்குடன் செயற்படுபவர்கள். ஒப்பீட்டடிப்படையில் இவர்களே மிகவும் ஆபத்தானவர்கள். இவ்வாறானவர்கள், மற்றவர்கள் அனைவரை விடவும், தங்களை மட்டுமே புனிதர்களாக பிராச்சாரம் செய்துவருகின்றனர் ஏனையவர்களை, கைக் கூலிகளென்றும் ஒட்டுக்குழுக்களென்றும் கூற முற்படுகின்றனர். இந்த அரசியல் போக்கு ஆபத்தானது. தங்களை புனிதர்களாகக் காண்பித்துக் கொள்ள இவர்கள், கொள்கையென்னும் துருப்புச் சீட்டை பயன்படுத்துகின்றனர். இவர்களை பொறுத்தவரையில் ஒரு விடயத்தை தொடர்ந்து அப்படியே கிளிப்பிள்ளைபோல் கூறிவருவதுதான் கொள்கை. உண்மையில் இது கொள்கைக்கு கொடுக்கப்படும் மிகவும் கொச்சையான விளக்கமாகும். இது அறிவுநிலைக்கு அப்பாற்பட்டது. இது சரியென்றால், இப்போது உலகில் சிறந்த கொள்கைவாத தலைவராக வட கொரிய சர்வாதிகாரி கிம் ஜொங் உன்னின் தலைமுறையைத்தான் கூறவேண்டும்.

உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதும், அவை எவற்றையும் கருத்தில் கொள்ளாது, இப்போதும், வடகொரியாவை, உலகிலிருந்து தனிமைப்படுத்தியே ஆட்சிசெய்கின்றனர். இதனை சிறந்த கொள்கையென்று கூற முடியுமா? உண்மையில் கொள்கையென்பது மாற்றங்களை கண்டு அஞ்சியோடுவதல்ல. மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதல்ல. மாறாக, மாற்றங்களை உள்வாங்கி, அந்த மாற்றங்களுக்கு ஏற்ப சமூகத்தை முன்னேற்றுவது. தங்களை நம்பும் மக்களுக்கு அபிவிருத்தியையும் ஏற்றத்தையும் கொடுப்பது.

மக்கள் தொடர்ந்தும் வறுமையில் வாடுகின்றனர், ஏனைய சமூகங்களை விடவும் பின்தங்கிய நிலையிலுக்கின்றனர் என்றால், நமது கொள்கை வாதத்தின் பெறுமதியென்ன? உலகில் வளர்ச்சியடைந்த அனைத்து சமூகங்களும் மாற்றங்களை ஏற்றுக்கொண்ட சமூகங்கள்தான். மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சமூகங்கள் தொடர்ந்தும் பின்நோக்கியே சென்றிருக்கின்றன. மற்றவர்களிடம் கையேந்திக் கொண்டிருக்கின்றன. இதற்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணம். அரசியல் முன்னோக்கி நகர்வதை தடுக்கும் கடும்போக்குவாதிகளுக்கு முன்னுரிமையளித்தமையால்தான், நாடு இவ்வறானாதொரு நிலையிலிருக்கின்றது. இதனை நாம் ஒரு பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே இப்போது தமிழ் மக்களுக்கு தேவையான தமிழ் தேசியவாதம் தாராளவாத தமிழ் தேசியவாதமாகும். இருப்பதை உச்சமாக பயன்படுத்திக் கொண்டு, கிடைக்கும் ஒவ்வொரு வாய்புக்களையும் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலுள்ள இளைய தலைமுறையொன்று தேசியமென்னும் வெற்றுக் கூட்டை நிரப்ப வேண்டும்.

# அதிர்ச்சி கொடுக்கும் மின் கட்டண உயர்வு...!

மின்சாரம் இல்லாத வாழ்வு என்பதை இன்று நினைத்தும் பார்க்க முடியாது. நமது அன்றாட நடவடிக்கைகள், உணவு, தொழில் நடவடிக்கைகள், பொழுதுபோக்கு என்று அனைத்திலும் சர்வமும் மின்சார மயமாகியுள்ளது. சுருங்கக்கூறின் மக்களின் இயக்க சக்தியாகவே இன்று மின்சாரம் உள்ளது. ஓரளவுக்கு கைக்கு எட்டக்கூடிய நிலையில் இருந்த மின்சார கட்டணம் இன்று பொருளாதார நெருக்கடியால் குறுகிய காலத்துக்குள்ளாகவே இரு தடவைகள் உயர்ந்துள்ளன. இவ்வாறு மின்கட்டணம் அதிகரித்த இரு சந்தர்ப்பங்களிலும் அதிக தொகை உயர்ந்துள்ளது.

இந்த மின்சார கட்டண அதிகரிப்பால் வறுமைப்பட்ட மக்களும் - நடுத்தர வர்க்க மக்களுமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே நாட்டில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட விலையுயர்வு குறையும் முன்னரே பொருளாதார நெருக்கடியால் பொருட்கள் - சேவைகளின் விலையேற்றம் உச்சம் பெற்றது. இதற்கு மத்தியில் “மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை“யாக தாக்கியுள்ளது மின்சார கட்டணம். மின்சார கட்டண உயர்வால் பாதிக்கப்பட்ட நாட்டின் சகல மக்களின் குரலாகவும் இங்கு ஒலிக்கிறார்கள் இவர்கள்....!

## பெண் தலைமை குடும்பங்கள் திண்டாட்டம்!

**சி. யாழினி**
**பருத்தித்துறை**



எங்களைப் போல வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களை மின்சார கட்டண அதிகரிப்பு பெரிதும் பாதிக்கிறது. நாளாந்தம் மீன் விற்கின்றவர்கள் வாடிக்கையாளர்களுக்கு குளிரூட்டியை பாவித்துத்தான் மீன்களை விற்கும் நிலை உள்ளது.

ஏற்கனவே எரிபொருள் பிரச்னையால் எமது மீன் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நம்மைப்போல் ஏனைய துறை சார்ந்தவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். இதேபோல் தற்போதைய சூழ்நிலையில் மின்சாரம் இல்லாது எந்த குடும்பத்திலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது. அத்தோடு, தற்போது சில நாட்களாக மின்சாரத்தை துண்டிக்காது ஒவ்வொரு நாளும் தந்தமைக்கு மிகவும் நன்றியை தெரிவிக்கின்றோம்

இதேபோல, மின்சார கட்டணத்தையும் குறைத்தால் மிகவும் உதவியாக இருக்கும். குறிப்பாக தற்போது விவசாயிகள்கூட மின்சாரத்தை பயன்படுத்தித்தான் நீரிறைக்கின்றனர். மின்சாரம் என்பது அத்தியாவசியமாக உள்ளது.

பல சுயதொழில் உற்பத்தியாளர்கள் - பெண் தலைமைத்துவ குடும்பங்களின் உற்பத்தி பொருட்கள்கூட மின்சாரத்தை பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, மின்சார கட்டணத்தை குறைப்பதால் தான் அந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படும். தற்போது விவசாயிகளுக்கு உரப் பற்றாகுறை போன்ற பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

ஆகவே, மின்சார கட்டணத்தையும் நீங்கள் உயர்த்தினால் கடும் பாதிப்பாக இருக்கும்.

இரவு நேர தனியார் வகுப்புகளில்கூட மாதாந்த கட்டணத்தை அதிகரித்துள்ளார்கள் ஏனென்றால் மின்சார கட்டணம் அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. தற்போதைய காலகட்டத்தில் மின்சாரம் என்பது அனைவருக்கும் அத்தியாவசியமாக உள்ளது. அனைவரின் வாழ்விலும் மின்சாரம் என்பது மிக முக்கியமான நிலையில் காணப்படுகின்றது. எனவே, மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும்.



## அரசின் நிலைத்திருப்புக்காக சாதாரண மக்களுக்கு பாதிப்பு

**க. தாட்சாயினி**
**உரும்பிராய்**



இந்த காலகட்டத்தில் மின்சார கட்டண அதிகரிப்பானது சாதாரண மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை செலுத்தியுள்ளது. நாளாந்தம் அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத இக்கட்டான நிலையில் மக்கள் உள்ளனர். இந்தக் காலகட்டத்திலே அரசானது தங்களுடைய நிலைத்திருப்புக்காக மின்சார கட்டணத்தை அதிகரித்திருப்பது சாதாரண குடும்பங்களுக்கு பாதிப்பையும் சவாலையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த சவாலை ஈடுசெய்வது என்பது பெரும் இன்னலுக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. இந்த நிலைமையில், அரசாங்கம் இந்த மின்சார கட்டண உயர்வு தொடர்பான கவனத்தைக் கூடியளவில் செலுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.



## எம் போன்றோரால் தாங்கமுடியாது

**க. மனோன்மணி**
**கோண்டாவில்**

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணத்தை செலுத்த முடியாத நிலை உள்ளது. அன்றாடம் கூலி வேலை செய்வதால் இந்தக் கட்டண உயர்வு பெரும் இன்னலாக உள்ளது.

இரவில் பிள்ளைகள் படிப்பதில் பெரும் கஷ்டம் காணப்படுகின்றது. மின்சாரத்தை துண்டிக்கிறார்கள். மின்சார கட்டணத்தை அதிகரிக்கிறார்கள் அதேபோல மின்சார கட்டணத்தை செலுத்தப் பிந்தினால் உடனேயே மின் இணைப்பை துண்டிக்கிறார்கள். சிறு பிள்ளைகளை மின்சாரம் இல்லாத நிலையில் வளர்ப்பது என்பது மிக கடினமாகவுள்ளது. அரசாங்கமானது இந்த மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக வறுமை கோட்டுக்கு உட்பட்ட எம்மை போன்ற மக்கள் மின்சார உயர்வை தாங்க முடியாத நிலையில் உள்ளார்கள். அன்றாடம் கூலிக்குச் சென்று அதில் வரும் வருமானத்தில் பிழைக்கும் நாங்கள் உயர்வான மின்சார கட்டணத்தை கட்டுவதற்கு வேறு வேலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் எனவே அரசு இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

**அறிக்கையிடல்**
**REPORTING**
**என். குகராஜ்**

## வறுமையான குடும்பங்களின் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது



**த. ஜெயசித்ரா**
**கோப்பாய்**

வழமையாக மின்சாரத்தைப் பாவிக்கும்போது 300 தொடக்கம் 400 ரூபாய் மாதாந்த கட்டணமாக செலுத்த வேண்டிவரும். ஆனால், தற்போது 2000 ரூபாய்க்கு மேல் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று கூறுகிறார்கள். அதிலும் 60 அலகுகளுக்கு மேல் பாவித்தால் கட்டணம் இன்னும் அதிகரிக்கும் என்றும் சொல்கிறார்கள். குறிப்பாக தொழில் பட்டறைகள் மற்றும் மீன் உற்பத்தி மற்றும் ஏனைய தொழில்களில் ஈடுபடுவோர் மின்சார கட்டண அதிகரிப்பால் பெரும் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அன்றாடம் 1000 ரூபாய் சம்பளத்துக்கு வேலை செய்யும் மக்கள், தமது ஏனைய செலவுகளுடன் மின்சார செலவையும் சமாளிப்பது என்பது மிகவும் பாதிப்பானதாக இருக்கும். வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

மக்களுக்கு ஒவ்வொரு நாளும் ஏதோ ஓர் அழுத்தத்தை இந்த அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக மின்சார கட்டண அதிகரிப்பு என்பது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மீண்டும் வில்லன்

அஜித், திரிஷா நடிப்பில் கவுதம் மேனன் இயக்கிய என்னை அறிந்தால் படத்தில் வில்லன் வேடத்தில் நடித்தவர் அருண் விஜய். இந்தப் படம் அருண் விஜய்க்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

அருண் விஜய் நாயகனாக நடித்த தடம் படத்தை மகிழ் திருமேனி இயக்கியிருந்தார். இந்த நிலையில், தற்போது அஜித்தின் 62ஆவது படத்தில் வில்லனாக நடிப்பதற்கு அருண் விஜயிடம் மகிழ்திருமேனி பேச்சு நடத்தி வருகிறார்.

இது குறித்த தகவல் விரைவில் வெளியாக உள்ளது. மேலும், யானை, சினம் படங்களைத் தொடர்ந்து தற்போது அறிவழகன் இயக்கத்தில் போர்டர் என்ற படத்தில் நடித்திருக்கிறார் அருண் விஜய்.



# மார்ச் 10 ஜெயம்ரவி படம்

பொன்னியின் செல்வன் படத்துக்குப் பிறகு ஜெயம் ரவியின் அடுத்த படத்துக்கான எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. இயக்குநர் கல்யாண் கிருஷ்ணன் இயக்கத்தில் ஜெயம் ரவி, பிரியா பவானி சங்கர், தன்யா ரவிச்சந்திரன் நடித்துள்ள படம் அகிலன்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று முடிந்தது. சாம் சி எஸ் இசையமைக்க, ஸ்கிரீன் சீன் மீடியா தயாரித்துள்ளது. துறைமுகம் தொடர்பான கதைக்களத்தில் அதிரடி படமாக உருவாகியுள்ளது. தற்போது படத்தின் வெளியீட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி வருகிற மார்ச் 10ஆம் திகதி படம் திரைக்கு வரவுள்ளது.





# தயாராகும் சஞ்சய் தத்

மாஸ்டர் படத்தை அடுத்து மீண்டும் விஜய் லோகேஷ் கனகராஜ் இணைந்திருக்கும் லியோ படத்தின் படப்பிடிப்பு காஷ்மீரில் நடக்கிறது. அங்கு த்ரிஷா, பிரியா ஆனந்த், கௌதம் மேனன் உள்ளிட்ட பலரும் படப்பிடிப்பில் கலந்து கொண்டு வருகிறார்கள்.

இந்தப் படத்தில், கே. ஜி. எவ். -2 படத்தில் வில்லனாக நடித்த ஹிந்தி நடிகர் சஞ்சய் தத் வில்லனாக நடிப்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. காஷ்மீரில் நடைபெறும் லியோ படப்பிடிப்பில் கலந்து கொள்ளவுள்ள சஞ்சய் தத் தற்போது தீவிர உடற்பயிற்சியில் ஈடுபட்டு தன்னை தயார்படுத்தி வருகிறார். அது குறித்து புகைப்படம் ஒன்று பிரபலமானது. இந்த படத்தில் விஜய்யும், சஞ்சய்தத்தும் நேரடியாக மோதும் சண்டைக்காட்சி விரைவில் காஷ்மீரில் படமாகவுள்ளது.

# கைதியில் ராய் லட்சுமி

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கார்த்தி நடித்து 2019ஆம் ஆண்டு வெளியான படம், 'கைதி'. ரசிகர்களிடையே பிரமாண்ட வரவேற்பைப் பெற்ற இந்தப் படம் ஹிந்தியில் மீளுருவாகிறது.



கார்த்தி நடித்த வேடத்தில் அஜய் தேவ்கன் நடிக்கிறார். படத்தை அவரே இயக்குகிறார். தபு பொலிஸ் அதிகாரியாகவும் அமலா பால், அஜய் தேவ்கன் மனைவியாகவும் நடிக்கின்றனர். 3டியில் உருவாகியுள்ள இந்தப் படம் மார்ச் 30ஆம் திகதி வெளியாக இருக்கிறது.


இந்நிலையில் இந்தப் படத்தில் நடிகை ராய் லட்சுமி குத்தாட்ட பாடலுக்கு நடனமாடவுள்ளார். சண்டைக்காட்சியின் நடுவே இந்தப் பாடல் இடம்பெறவுள்ளதாம்.



# என் காதல் வாழ்க்கை...!

நடிகை டாப்ஸி இப்போது இந்திப் படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். இவர் பிரபல பட்மின்ரன் பயிற்றுநர் மத்தியாஸ் போ என்பவரைக் கடந்த 9 வருடங்களாகக் காதலித்து வருகிறார்.

இந்நிலையில், அவரின் திருமணம் எப்போது என்று ரசிகர்கள் கேட்டுள்ளனர். இதற்கு அவர், "என் சமகால நடிகர்கள் மற்றும் நடிகைகள் திருமணம் செய்து கொண்டு, பெற்றோராகி வருகிறார்கள். எனது தொழில் வாழ்க்கையின் ஆரம்பத்தில் நான் காதலிக்கத் தொடங்கினேன். இன்னும் அவரையே காதலித்து வருகிறேன். இதை ஒப்புக்கொள்ள தயங்கவில்லை. எனக்கு எந்தப் போட்டியும் இல்லை. இயல்பாக செல்லும் இந்த வாழ்க்கையில் நிம்மதியாக இருக்கிறேன். ஆனால், என் காதல் வாழ்க்கை பற்றிப் பேசுவதை விரும்பவில்லை." என்று கூறியுள்ளார்.




**திரைப்படம் - சிங்கிள் ஷங்கரும் ஸ்மார்ட்போன் சிம்ரனும்**
**இயக்கம் - விக்னேஷ் ஷா பி. என்.**
**இசை - லியோன் ஜேம்ஸ்**
**நடிப்பு - மிர்ச்சி சிவா, மேகா ஆகாஸ், அஞ்சு குரியன்**

காதலி இல்லாமல் கஷ்டப்படும் ஒற்றையர்களுக்காக (சிங்கிள்ஸ்) உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) கைபேசிக்கு காதல் வந்தால் என்ன ஆகும் என்பதுதான் படத்தின் ஒரு வரிக் கதை

'முரட்டு சிங்கிள்' இளைஞர்களின் கவலையைப் போக்க விஞ்ஞானி ஒருவர் மனிதர்களிடையே பேசி, பழகும் பெண்ணை மையப்படுத்திய செயற்கை நுண்ணறிவு கொண்ட கைபேசி ஒன்றை உருவாக்குகிறார். அந்த கைபேசியை சந்தையில் பல கோடிக்களுக்கு விற்று பணம் பார்க்க வேண்டும் என தொழிலதிபர் பகவதி பெருமாள் ஆசைப்பட, அது திருடர்களால் களவாடப்படுகிறது. இறுதியில், அந்த கைபேசி சிம்ரன் உணவு விநியோக நிறுவனத்தில் வேலை பார்க்கும் சிவாவின் கைகளில் சிக்கி, அவரின் வாழ்க்கையை மாற்றியமைக்கிறது.

ஒருகட்டத்தில் கைபேசி சிம்ரனுக்கு சிவாவின் மீது காதல் வர, அதை அவர் ஏற்றாரா? மறுத்தாரா? அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? - இதுதான் திரைக்கதை.

பெரியளவில் சுவாரஸ்யம், திருப்பங்களின்றி முழுக்க முழுக்க நகைச்சுவையை மட்டும் நம்பி நகரும் படத்தில், மனோவின் பாதிரியார் வேடம், கேதார் யாதவின் ஐ. பி. எல். ஆட்டம், காரில் உணவு விநியோகம் செய்வது, அயன்மானிடம் வசனம் பேசுவது என காட்சிகள் ரசிக்க வைக்கின்றன. 'தர்க்கம் (logic) பார்க்க வேண்டாம்' என முற்கூட்டியே எச்சரித்து விடுவதால் மலிந்து கிடக்கும் தர்க்க மீறல்களைக் கடந்து படத்தின் ஒற்றை வரிகள் சில இடங்களில் கிச்சு கிச்சு மூட்டுகின்றன.

'அகில இந்திய சுப்பர் ஸ்டார்' சிவாவுக்கு இயல்பாகவே வரும் உடனுக்குடனான நகைச்சுவைகளும் உடல்மொழியும் மொத்த படத்தையும் ரசிக்க பேருதவி புரிகின்றன. இடையிடையே அவரின் ஆங்கில வசனங்கள் உச்ச ரகம்.

"பெர்ஸ்ட்ரைம் கிறிஸ்டியனா மாறுனதால இதெல்லாம் தேவைன்னு நெனைச்சேம்பா", என மனோ பேசும் வசனங்களும், அவரின் இளம் உடல்மொழியும் பதிலடியான வசனங்களும் 'சிங்காரவேலன்' மனோவை நினைவூட்டுகின்றன. நகைச்சுவைக்காக அவரை தமிழ் திரையுலகம் நிறைய பயன்படுத்த வேண்டியிருப்பதை உணர்த்தியிருக்கிறார். மேகா ஆகாஷ் அழகு முகபாவனைகளால் முழுக்க 'பச்சை விரிப்பிலேயே' நடித்து கொடுத்திருக்கிறார். அஞ்சு குரியன் கதைக்கு தேவையான பங்களிப்பை செலுத்தியுள்ளார். மாகாபா ஆனந்த், கலக்கப்போவது யாரு பாலா, சாரா, பகவதி பெருமாள் கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளனர்.

லியோன் ஜேம்ஸ் இசையில் 'ஸ்மார்ட்போன் சென்யோரிட்டா' பாடல் படம் முடிந்த பின்பும் முணுமுணுக்க வைக்கிறது. அவரின் பின்னணி இசை கதைக்களத்துக்கு தேவையான மனநிலையை சிறப்பாகவே உருவாக்கி தருகின்றது. ஆர்தர் ஏ வில்சனின் கமெரா தன்னைச் சுற்றியிருக்கும் ஒளியை உள்வாங்கி பிம்பங்களை பிரசவித்திருக்கிறது. மோசமில்லாத வரைகலை காட்சிகள் படத்தின் செலவை நினைவூட்டுகின்றன.

'எந்திரன்' படத்தின் ஸ்பூஃப் வெர்ஷனைப் பார்ப்பது போன்ற உணர்வைக் கொடுக்கும் படத்தின் சில இடங்கள் அயற்சி கொடுக்காமலில்லை. படத்தில் அடுத்த நகைச்சுவை எப்போது வரும் என்று கேட்டுக் காத்திருக்க வேண்டியுள்ளது. காரணம், படத்தில் அதைத் தாண்டி எதுவுமில்லை என்பதால் நகைச்சுவையை எதிர்நோக்கியிருக்கும் தருணங்களில் சில இடங்களில் உருவக் கேலி வசனங்கள் நெருடல். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் சாதக, பாதகங்களை மேலோட்டமாக தொட்டிருக்கும் இப்படம் நகைச்சுவை என்ற எல்லைக் கோட்டைத் தாண்டி




நீளாதது ஓர் ஒட்டுமொத்த நகைச்சுவை நாடகம் என்ற ரீதியில் சுருங்கிவிடுகிறது.

மொத்தத்தில் சுவாரசியத்தையும், திருப்பத்தையும் எதிர்பாக்காமல், தர்க்க மீறல்களைத் தாண்டி சந்தோசமாகச் சென்று பார்க்கும் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பை 'சிங்கிள் ஷங்கரும் ஸ்மார்ட்போன் சிம்ரனும்' ஏமாற்ற வாய்ப்பு குறைவு.

●

# சச்சினை தொடுவாரா கோலி?






அதிக சர்வதேச ஓட்டங்கள் எடுத்த வீரர்களின் பட்டியலில் 25,000 ஓட்டங்களுடன் 6ஆம் இடத்தில் உள்ளார் இந்தியாவின் விராட் கோலி.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2-ஆவது டெஸ்ட்டில் இந்தியா 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் 4 ஆட்டங்கள் கொண்ட போர்டர் - காவஸ்கர் டெஸ்ட் தொடரில் இரண்டில் வெற்றி பெற்ற இந்தியா, கிண்ணத்தைத் தக்கவைத் துள்ளது. மேலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தனக்கான இடத்தை ஏறத்தாழ உறுதி செய்துள்ளது.

இந்த டெஸ்டில் 44, 20 என மொத்த மாக 64 ஓட்டங்கள் எடுத்தார் கோலி. இந்த டெஸ்டில் சர்வதேச கிரிக்கெட்டில் 25,000 ஓட்டங்களைக் கடந்தார் கோலி. டெஸ்டில் 8,195 ஓட்டங்க ளும் ஒருநாள் கிரிக்கெட்டில் 12,809 ஓட்டங்களும் இருபது - 20 போட்டியில் 4,008 என மொத்தமாக 25,012 ஓட்டங்கள் எடுத்துள்ளார் கோலி. இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் 25,000 ஓட்டங்களை வேகமாகக் கடந்த வீரர் என்ற சாதனையைப் படைத் துள்ளார் கோலி. இவர் 549 இன்னிங்ஸிலும் சச்சின் 577 இன்னிங்ஸிலும் இந்த இலக்கை அடைந்துள்ளார்கள்.

அதிக சர்வதேச ஓட்டங்கள் எடுத்த துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலில் 34,357 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார் சச்சின் டெண்டுல்கர். சமகால வீரர்களில் கோலி 25,012 ஓட்டங்களும் இங்கிலாந்தின் ஜோ ரூட் 17,800 ஓட்டங்களும் எடுத் துள்ளார்கள். இதனால் சச்சினின் 34,000 ஓட்டங்களைத் தொடுவது கடினம் என்று அறியப்படுகிறது.

1989 முதல் 2013 வரை விளையாடிய சச்சின் தற்போது யாரும் தொட முடியாத உயரத்தில் உள்ளார். அப்படியே நெருங் கினாலும் கோலியால் மட்டுமே சாத்தி யம். அவரும் இன்னும் எத்தனை ஆண்டு கள் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவார் என்ற கேள்வி உள்ளதால் சச்சின் சாதனையை நெருங்குவது அவ்வளவு சுலபமல்ல என்றுதான் கூறவேண்டும்.

கிரிக்கெட்டில் அதிக சர்வதேச ஓட்டங்கள் குவித்த வீரர்களாக, சச்சின் - 34,357 ஓட்டங்கள், சங்ககாரா - 28,016 ஓட்டங்கள், பொண்டிங் - 27,483 ஓட்டங்கள், மஹேல ஜெயவர்த்தன- 25,957 ஓட்டங்கள், ஜக் கலீஸ் - 25,534 ஓட்டங்கள், கோலி - 25,012 ஓட்டங்கள்.

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: இறுதியில் இலங்கை - இந்தியா?







உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிச்சுற்றில் இலங்கையும் இந்தியாவும் மோதுவதற்கான வாய்ப்பு ஒன்று உருவாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட போர்டர் - காவஸ்கர் டெஸ்ட் தொடரில் இரண்டில் வெற்றி பெற்ற இந்தியா கிண்ணத்தைத் தக்கவைத்துள்ளது. மேலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தனக்கான இடத்தை ஏறத்தாழ உறுதி செய்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி தோற்றதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான வாய்ப்பில் முதலிடத்தில் (தற்போதுவரை) இருந்தும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறுவதில் சவாலை எதிர்கொண்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றது அவுஸ்திரேலிய அணி. இதையடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் புள்ளிகள் பட்டியலில் 75.56 புள்ளிகளுடன் இருந்த அவுஸ்திரேலிய அணிக்கு இறுதிச்சுற்றில் விளையாடுவதற்கான வாய்ப்பு அதிகரித்தது. ஆனால், தற்போது இந்தியாவில் இரு டெஸ்ட்களிலும் தோற்றுள்ளதால் புதிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான 4 டெஸ்ட்களிலும் அவுஸ்திரேலியா தோற்கும் நிலையில், நியூசிலாந்தில் அடுத்து விளையாடும் இலங்கை அணி இரு டெஸ்ட்களையும் வென்றால், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிச்சுற்றில் இந்தியாவும் இலங்கையும் மோதுவதற்கான வாய்ப்பு உருவாகும் - அவுஸ்திரேலியா வெளியேற்றப்படும்.

அண்மையில், பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றது இந்திய அணி. தற்போது, 4 டெஸ்ட்கள் கொண்ட அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என இந்திய அணி வென்றால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றுவிடும்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் மட்டுமே போட்டியிடுகின்றன. இந்திய அணியின் இரு வெற்றிகளால் தென்னாபிரிக்க அணி போட்டியிலிருந்து வெளியேறியுள்ளது. இலங்கை - நியூசிலாந்து ஆகிய அணிகள் இரு டெஸ்ட் போட்டிகளிலும் - இந்தியா - அவுஸ்திரேலியா மீதமுள்ள இரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடுகின்றன. இந்த நான்கு டெஸ்ட் போட்டிகளும்தான் இறுதிச்சுற்றுப் போட்டியாளர்களை நிர்ணயம் செய்யவுள்ளன.

இந்தியாவில் விளையாடும் மீதமுள்ள இரு டெஸ்ட் போட்டிகளிலும் ஒன்றை சமன் செய்தாலும் அவுஸ்திரேலிய அணி இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றுவிடும். நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி தோற்றால் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற இலங்கை அணியின் தயவு தேவைப்படும்.

இதேபோல, இந்திய அணி குறைந்த பட்சம் 3-1 என வென்றால் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெறலாம். இல்லாவிட்டால் இலங்கை அணியின் தயவு தேவைப்படும்.

இந்தியா - அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடர் 2-2 என சமன்ட ஆனால் - இலங்கை அணி 2-0 என நியூசிலாந்தை வென்றால் அவுஸ்திரேலியா - இலங்கை அணிகள் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிச்சுற்றில் மோதும்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிச் சுற்று, ஜூன் 7-11 திகதிகளில் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: புள்ளிகள் பட்டியலில் அவுவுஸ்திரேலியா - 66.67, இந்தியா - 64.06, இலங்கை - 53.33 என்ற வீத அடிப்படையில் உள்ளன.

# உலக வங்கி தலைவர் பதவிக்கு இந்தியரை பரிந்துரைத்த ஜோ பைடன்

## யார் இந்த அஜய் பங்கா?



உலக வங்கியை வழிநடத்த அமெரிக்கா சார்பில் அமெரிக்க இந்தியரான அஜய் பங்காவை அந்நாட்டின் அதிபர் ஜோ பைடன் பரிந்துரை செய்துள்ளார்.

காலநிலை மாற்றத்தை கையாள்வதில் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வங்கியின் மீது அமெரிக்காவின் அழுத்தம் அதிகரித்து வரும் சூழலில் இந்த பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக, கிரெடிட் கார்டு ஜாம்பவனாக வர்ணிக்கப்படும் மாஸ்டர் கார்டு நிறுவனத்தை பல ஆண்டுகள் தலைமை தாங்கி வழி நடத்திய பெருமைக்குரிய அஜய் பங்கா தற்போது தனியார் பங்கு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

வங்கியை தனியார் துறையுடன் இணைந்து தனது இலக்குகளை நோக்கி பயணிக்க வைப்பதில் அவர் அனுபவம் வாய்ந்தவர் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்காவின் பரிந்துரையாக அஜய் பங்காவின் பெயரை ஜோ பைடன் பரிந்துரைத்தாலும், உலக வங்கியின் அடுத்த தலைவரை அதிகாரப்பூர்வமாக நியமிப்பது என்பது வங்கியின் நிர்வாகத்திற்கு உட்பட்டது ஆகும்.

வங்கியானது மூன்று வேட்பாளர்களின் இறுதிப் பட்டியலை நேர்காணல் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும், மே மாத தொடக்கத்தில் புதிய தலைவரின் பெயரை அறிவிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் கூறியது. மேலும், தலைவர் பதவிக்கு பெண்களின் பெயரை பரிந்துரைக்க அதிகம் ஊக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. வேறு நாடுகளும் தலைவர் பதவிக்கு நபர்களை பரிந்துரைக்குமா என்பது தெரியவில்லை.

உலக வங்கியின் மிகப் பெரிய பங்குதாரரான அமெரிக்கா, ஒவ்வொரு ஆண்டும் நாடுகளுக்கு பில்லியன் கணக்கான டாலர்களை கடனாக வழங்கும் இந்த நிறுவனத்தை வழிநடத்தும் நபரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை வழக்கமாகக் கொண்டுள்ளது.

சரியான நோக்கங்களை அமைத்து நல்லவைக்கு உத் வேகம் அளிக்கும் விதமாக உலக வங்கி சேவையாற்றுவதை பார்க்க தான் விரும்புவதாக அமெரிக்க நிதிய மைச்சர் ஜேனட் யெல்லன் கூறியுள்ளார்.

மேலும், அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் லாப நோக்கற்ற நிறுவனங்களுக் கிடையில் கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கான அஜய் பங்காவின் சாதனையை சுட்டிக்காட்டி, அவர் அந்த பொறுப்பை ஏற்க "தனித்துவமாக" தயாராக இருப்பதாக ஜேனட் யெல்லன் கூறினார்.

**யார் இந்த அஜய் பங்கா?**

அமெக்க குடியுரிமை பெற்றவரான அஜய் பங்கா, தனது பணி வாழ்வை இந்தியாவில் தொடங்கினார். இவரது தந்தை ராணுவத்தில் பணியாற்றியவர்.

மாஸ்டர் கார்டு நிறுவனத்தில் இணைவதற்கு முன்பாக நெஸ்ட்லே, சிட்டி குரூப் ஆகியவற்றிலும் அவர் இணைந்து பணியாற்றியுள்ளார்.

மாஸ்டர் கார்டு நிறுவனத்தில் இருந்து 2021ஆம் ஆண்டில் விலகிய அஜய் பங்கா தற்போது, ஜெனரல் அட்லாண்டிக் என்னும் தனியார் பங்கு நிறுவனத்தில் துணைத் தலைவராக உள்ளார். அங்கு அவர் அதன் 3.5 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான காலநிலை நிதியின் ஆலோசனைக் குழுவில் உள்ளார்.

அவர் வெள்ளை மாளிகையுடன் இணைந்து மத்திய அமெரிக்காவிற்கான கூட்டு என்ற திட்டத்தின் துணை தலைவராகவும் பணியாற்றியுள்ளார், இது அமெரிக்காவில் தனியார் துறை முதலீட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்முயற்சியாகும்.

சர்வதேச நிறுவனங்களை எப்போதும் விமர்சித்து வரும் குடியரசு கட்சியினர் உள்ளிட்ட அமெரிக்க நாடாளுமன்றத்தில், வங்கியின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வணிகத்தில் அஜய் பங்காவுக்கு உள்ள பல ஆண்டுகள் அனுபவம் உதவும் என்று உலகளாவிய மேம்பாட்டு மையத்தின் நிர்வாக துணைத் தலைவர் அமெண்டா கிளாஸ்மென் கூறுகிறார்.

அதேநேரத்தில், அஜய் பங்காவிற்கு அரசாங்கம் தொடர்பாகவும் வங்கியின் அடிப்படையான வளர்ச்சி பணிகள் தொடர்பாகவும் குறைவான அனுபவங்களே உள்ளதால் அவர் சரியான தேர்வுதானா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

"வங்கி எப்படி இருக்க வேண்டும் என்பது தொடர்பாக தனது பார்வை குறித்து அஜய் பங்கா பேசுவதை கேட்க ஆர்வமாக உள்ளேன்" என்று அமெண்டா கூறினார்.

உலக வங்கியின் அடுத்த தலைவராக யார் பொறுப் பேற்றாலும் கடனில் தவிக்கும் குறைந்த வருவாய் கொண்ட நாடுகளின் உடனடி நிதித் தேவைகளை சமாளிப்பது, காலநிலை மாற்றம், சர்வதேச மோதல்கள் மற்றும் பெருந்தொற்று அபாயங்களை சமாளிப்பது போன்ற சவால்களை சந்தித்தாக வேண்டும்.

உலக வங்கியின் இந்த அடுத்த கட்ட உத்தியில் வாழ்வா சாவா என்ற நிலையும் உள்ளது என்றும் அமெண்டா கிளாஸ்மென் கூறுகிறார். "உண்மையிலேயே உலக வங்கி பொருத்தமானதுதான் என்று கருதப்படவோ அல்லது தேவையில்லாதது என்று கருதி ஓரங்கப்படவோ கூடிய நேரம் இது" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

"வங்கி வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் பொதுவான ஒருமித்த கருத்து இருந்தாலும், எப்படி என்பது தொடர்பாக அனைவரிடத்திலும் குறைவான உடன்பாடே உள்ளது, மேலும் செய்யப்பட வேண்டிய செயல்கள் பற்றிய கவலையும் உள்ளது," என்று அவர் மேலும் கூறினார்.

உலக வங்கியின் தற்போதைய தலைவராக டேவிட் மால்பஸ் உள்ளார். இவர் அமெரிக்காவின் முன்னாள் அதிபராக இருந்த டொனால்ட் டிரம்ப் மூலம் பரிந்துரை செய்யப்பட்டவர். 5 ஆண்டுகள் அவருக்கு பதவி உள்ள நிலையில், ஓராண்டுக்கு முன்பாகவே, அதாவது இந்தாண்டு ஜூன் மாதத்தில் தான் தலைவர் பதவியில் இருந்து விலகப் போவதாக அவர் அறிவித்திருந்தார். ஒருவேளை, ஜோ பைடனின் பரிந்துரை ஏற்கப்படும் பட்சத்தில் டேவிட் மால்பஸ் இடத்தை அஜய் பங்கா பூர்த்தி செய்வார்.

காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்ய வங்கியின் வளங்களை செலவிடுவதில் டேவிட் மால்பஸ் மெதுவாக இருப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் விமர்சிக்கப்படுகிறார்.

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**தியாகராஜா வினோத், சண்டிலிப்பாய், மானிப்பாய்**

**கேள்வி:** தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் என்றால் எங்காவது ஒரு பொது இடத்தில் மேடைபோட்டு கூட்டம் நடத்துவார்கள். வாக்களர்கள் கூட்டத்திற்கு வந்து வேட்பாளர்களின் பேச்சுக்களை கேட்டு யார் நல்ல வேட்பாளர் என்பதைக் கண்டறிந்து வாக்களிப்பார்கள். அதுதான் தேர்தல் பிரச்சாரமுறை. ஆனால் இப்போதெல்லாம் கட்சி அலுவலகத்திலேயோ அல்லது ஒரு மண்டபத்திலேயோ, வேட்பாளர் அறிமுகம் என்ற பெயரில் மண்டபத்தில் வேட்பாளர்களையே பார்வையாளர்களாக அமரவைத்துவிட்டு கட்சித் தலைவர்கள் பேசுகின்றார்கள். ஏன் இந்தமாதிரி பிரச்சாரக்கூட்டம் நடக்கின்றது என்பது உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** அதுதான் நீங்களே சொல்லிவிட்டீர்களே வேட்பாளர் அறிமுகக்கூட்டம் என்று. அதாவது வேட்பாளர்களை கட்சித் தலைவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கின்ற நிகழ்ச்சி தான் அது. முன்னார் என்றால் கட்சிகளின் தலைவர்களுக்கு ஊரில் உள்ள தத்தமது கட்சிக்காரர்கள் யார் யார், அவர்களுக்கு உள்ளூரில் எப்படி மக்கள் செல்வாக்கு இருக்கின்றது என்கின்ற விபரங்கள் எல்லாம் அத்துபடியாக தெரிந்திருக்கும். இப்போது அப்படியெல்லாம் கட்சிக்காரர்களுடன் பழகுகின்ற தலைவர்கள் யார் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் தத்தமக்கு செம்புதூக்குகின்ற கட்சிக்காரர்கள் மாத்திரம்தானே. அவர்கள் வேட்பாளர் ஆகுவார்கள். அல்லது தமக்கு வேண்டியவர்களை வேட்பாளர் ஆக்குவார்கள். அப்படியெனில் வேட்பாளர்களை கட்சித் தலைவர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டியது அவசியம்தானே. அதைவிட முக்கியம் இந்த தேர்தலில் எப்படி எப்படியெல்லாம் பிரச்சாரம் செய்யவேண்டும் என்றும் பாடம் எடுக்க வேண்டியிருக்கின்றதே.

---

**எஸ். நிதர்சன்,**
**கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** முன்னர் என்றால் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே வாக்காளர்களைக் கவர்வதற்காக அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்து அறிவிப்பு செய்வார்கள். அத்தியாவசிய பாவனை போன்ற மின்சாரம் தண்ணீர் போன்றவற்றின் விலையைக் குறைப்பார்கள். ஆனால் இப்போது என்னடா என்றால் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறுகின்றது. மின்சார கட்டணம் வரலாற்றில் இல்லாதவாறு அதிகரிக்கப்படுகின்றதே. எப்படி மக்கள் ஆட்சியில் இருப்பவர்களுக்கு வாக்களிப்பார்கள்.?

**வியுக்தியார்:** மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்பதற்காகத்தான் தேர்தலே நடத்துவதில்லை என்று முடிவெடுத்து விட்டார்கள் என்பது புரியவில்லையா? நாடு இன்றைய பொருளதார நெருக்கடியிலிருந்து மீண்டால்தான் நாட்டை மீட்டெடுத்தோம் என்று கூறிக்கொண்டு மக்களிடம் வாக்குகேட்டுவரலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது. நாட்டை மீட்டெடுக்க இன்று உள்ள ஒரே தெரிவு சர்வதேச நாணய நிதியம் மட்டும்தானே. அவர்கள் சொல்வதெல்லாவற்றையும் கேட்டு பாடசாலை மாணவர்கள் ஆசிரியரின் சொல் கேட்டு நடப்பது போல நடந்தால்தான், அவர்களின் கடைக்கண்பார்வை கிடைக்கும் என்றால் அவர்கள் சொல்வதெல்லாவற்றையும் மறுபேச்சின்றி செய்ய வேண்டியிருக்கின்றது.

---

**செல்லத்துரை அனுசியா, கோவில் வீதி, நல்லூர்**

**கேள்வி:** உள்ளூராட்சி தேர்தல் நடாத்துவதற்கு கடந்த வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டதே. அப்படியெனில் ஒதுக்கப்பட்ட அந்த நிதி எங்கே போனது? அதனை தேர்தல் நடத்துவதற்காக வழங்காமல் இருப்பதை எப்படி எடுத்துக் கொள்ளலாம்?

**வியுக்தியார்:** வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப் பட்டாலும் அந்த வரவுசெலவுத்திட்டத்திலேயே வருமானத்திலும் பார்க்க செலவுகள் அதிகமாகத்தானே இருந்தது. அப்போ அந்த துண்டுவிழும் தொகையை கடன் மூலம் மாத்திரம்தானே நிரப்ப முடியும். இப்போது நாடு இருக்கும் நிலையில் யாரும் கடன் கொடுக்காவிட்டால், வரவுசெலவுத்திட்டத்தில் வருமானத்தை வைத்து அத்தியாவசிய செலவுகளை மாத்திரம் சமாளித்து வருகின்றது அரசு. ஒதுக்கிய பணத்தை கொடுங்கள் என்றால், பானையில் சோறு இருந்தால்தானே அள்ளிப்போடுவதற்கு? நாட்டின் வருமானத்தை அதிகரித்து செலவை ஈடுசெய்ய புறப்பட்டால், வரி அதிகரிப்புக்கு எதிராகவும் நாமே போராடுகின்றோம். ஆகக்குறைந்தது, கடன்பெறக் கூடிய தகுதியையாவது நமது நாடு அடையும்வரை பொறுத்திருக்கத்தான் வேண்டும்போலத்தான் தெரிகின்றது.

---

**வி. தனுசன், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** மன்னார் மற்றும் பூநகரியில் அதானி குழுமத்திற்கு மீண்டும் ஒரு காற்றாலை மின்உற்பத்தித்திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதே. ஏற்கனவே தலைமன்னாரில் அமைக்கப்பட்ட இதுபோன்ற திட்டத்தால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்ககப்பட்டிருப்பதாக கூறப்பட்டுவந்த நிலையில் மற்றுமொரு பெரிய திட்டத்திற்கு எந்தவித அடிப்படை ஆய்வுகளும் செய்யாமலே இப்போது அனுமதி வழங்கப்பட்டிருகின்றதே?

**வியுக்தியார்:** இதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது. அண்மையில் சில மாதங்களாக தமிழர் பிரச்சினை, பதின்மூன்று அமுல் என்று இந்தியத்தரப்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டபோதே அடுத்து என்ன நடக்கும் என்பது தெரிந்ததுதானே. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதுபோல, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இந்தியா எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஓடி வந்து உதவும் என்று எதிர்பார்த்தால் மட்டும் போதுமா? சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கே யார் யாரையோ எல்லாம் தாஜா பண்ண வேண்டியிருக்கும்போது, நடக்கின்ற விசயங்களை பார்த்தால் இப்படியெல்லாம் நடப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லையே.

# அலை மோதும் காதலே..!

குரு அரவிந்தன்

வெளியே பனி கொட்டிக் கொண்டிருந்தது. பனிப்புகாரில் பாதை தெளிவாகத் தெரியவில்லை. பனிமூட்டத்தில் போகிறபாதை தெளிவாகத் தெரியாவிட்டாலும் செல்லவேண்டிய இடத்தை அடைவதில் சுகி குறியாக இருந்தாள்.

மனசு தவிப்பதைவிட இந்தக் குளிரிலும் உடம்பு தகிப்பதே பெரிய வேதனையாக இருந்தது. எப்படியும் மனதில் இருப்பதை சுபாவிடம் கொட்டிவிட வேண்டும் என்ற ஆதங்கத்தோடுதான் அக்காவின் வீடு தேடி வந்திருந்தாள்.

'ஏன்டி இத்தனை நாளாய் ஊமையாய் இருந்தாய்?' சுபா தங்கையை அதட்டினாள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்த சுகி கண்களைத் துடைத்துக் கொண்டு அக்காவை நிமிர்ந்து பார்த்தாள்.

'எப்படி அக்கா இதை வெளியே சொல்லுறது?'

'இப்பமட்டும் என்னவாம், வெளிக்கிட்டு என்னோட வா, போவம்.'

'எங்கேயக்கா..?'

'டாக்டரிட்டைதான்!'

'வேண்டாமக்கா, நான் எங்கேயும் வரவில்லை.'

'குடும்ப வைத்தியரிட்டைப் போனியா?'

'போனேன்..!'

'என்னவாம்?'

'எல்லாம் செக் பண்ணிப் பாத்தாச்சு!' சுகி விம்மினாள்.

'என்ன சொன்னவர் எண்டு சொல்லிப்போட்டு அழேன்'

அவள் சற்று நேரம் மௌனம் காத்தாள்.

இதற்கு என்ன பதில் சொல்வது? எப்படிச் சொல்வது?

'உன்னிலை ஏதாவது பிழையா?' என்றாள் சுபா

அவள் பதில் சொல்லாமல் தலை குனிந்திருந்தாள்.

'பலோப்பின் குழாயில ஏதாவது தடையா..? கருப்பையில் ஏதாவது கோளாறா?'

'இல்லை' என்று மறுத்தாள்.

'நல்ல ஆரோக்கியமாகத் தானே இருக்கிறாய், அப்போ என்னதான் பிரச்சனை என்று சொல்லித் தொலையேன்' சுபா பொறுமை இழந்து கத்தினாள்.

சுகியின் மௌனம் எதையோ சொல்லத் துடிப்பது போல இருந்தது.

கொஞ்ச நாளாய் நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன், மனசுக்கை இப்படியே வைச்சுக் குமைஞ்சு கொண்டிருந்தால் உனக்குக் கெதியாய் டிப்பிறசன்தான் வரும், சொல்லிப்போட்டன்.' குரலை உயர்த்தி அதட்டினாள் சுபா.

தங்கையின் வீட்டில் என்னதான் நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத இயலாமையால், தங்கைமீது கோபப்பட்ட சுபா ஒரு கணம் நிதானித்துப் பொறுமை காத்தாள்.

சுகி எப்பொழுதுமே கொஞ்சம் தயக்கம் காட்டித் தான் எதையும் சொல்வாள். தன்னுடைய வார்த்தைகள் மற்றவர்களைப் பாதித்துவிடுமோ என்ற அச்சம் எப்பொழுதும் அவளிடம் இருந்தது.

முள்ளிலே சிக்கிய சேலையின் நிலையில்தான் சுகி இருக்கிறாள் என்பதால் கவனமாகச் செயற்பட வேண்டும், அவசரப்பட்டால் எல்லாமே மறைக்கப்பட்டு விடலாம். எனவே கோபப்படாமல் நிதானமாகத்தான் அவளிடம் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும் என்று முடிவெடுத்தாள்.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் ஏற்படும் பிரச்சனைகளில் பாலியல் சிக்கல்களும் முக்கிய காரணமாகிறது என்பதை சுபா அறிந்து வைத்திருந்தாள். பொதுவாக பெரும்பாலான பாலியல் பிரச்சனைகள் மனம் சார்ந்ததாகவே இருந்தாலும், உடல் ரீதியான காரணங்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. ஏனென்றால் இந்தப் பிரச்சனை ஆண் பெண் என்ற வேறுபாடில்லாமல் இருபாலரையும் பாதிக்கிறது.

என்னதான் நாகரிகத்தில் முன்நின்றாலும், இன்றுள்ள சமூக அமைப்பு உளம் சார்ந்த நோய்கள் பற்றிப் பிறரிடம் பேசுவதையே தவறாக எண்ணுகிறது. சுபாவும் இங்கேயே படித்தவள் என்பதால் இதைப் புரிந்து கொண்டு தங்கையின் விடயத்தில் சூழ்நிலைக்கேற்ப ஒரு மனநல ஆலோசகர் போலச் செயற்பட்டாள்.

சுகியும் இந்த மண்ணிலே வளர்ந்து படித்தவள். பாலியல் விழிப்புணர்வு உள்ளவள் என்பதால் சுபா தங்கையிடம் தயங்காமல் கேட்டாள்.

'சரி, இது ஒன்றுமே இல்லை என்றால்..? நான் ஒன்று கேட்கட்டா?'

'என்ன?'

'கோபிக்கமாட்டியே?'

'இல்லை, கேளக்கா!'

'அப்போ அவனிலை ஏதாவது பிழையா?'

அதிர்ந்து போனவள்போல சட்டென்று சுபாவை நிமிர்ந்து பார்த்தாள் சுகி.

'அ.. க்.. கா..!'

கலங்கிய அவளது கண் முன்னால் கூப்பிய கரங்கள் ஊஞ்சலாடின. அன்று இப்படித்தானே கூப்பிய என் கைகளைப் பிடித்துக் கொண்டு அன்று அவன் கோபப்பட்டான்.



'சொன்னால் கேட்கமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாய் சுகி, இப்ப எப்படிப் பழகுகிறோமோ அதேபோல நாங்கள் நல்ல நண்பர்களாய்ப் பழகுவோமே'

'அப்போ நீ என்னை ஏமாத்தப் பாக்கிறியா?'

'உன்னை ஏமாத்தக் கூடாது என்ற படியால்தான் இந்தக் கலியாணமே வேண்டாம் என்று சொல்லுறேன்.'

'நீ சுகமாய் சொல்லிவிடுவாய் பாதிக்கப்படப் போவது நானல்லவா'

'இல்லை சுகி, கலியாணம் பேசுகினம் என்று சொன்னியே, உனக்குப் பொருத்தமானவனைத்தான் அப்பா தெரிந்தெடுத்திருப்பார். அதையேன் நீ மறுக்கிறாய்?'

'அப்பா அம்மா தங்கட கடமையைச் செய்யினம், கலியாணம் கட்டப்போறது நான்தானே'

'அவனை உனக்குப் பிடிச்சிருந்தால் கட்டிக்கோ'

'என்ன சொல்லுறாய்? ஜோக்கா?'

'இல்லை உண்மையாத்தான் சொல்லுறேன்'

'அப்போ நாங்க பழகினதெல்லாம்?'

'என்ன சுகி இப்படிச் சொல்லுறாய். எங்களுக்குள்ள இருந்த உறவு நட்பு மட்டும்தான், ஜஸ்ட் ஏ பிறண்ட்ஷிப் அவ்வளவுதான்'

'அப்போ காதலர் தினத்திலன்று ஒற்றை ரோஜா கொண்டு வந்து என்னிடம் நீட்டினாயே, மறந்திட்டியா?'

'ஆமா அது நட்பின் அடையாளமாகத் தான் நீட்டினேன். நீதான் அதைத் தப்பாய் எடுத்திட்டாய்.'

'போதும் இப்படி சொல்லி என்னை ஏமாத்திவிடலாம் என்று நினைக்கிறியா?'

'இந்த மண்ணில் எல்லாரும் கொஞ்சம் நெருங்கித் தான் பழகுவினம். பள்ளிகூடத்தில, வேலைசெய்யிற இடத்தில அதுக்காக அவையைத்தான் கலியாணம் கட்டவேணும் எண்டில்லை.'

சுகிக்குக் கோபம் பொத்திக் கொண்டு வந்தது.

'சுகி பிளீஸ், நான் சொல்லுறதைக் கொஞ்சம் கவனமாய் கேள், என்னால உன்னைத் .. திருப்தி..!'

'எனக்கு இந்த நொண்டிச் சாக்கு ஒண்டும் வேண்டாம். தப்பிக்கப் பாக்காதை, இந்தக் கலியாணம் நடக்காட்டி..!'

'சுகி இப்ப ஏன் கோபப்படுகிறாய்?'

'இது மட்டும் நடக்காட்டி என்னை உயிரோடு பார்க்க மாட்டாய்.'

எப்படியோ அன்று அவனை மிரட்டிச் சம்மதிக்க வைத்தாள். அவன் சொல்ல வந்தது எதையுமே காதில் வாங்காமல் கலியாணமும் நடந்து முடிந்துவிட்டது.

ஆனால் அன்று காதல் அவளைச் சிந்திக்கவிடவில்லை, இன்று சுகியின் தேவை வேறாக இருந்தது.

காதலர்களுக்கு காதலிக்கும்போதோ, திருமணமான ஆரம்ப காலங்களிலோ எந்தக்குறையும் பெரிதாகத் தெரிவதில்லை. காதல் மயக்கத்தில் நல்ல பக்கத்தை மட்டுமே அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். சில குறைகள் இருந்தாலும் தங்களுடைய இல்லற வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிடுமோ என்று பலர் இந்தக் குறைகளை மறைத்து விடுவார்கள்.

கணவனிடம் இருந்த குறைகளைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருந்த சுகியின் சங்கடத்தைப் புரிந்து கொண்ட அக்கா சுபா அவளிடம் கதை கொடுத்து மெல்ல மெல்ல அவள் மனதில் உள்ளதை அறிந்து கொண்டாள்.

'அப்ப ஏன்டி இதை இத்தனை நாளாய் எங்களிட்ட சொல்லவில்லை'

'அவர் பாவமக்கா'

'பாவமா? பாவம்பார்த்தா, உன்னுடைய வாழ்க்கை..?'

'நானாய் விரும்பித்தானே அவரைக் கலியாணம் செய்தேன்'

'நல்லாயிருக்கு, தன்னுடைய குறைபாட்டை உன்னிடம் மறைச்சது குற்றமில்லையா?'

'அவர் சொன்னாரக்க, நான்தான் கேட்கவில்லை'

'என்னடி சொல்லுறாய்?'

'ஆமாக்கா அவர் தன்னுடைய இயலாமையை பற்றி என்னிடம் அப்போ சொன்னார். அதை நான்தான் வேடிக்கையாய் எடுத்துவிட்டேன். என்னைவிட்டுப் பிரிவதற்கு அவர் சொல்லும் சாட்டாய் இருக்குமோ என்று நான்தான் மறுத்துவிட்டேன்.'

'அதற்கு நீ என்ன சொன்னாய்?'

'எப்படியக்கா வெளிப்படையாய் சொல்லுறது. அதனாலே மனசைத்தான் விரும்பிறேன் என்று அப்ப சொன்னேன். ஆனால் இப்பதான் மனசுக்கு மட்டுமல்ல உடலுக்கும் தேவை இருக்கிறது என்கிறது புரியுது'.

'சுகி கலியாணம் என்கிறது ஆயிரங்காலத்துப் பயிர் என்று பெரியவங்க சும்மாவா சொன்னாங்க'

'தெரியுமக்கா, புரிந்துணர்வு இருந்தால் இது ஒன்றும் பெரிய விடையமில்லை என்றுதான் அப்போது நினைத்தேன்'.

'இருக்கலாம், ஆனால் பரம்பரை பரம்பரையாய் சந்ததி தொடருமல்லே, உன்னுடைய பரம்பரைக்கு இத்தோட முற்றுப்புள்ளி வைக்கப்போறியா?'

'நடந்தது நடந்து போச்சு, இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்?'

'இருந்தாலும் அவனுக்கு மதி எங்கபோச்சு?'

'கலியாணமே செய்ய மாட்டேன் என்று முற்றிலும் மறுத்துவிட்டாரக்கா, நான்தான் அவரை மிரட்டி இந்தக் கலியாணத்தைச் செய்தேன்'

'அவனை நீ மிரட்டினியா?'

'ஆமாக்கா, ஒருத்தருக்கும் தெரியாது, தற்கொலை செய்திடுவேன் என்று மிரட்டித்தான் இந்தக் கலியாணமே நடந்தது.'

'நீ இந்தளவு தூரத்திற்குப் போனியா சுகி?'

'அந்த நேரம் எனக்கு மானப்பிரச்சனை, சொந்த பந்தம் என்ன சொல்லுமோ என்ற பயம் வேறு, எனக்கு வேறு வழியே தெரியல்லே, அதனாலேதான் இந்தக் கலியாணம் நடந்தாலே போதுமென்று ஒற்றைக்காலிலே நின்றேன்.'

நாளாக நாளாக உள்ளத்தைக் காதலிக்கிறேன் என்பதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமாகாது, உடலின்பம் தேவைப்படும்போது குறைபாடுள்ள தம்பதியினருக்குள் கருத்து வேறுபாடு தோன்றலாம். அதன் வெளிப்பாடுதான் இத்தனை நாட்களும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்த சுகியின் இந்த அழுகையும் ஏக்கமும் என்பதை சுபா புரிந்து கொண்டாள்.

'மகிழ்ச்சியான திருமண வாழ்க்கை வாழ, துணையின் உற்சாக ஒப்புதல் இல்லாமல் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம்' என்று குடும்ப வைத்தியர் அன்று குறிப்பட்ட அந்த அறிவுரையையும் மீறித்தான் பிடிவாதமாக சுகி இந்தத் திருமணத்தைச் செய்தாள்.

'தன்னை அவன் ஏமாற்றிவிடுவானோ என்ற பயயுணர்வு மட்டும்தான் அன்று அவளிடம் இருந்தது. ஆனால் இன்று அதை எல்லாம் கடந்து அவளது தேவை வேறாக இருந்தது. மனசு தவிப்பதைத் தாங்கிக் கொள்ளலாம், உடம்பு தகிப்பதை எவ்வளவு காலம்தான் தாங்கிக் கொள்வது?' அதனால்தான் அக்காவிடம் வந்து வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள்.

'உன்னுடைய அவசரபுத்தி, பிடிவாதம் எல்லாம் உன்னை எங்கே கொண்டுபோய் வைத்திருக்குத் தெரியுதா? என்றாள் சுபா.

'தெரியுதக்கா, இப்ப என்ன செய்யட்டும்? என்றாள் சுகி.

'டாக்டரிடம் கொண்டுபோய் காட்டச் சொல்லு. இப்பதான் எத்தனையோ வசதிகள் இருக்கே, உன்னிலை ஒரு குறையும் இல்லாட்டிக் கவலையைவிடு.'

'பிள்ளைப்பாக்கியம் கிடைக்குமாக்கா?'

'அதுதான் இப்ப எத்தனையோ வழி இருக்கு என்று சொன்னேனே!'

'அவர் டாக்டரிடம் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார்.'

'டாக்டரிடம் போகாவிட்டால், நீ சட்டத்தரணியிடம் போகவேண்டி வரும் என்று மிரட்டிப்பார். அதற்கும் சம்மதிக்காவிட்டால் அடுத்த படி என்னவென்று பார்ப்போம்'

'வருவாரா..?'

'எப்படி மிரட்டணும் என்று உனக்குச் சொல்லித்தரணுமா?'

'பார்க்கலாம்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் சுகி.

ஆனாலும் தவறு தன்பக்கமும் இருந்ததால் கணவனைக் காட்டிக் கொடுக்க அவள் விரும்பவில்லை. இதைப்பற்றி யாரிடமும் சொல்லிவிட வேண்டாம் என்றும் அக்காவிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு வீடு நோக்கித் திரும்பினாள் சுகி.

பெண்களைப் பொறுத்த வரையில் பழமை பேசிக் கொண்டிருப்பதைவிட, நல்ல மாற்றங்களை மனதார ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பது நல்லது தான் என்று நினைத்தாள்.

இது ஒன்றும் இந்த நாளில் பெரிய குறையில்லை, அக்கா சொன்னதுபோல, இதற்கெல்லாம் சமுதாயம் ஏற்றுக் கொண்ட பல மாற்று வழிகள் இருக்கின்றன. வைத்தியரிடம் சென்றால் இது போன்ற குறைகளை நீக்கிவிடலாம் என்ற நம்பிக்கை மனதில் துளிர் விட்டிருந்தது.

காலம் மட்டுமல்ல, அவள் வாழும் நாடும் மாறிவிட்டிருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். இப்போ பனி கொட்டுவது நின்று, மூடுபனி நீங்கி விட்டதால் போகும்பாதை அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

# காஷ்மீரிலிருந்து துரத்தப்பட்ட பண்டிட்களின் அவலம்! சொந்த மண்ணுக்கு திரும்ப முடியாத துயரம்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

காஷ்மீரிலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்ட காஷ்மீர பண்டிட்கள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தங்களுக்கென தனி தன்னாட்சி பகுதியை நிறுவித்தர "பனூன் காஷ்மீர்"எனும் இயக்கத்தை நடத்தி வருகிறார்கள்.

தங்களை காஷ்மீரில் மறு குடியமர்த்தவும், காஷ்மீரை விட்டு தங்களை விரட்டியடிக்கப்பட்ட போது ஆயிரக்கணக்கான காஷ்மீரப் பண்டிட்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரிக்கக் கோரி போராட்டங்கள் மூலம் இந்திய அரசிடம் கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

காஷ்மீர பண்டிட்கள் (Kashmiri Pandits) எனும் காஷ்மீர இந்துக்கள், இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் காஷ்மீர் சமவெளியில் நீண்ட காலமாக வாழ்ந்தவர்கள்.

காஷ்மீர் ஆயுத மோதல்களால் தங்களின் உயிருக்கும் உடைமைகளுக்கு அச்சம் ஏற்பட்ட காரணத்தினால், காஷ்மீர் சமவெளியை விட்டு, ஜம்மு, தில்லி போன்ற நகரங்களில் 1985-ஆம் ஆண்டு முதல் அகதிகளாக வெளியேறி வாழ்கின்றனர்.

**முகலாயர் ஆட்சியில் பண்டிட்கள்**

முகலாயர் ஆட்சியில் அக்பர் கி பி 1587-இல் காஷ்மீர் சமவெளியை கைப்பற்றிய பொழுது, காஷ்மீர் இந்துக்களுக்கு பண்டிட்கள் எனும் பட்டத்தை வழங்கியதுடன், வேளாண்மை நிலங்களையும் அரச பதவிகளையும் வழங்கி கௌரவம் செய்தார்.

தில்லி சுல்தானகத்திற்குப் பின் வந்த முகலாயர் ஆட்சியில் பெரும்பான்மையான காஷ்மீர பண்டிட்கள் இசுலாமிய சமயத்திற்கு மாறினர். எஞ்சியவர்கள் காஷ்மீர இந்துசமயத்தை பின்பற்றி வருகிறார்கள்.

இந்திய சுதந்திரத்திற்கு முன்னர், 1890 ஆண்டில் காஷ்மீர பண்டிட்கள், மொத்த மக்கள்தொகை 682,000 ஆகவும் கணிப்பிடப்பட்டது.

**காஷ்மீரி இந்துக்கள் வெளியேற்றம்**

காஷ்மீரி இந்துக்கள் வெளியேற்றம் இந்தியப் பிரிவினையின் போது உண்டான மதக் கலவரத்தின் போதும், அதன் பின் 1950-இல் நிறைவேறிய நிலச்சீர் திருத்த சட்டத்திற்கு பிறகும், பெரும்பான்மையான வேளாண் நில உடமையாளர்களான காஷ்மீர பண்டிட்களில் 80 வீதமானோர் தங்கள் உடமைகளை இழந்து காஷ்மீரை விட்டு குடும்பத்துடன் வெளியேறினர்.

மிகப் பெரும் இடம்பெயர்வாக 19 ஜனவரி 1990 அன்று இரவில் ஆயுத்தாரிகளின் வெறியாட்டத்தால், ஆயிரக்கணக்கான காஷ்மீர பண்டிட்கள் தங்கள் குடும்பங்களுடன் காஷ்மீர் சமவெளியை விட்டு, ஜம்மு சண்டிகர் மற்றும் தில்லியில் உள்ள முகாம்களில், சொந்த நாட்டில் அகதிகளாக குடிபெயர்ந்தனர்.

**பல பண்டிட்கள் படுகொலை**

1997-இல் இயற்றப்பட்ட ஜம்மு காஷ்மீர் புலம்பெயர்ந்தோரின் அசையாச் சொத்துகள் பாதுகாப்புச் சட்டத்தின் படி, காஷ்மீரப் பண்டிட்கள், காஷ்மீர் சமவெளியில் விட்டுச் சென்ற அசையாச் சொத்துகளை பிறர் விற்கவோ அல்லது உரிமை கொண்டாடவோ முடியாது. மேலும் இச்சட்டத்தை மீறி காஷ்மீர பண்டிட்களின் நிலங்களை பயன்படுத்துவர்கள் அதற்கான ஈட்டுத் தொகையை, நில உரிமையாளர்களான காஷ்மீரப் பண்டிட்களுக்கு செலுத்த வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதம் தொடங்கியதில் இருந்து 1990 வரை குறைந்தது 399 காஷ்மீரி பண்டிட்டுகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 1990 முதல் 20 ஆண்டுகளில் மொத்தம் 650 காஷ்மீரிகள் உயிரிழந்துள்ளனர் என்றும் காஷ்மீரி பண்டிட் சங்கர்ஷ் சமிதியின் தலைவர் கூறியுள்ளார்.

1990 ஆண்டு மட்டுமே 302 காஷ்மீரி பண்டிட்டுகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறார்.

1989 முதல் 2004 வரை காஷ்மீரில் 219 பண்டிட்டுகள் கொல்லப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் அரசு 2010ல் சட்டப் பேரவையில் தெரிவித்தாலும் உண்மையில் இதனைவிட பலர் கொல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

அந்த நேரத்தில் காஷ்மீரில் 38,119 பண்டிட் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன, அதில் 24,202 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்றும் மாநில அரசு கூறியது.

**புராதன 200 இந்து கோவில்கள் அழிப்பு**

மறைக்கப்பட்ட வரலாறாக காஷ்மீரில் சிறுபான்மை இந்து சமூகத்திற்கு எதிரான வன்முறையின் போது 200க்கும் மேலான கோவில்கள் பாரிய அளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் வசிக்கும் காஷ்மீரி இந்துக்கள் 1990 ஆம் ஆண்டு வன்முறையின் போது அழிக்கப்பட்ட 200 க்கும் மேற்பட்ட இந்து கோவில்களை மீட்டெடுத்து, புனரமைக்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடரும் வன்முறையின் போது சேதப்படுத்தப்பட்ட கோவில்கள், இன்னும் பயன்படுத்த முடியாமல் சேதமடைந்த நிலையில் உள்ளன.




காஷ்மீர் பள்ளத்தாக்கில் தொடர் வன்முறை மற்றும் வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள், 1990 களில் இடிக்கப்பட்ட இந்து கோவில்களை மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு செய்வதற்கான கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு மாநில சட்டமன்றத்தில் முதல்வர் உமர் அப்துல்லா அரசாங்கம் அறிவித்தபடி, பள்ளத்தாக்கில் உள்ள 438 கோயில்கள் பல ஆண்டுகளாக சேதமடைந்துள்ளன என்று அரசாங்க புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

**சிறிநகரில் கோவில்கள் எரிப்பு**

1990களில் சிறுபான்மை இந்து சமூகத்திற்கு எதிரான வன்முறையின் விளைவாக ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம்




முழுவதும் சிறிநகர், அனந்த்நாக், பாரமுல்லா, பத்காம் மற்றும் புல்வாமா மாவட்டங்களில் கோயில்கள் பெருமளவில் சேதப்படுத்தப்பட்டன

சிறிநகரில் மட்டும் 57 கோயில்கள் சேதப்படுத்தப்பட்டன, அனந்த்நாக் மாவட்டத்திலும் 56 கோவில்கள் சேதமடைந்தன. இத்தாக்குதல்களின் போது, பல கோவில்கள் எரிக்கப்பட்டன. தெய்வ சிலைகள் இழிவுபடுத்தப்பட்டு, உடைக்கப்பட்டன.

காஷ்மீரி பண்டிட் சமூகத்தைச் சேர்ந்த ஆர்வலர்கள், பல ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கோவில்களை கவனிக்க தவறியதால், இந்த கோயில்களை முழுமையாக மீட்டெடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். காஷ்மீரி பண்டிட் குடியிருப்பாளர் அமைப்புக்கள் கோவில் பாதுகாப்பிற்கான மசோதாவை கோரியுள்ளனர்.

**காஷ்மீரில் சிறுபான்மை இந்துக்கள்**

காஷ்மீரில் இந்துக்கள் சிறுபான்மையாக இருந்தும், பல்வேறு தொழில்கள் செய்து, தங்களது பொருளாதாரத்தையும், கலாச்சாரத்தையும் நிலைநிறுத்திய காஷ்மீர் பண்டிட்கள் திடீரென்று நாட்டில் அகதிகளாகிப் போயினர்.

அவர்களின் வளம், கலாச்சாரம் எல்லாம் ஒரிரு நாட்களில் மண்ணோடு மண்ணாக, உயிர் பிழைத்தால் போதும் என்ற ஒரே குறிக்கோளோடு இந்தியாவில் இந்துக்கள் அதிகம் வாழும் மாநிலங்களை நோக்கிச் சென்று வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சிதறிப் போன காஷ்மீர் பண்டிட்களின் பல குடும்பங்கள் சிதைந்து போயின. செழிப்போடு வாழ்ந்தவர்கள் பலர் தெருவோரம் சுருண்டு விழுந்து செத்தார்கள். எஞ்சியவர்கள், தங்களது வாழ்க்கையை மீண்டும் சீரமைக்கத் தலைப்பட்டனர்.

**ஜனவரி 19, 1990 வெளியேற்றம்**

33 ஆண்டுகளுக்கு முன்னர், ஜனவரி 19, 1990 அன்று ஹிஜ்புல் முஜாஹிதீன் என்ற இஸ்லாமிய தீவிரவாத அமைப்பின் மிரட்டலுக்குப் பயந்து இரவோடு இரவாக சுமார் 8 லட்சம் காஷ்மீர் பண்டிட்கள் அந்த மாநிலத்திலிருந்து வெளியேற வேண்டி வந்தது.

காரணம், அவர்கள் காஷ்மீரில் தொடர்ந்து வசிக்கும் மூன்றில் ஒரு நிபந்தனையை கடைபிடிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. முதலாவது, கட்டாயாமாக மதம் மாறு! இரண்டாவது, காஷ்மீரை விட்டு வெளியேறு! மூன்றாவது, மீறி இருந்தால் செத்து மடியத் தயாராக இரு! அவ்வளவுதான், உயிரையும் தங்களது குடும்பப் பெண்கள், குழந்தைகளின் மானத்தையும் பாதுகாத்துக் கொள்ள, லட்சக்கணக்கில் காஷ்மீர் பண்டிட்கள் வெளியேற வேண்டிய அவலம் ஏற்பட்டது.

காஷ்மீரப் பண்டிட்களின் போராட்ட அமைப்புகளான பனூன் காஷ்மீர், அகில இந்திய காஷ்மீரி சமாஜம், அகில இந்திய காஷ்மீரி பண்டிதர்கள் மாநாடு நீண்ட காலமாக இந்த மக்களின் உரிமைக்காக போராடி வருகின்றனர்.

1990களின் பின்னர் அதிகளவில் தீவிரவாதம் தொடங்கிய பிறகு, காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழ்ந்த 3.5 லட்சம் காஷ்மீரி பண்டிட்டுகளில் பெரும்பாலானோர் தங்கள் சொந்த மண்ணை விட்டு வெளியேறி ஜம்மு அல்லது நாட்டின் பிற பகுதிகளில் குடியேறினர்.

தற்போதய 370 -வது பிரிவு ரத்து செய்யப்பட்டதை அடுத்து சிறிது துணிவுடனும் நிறைய நம்பிக்கையுடனும் "ஹம் வாபஸ் ஜாயேங்கே (நாங்கள் மீண்டும் போவோம்) " என்று ஒரு கோஷத்துடன் உத்வேகமாய்க் கிளம்பி இருக்கிறார்கள்.

'பனூன் காஷ்மீர்' இயக்கம்,தங்களை காஷ்மீரில் மறு குடியமர்த்தவும், காஷ்மீரை விட்டு தங்களை விரட்டியடிக்கப்பட்ட போது ஆயிரக்கணக்கான காஷ்மீரப் பண்டிட்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரிக்கக் கோரி போராட்டங்கள் மூலம் இந்திய அரசிடம் கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

# தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கமுடியாத இக்கட்டுநிலை

## சுட்டிக்காட்டுகிறது மின்சார சபை

கொழும்பு, பெப். 26

இலங்கை மின்சார சபையில் பொறியியலாளர்கள் பற்றாக் குறை நிலவுவதால் எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது குறித்து மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன தெரிவிக்கையில்-

கடந்த ஒரு வருடத்தில் மின்சார சபையின் 72 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிந்தவர்கள். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்றவேண்டும். ஆனால் இன்று 100 பேரே பணிபுரிகின்றனர்.

இந்த பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்தவேண்டிய நிலை கூட ஏற்படலாம். அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் - என்றார். (அ)

# பல்கலைக்கழக பிக்கு மாணவர்களின் ஒழுக்க மீறல்கள் ஆராய நடவடிக்கை

கொழும்பு, பெப். 26

பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று அதிகாரங்களை விடுதி பொறுப்பாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பிக்கு மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை, பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், ஒழுக்காற்று அதிகாரியையோ அல்லது அது தொடர்பான அதிகாரங்களைக் கொண்ட அதிகாரியையோ நியமிக்கவில்லை.

புதிய அதிகாரங்கள் வழங்கப்படுவதன் மூலம் பிக்கு மாணவர்களின் ஒழுக்க மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுக்க முடியும் என அதன் உபவேந்தர் பேராசிரியர் நெலுவே சுமனவன்ச தேரர் தெரிவித்தார்.

இதேவேளை, பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக எதிர்வரும் திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது. (அ)

# நீர்கொழும்பு மீனவர் பிரச்னைகளை நேரில் ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, பெப். 26

நீர்கொழும்பு களப்பு ஆழப்படுத்தும் செயற்பாடுகள் உரிய ஆய்வுகளின் அடிப்படையில், எந்தத் தரப்பினரையும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நீர்கொழும்பு களப்பின் 'யக்கா வங்குவ' எனும் பகுதியை பார்வையிட்ட பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்கொழுப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஆழ்கடல் மீன்பிடி கடற்றொழிலாளர்களின் கடல் போக்குவரத்து பாதையாக உள்ள நீர்கொழும்பு களப்பின் யக்கா வங்குவ பகுதியை புனரமைத்து தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, குறித்த பகுதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், அதனை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கருவாடு உற்பத்தி பாதிக்கப்படும் எனவும், அதனால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இன்னொரு தரப்பினால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.



இந்நிலையில், சம்பந்தப்பட்ட பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்ததுடன் பிரதேச மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார். (அ

# தேர்தல் பண விவகாரத்தில் உடனடியாக தலையிடுங்கள்

## சபாநாயகருக்கு ஆணைக்குழு கடிதம்

கொழும்பு, பெப். 26

உள்ளூராட்சித் தேர்தலுக்கான பணம் தொடர்பான பிரச்சினையில் தலையிடுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.



நேற்று முன் தினம் இரவு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தல் அன்றைய தினம் நடைபெறாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் காரணமாக உரிய தினத்தில் வாக்கெடுப்பை நடத்த முடியாது என சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

**26.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

**26.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பதவி விலக அழுத்தம் கொடுத்தால் சுயாதீன உறுப்பினராகவுள்ள மயந்த?

கொழும்பு, பெப். 26

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க, அந்தப் பதவியிலிருந்து விலகமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அவரிடம் வினவியபோது, பதவி விலகப் போவதில்லை எனக் கூறினார் என எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலக அழுத்தம் கொடுக்கப்பட்டால், மயந்த திஸநாயக்க, எதிர்க்கட்சியின் சுயாதீன உறுப்பினராக பாராளுமன்றில் செயற்பட வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்கவை நியமிப்பதில் சபாநாயகரின் பங்கு குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றில் வாதவிவாதங்கள் இடம்பெற்றன.

ஏற்கனவே இந்தக் குழுவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமை வகித்து வந்தநிலையில், பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் பெயரை, எதிர்க்கட்சிகள் பிரேரித்திருந்த நிலையில், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்கவின் பெயரை அரசாங்க தரப்பு பிரேரித்தது.

இந்த நிலையில் அதிக வாக்குகள் அடிப்படையில் மயந்த திஸநாயக்க அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இது நேற்று முன்தினம் பாராளுமன்றில் வாதவிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது. (அ)



# தேர்தல் வேண்டும்!

## மஸ்கெலியாவில் போராட்டம்

கொழும்பு, பெப். 26

உள்ளூராட்சிசபைத் தேர்தலை உடன் நடத்துமாறு வலியுறுத்தி மஸ்கெலியா நகரில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான 'நவ லங்கா சுதந்திரக் கட்சி'யின் நுவரெலியா மாவட்ட பிரதான அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

குறித்த கட்சியின் சார்பில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக 3, 500 ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# நிதி அமைச்சுக்கு எதிராக வழக்கு! தேசிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, பெப். 26

தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்குமாறு நிதி அமைச்சிற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் தினங்களில் இது தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்படும் என அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எதிராக, எதிர்வரும் தினங்களில் வழக்கு தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அரச அதிகாரிகள் தேர்தலை நடத்துவதில் தடையாக செயற்படுகின்றமை தொடர்பிலும் நடவடிக்கை எடுப்போம் எனவும் மக்களின் வாக்குரிமையை பாதுகாத்து இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் மேலும் கூறினார்.

இதனிடையே அதேபோன்று தேர்தல் தொடர்பாக நீதிமன்ற உதரவுக்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப்படாது என அறிவித்த ஜனாதிபதிக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். (அ)

# கொக்குளாய் பகுதியில் வீட்டுக்குள் புகுந்த அரியவகை காட்டு விலங்கு

முல்லைத்தீவு, பெப். 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் அரியவகை காட்டு விலங்கினமான அழுங்கு எனப்படும் விலங்கினம் புகுந்துள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்புக்கு தகவல் கொடுத்துள்ளதை தொடர்ந்து குறித்த வீட்டுக்கு சென்ற கொக்குளாய் பொலிஸார் குறித்த விலங்கினத்தினை பத்திரமாக மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.



குறிப்பிட்ட அழுங்கினை வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொக்குளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அழுங்கு எனப்படும் அரியவகையான காட்டு விலங்கினம் முல்லைத்தீவு மாவட்ட பாரிய வனங்களில் காணப்படும் விலங்கினமாக காணப்பட்டாலும் இது அருகிவரும் ஒரு விலங்கினமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய அரசாங்கம் 5 மாதங்களில் 53 வீத நிலுவை செலுத்தியுள்ளது

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தகவல்

கொழும்பு, பெப். 26

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், கடந்த 5 மாதங்களில் கட்டணப் பட்டியல்களில், 53 வீத நிலுவைத் தொகை செலுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

8 வீத எதிர்மறை பொருளாதாரம் உள்ள சூழலில், அரைவாசிக்கும் அதிகமான கட்டணங்களைச் செலுத்த முடிந்தமை, சாதகமான விடயம் என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி நிலவரத்தின்படி, கட்டணப் பட்டியல்களில், 360 பில்லியன் ரூபா நிலுவையில் இருந்தது.

அவற்றில், 191 பில்லியன் ரூபாவை செலுத்திய பின்னர், தற்போது 169 பில்லியன் ரூபா நிலுவையில் இருப்பதாகவும், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். (அ)

# மூன்று அதிவேக வீதிகளின் நிர்மாணப் பணிகள் நிறுத்தம்

கொழும்பு, பெப். 26

மூன்று அதிவேக வீதிகளின் நிர்மாணப் பணிகள் நிதிப் பற்றாக் குறையால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரக்கோன் தெரிவித்தார்.

ருவன்புர அதிவேக வீதி, மத்திய அதிவேக வீதியின் தம்புள்ளை பிரிவு மற்றும் கண்டி பிரிவுகளின் நிர்மாணப் பணிகளே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன.

மத்திய அதிவேக வீதியின் கடவத்தை முதல் மீரிகம வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பணம் கிடைத்தவுடன் பணிகள் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் கூறினார்.

# முட்டை இறக்குமதிக்கான வர்த்தக வரியில் திருத்தம்

கொழும்பு, பெப். 26

முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த் தக வரியில் திருத்தம் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் மீது நிதி அமைச்சினால் விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா விசேட சரக்கு வரி பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

குறித்த வரித் திருத்தம் மூன்று மாத காலத்துக்கு செல்லுபடியாகும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

**எழுத்தாளர்**
**'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்'**
**உலகளாவிய**
**திறனாய்வுப் போட்டி - 2023**

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புக்களுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யுனிக்கோட் மற்றும் வேர்ட் அச்சுப்பிரதியாக அனுப்பவும்.
மேலதிக விபரங்களை இந்த இணையத்தில் பார்க்கவும்.

**உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31. 03. 2023**

**போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.**

மின்னஞ்சல் : kurufanclub@gmail.com
இணையம் : https://kurunovelstory.blogspot.com/
https://canadiantamilsliterature.blogspot.com/
http://tamilaram.blogspot.com/

**சுலோச்சனா அருண்,**
**செயலாளர்,**
**குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.**

## அமெரிக்க...

தந்தனர். இரண்டு சி-17 குளோப் மாஸ்ரர் இராணுவ சரக்கு வானூர்தி களில் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்கள் வந்ததும், விமான நிலைய அதிகார சபையின் தலைவரே சென்று இந்த நாட்டின் அரச தலைவர் அல்லது பிற நாட்டு தலைவர்கள் பயன்படுத்தும் வி.வி.ஐ.பி முனையத்தில் இருந்து அவர்களை வெளியே அழைத்து வருகிறார். அவர்களின் கடவுச்சீட்டு, விஸாக்கள் சரி பார்க்கப்படவில்லை. அவர்கள் எந்த சோதனையும் இன்றி வெளியே வந்தனர். அவர்கள் கட்டுநாயக்காவில் இருந்து கொழும்புக்கு செல்லும் நெடுஞ்சாலை வழியாக வந்துள்ளனர். அந்த வருகையின் போது, பிற வாகனங்களுக்கான போக்குவரத்துக்காக நெடுஞ்சாலையும் மூடப்பட்டது.

எவ்வாறாயினும், எமக்குக் கிடைத்த தகவலின்படி, இந்தக் குழு நாட்டின் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண மற்றும் அரச புலனாய்த்துறை பணிப்பாளர் சுரேஷ் சலே ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளது. அது மட்டுமின்றி, நாட்டின் புலனாய்வுத்துறை இயக்குநரின் அலுவலகத்துக்குள் நுழையும் முன்னரே, சுரேஷ் சலே மற்றும் அவரது உதவியாளர்கள் அனைவரையும் நிராயுதபாணியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, 2015 ஆம் ஆண்டு எமது நாட்டுக்கு வருகை தந்தபோது, லக்ஸ்மன் கதிர்காமர் நினைவகத்தில் உரை நிகழ்த்தியதை நான் நினைவு கூருகிறேன். அங்கு அவர், “இலங்கை தனித்துவமான இடத்தில் அமைந்துள்ள நாடு“ என்றார். 15 ஆம் நூற்றாண்டில், போர்த்துக்கல் மன்னர் இமானுவேல், இந்தியாவின் கோவாவின் போர்த்துகீசிய வைஸ்ராய் பிரான்சிஸ்கோ டி அல்மேடாவிடம் இதே கதையைச் சொன்னார். நீங்கள் கோவாவில் தங்காமல் கடவுளின் ஆசீர்வாதத்துடன் சிலோனுக்கு செல்லுங்கள். அங்கிருந்து எல்லாவற்றையும் கட்டுப்படுத்தலாம். இந்தியப் பெருங்கடலுக்கு வரும் எந்தக் கப்பலும் இருப்பிடத்தின் முக்கியத்துவம் காரணமாக அங்கே செல்வதனை தவிர்க்க முடியாது. எனவே, இலங்கை என்ற நாட்டை தமது இராணுவத் தளமாக ஆக்கிக் கொள்ளும் ஆசையில் உலக வல்லரசுகள் துடிக்கின்றன. எனவே, நாங்கள் அரசாங்கத்தை கேட்டுக்கொள்வது யாதெனில், இந்த கடல் பிராந்தியத்தின் சக்தியை தீர்மானிக்கும் அமெரிக்கா தலைமையிலான உலக வல்லரசுகளின் மூலோபாய நலன்களுக்கு இந்தோ - பசி பிக் பகுதியை பலியிடப் போகின்றீர் களா?.

இந்தியா தனது அண்டை நாடுகளின் முக்கியமான புலனாய்வுத் தகவல்களை நேரடியாக சி.ஐ.ஏ ஏஜென்டுக்கு அனுப்ப விரும்புகின்றதா? இந்தியாவின் பாதுகாப்புக்கு நல்லதா? ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட தீவிர வலதுசாரி, அமெரிக்க சார்பு கொள்கை இந்தியாவை ஆக்கிரமிப்பாளராக மாற்ற பெரிதும் உதவியது. மாமா காலத்தில் செய்ததை தற்போது பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து செய்ய இந்த மருமகன் தயாராகின்றாரா?

எமது அரச புலனாய்வுத்துறையை சி.ஐ.ஏ ஏஜென்ட்டின் கீழ் கொண்டு வர முயற்சித்தால், அது சிறிலங்காவின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையலாம். அத்தகைய முடிவுகளை எடுக்காமல் இந்த நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பது அரசாங்கத்தின் குறைந்தபட்ச பொறுப்பு. தன்னிச்சையாக முடிவு எடுப்பது நாட்டை சிக்கலில் தள்ளுகிறது. அந்த குறைந்தபட்ச பொறுப்பை நிறைவேற்றுங்கள்-என்றார்.(அ)

## உள்ளூராட்சி...

நாடளாவிய ரீதியில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் பிற்போடப்படுவதை தடுக்கமுடியாது என்று அவதானிக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் பிற்போடப்பட்டதன் காரணமாக வேட்புமனுக்களை சமர்ப்பித்த 80,000 இற்கும் அதிகமான வேட்பாளர்கள் பாரிய அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் மஞ்சுள கஜநாயக்க குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தலை ஒத்திவைத்தமைக்கு எதிராக மீண்டும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

மக்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அன்றைய நாள் நடத்தப்படாது என்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டை மீறி எழுந்துள்ள விவகாரங்கள் இதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு நடைபெறும் நாள் மார்ச் 3 ஆம் நாள் அறிவிக்கப்படும் என்ற ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

## நிறைவேற்று...

உள்ளூராட்சித் தேர்தல் சட்டபூர்வமான முறையில் பிரகடனப் படுத்தப்படவில்லை என்று ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து நகைப்புக்கிடமானதாகும்.

ஜனாதிபதிக்கான விடுபாட்டுரிமையை பயன்படுத்தி அவர் அவ்வாறான தவறான கருத்துக்களை மக்கள் மயப்படுத்த முயற்சிக்கின்றார். அதன் மூலம் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயகத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றார்.

ஜனாதிபதியின் கருத்தானது நாடு மிகமோசமானதும் அபாயகரமானதுமான நிலையொன்றை எதிர்கொள்ளக் கூடும் என்பதற்கான சாத்தியக்கூறுகளை வெளிக்க்காட்டி நிற்கின்றது-என்றார். (அ)

## ஜெனிவாவில்...

கலந்து கொள்ளவில்லை எனவும் இலங்கை சார்பில் அதிகாரிகள் குழுவொன்று ஜெனிவா செல்லவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

சட்ட மா அதிபர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை சார்பில் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கை தொடர்பிலான பிரேரணைகள் இம்முறை கொண்டுவரப்படமாட்டாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஊர்காவற்றுறை...

சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை குளத்தினுள் விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்துறை - மெலிஞ்சிமுனை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழதார் என தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## மயந்த...

விலகத் தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த குழுவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைராக தெரிவு செய்யப்பட்டபோதும், ஆளும் கட்சியின் ஒத்துழைப்பில் மயந்த திஸநாயக்க தலைவராக தெரிவானார்.

இந்தநிலையில், தமது பதவி விலகலை பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படவேண்டும் என்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில், ஹர்ஷ டி சில்வாவின் பெயரை எதிர்க்கட்சிகள் பரிந்துரைத்தன.

எனினும், மயந்த திஸநாயக்கவும் எதிர்க்கட்சி உறுப்பினரே என்ற அடிப்படையில் குழுவில் அதிகமாக அங்கம் வகிக்கும் ஆளும் கட்சியினர், அவரின் பெயரை பிரேரித்து அவரை தலைவராக்கினர்.

இதேவேளை, இந்த பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு சபாநாயகர், மயந்த திஸநாயக்கவுக்கு தொலைபேசி யின் ஊடாக கூறியதாக பாராளுமன்றில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தினார்.

எனினும், அதனை மறுத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மயந்த திஸநாயக்கவே தமக்கு தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டார் என குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## விரைவில்...

மற்றும் நீர் கட்டணம் செலுத்துவது 40 வீதத்தால் குறைந்துள்ளதாக மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைகளின் அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை, கடந்த 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், அதிக மின்சாரக் கட்டணத்தினால் பெருந் தோட்டங்களில் உள்ள பல குடிசைகள் விரைவில் இருளில் மூழ்கும் என சுட்டிக்காட்டியிருந்தார்.

பெருந்தோட்டங்களைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் மக்கள் அதிக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தவே முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், தோட்ட மக்களுக்கு மின்சாரக் கட்டணத்தில் நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில், அதிக மின் கட்டணம் காரணமாக, நுகர்வோர் ஏற்கனவே மின் சாதனங்களின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்துள்ளனர். இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிக மின்சாரத்தை உறிஞ்சும் குளிர் சாதனப் பெட்டிகள், மின்சார கேத்தில்கள் மற்றும் கூரை மின்விசிறிகள் ஆகியவற்றின் பயன்பாட்டை ஏற்கனவே பெரும்பாலான மக்கள் படிப்படியாக நிறுத்திவிட்டனர்.

இதேவேளை, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் சாதாரண மக்களால் சமாளிக்க முடியாதளவு எகிறியதை தொடர்ந்து, மின்சாரம் மற்றும் தண்ணீரை மோசடியாக பெற்றுக்கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகவும், எதிர்காலத் தில் இது மேலும் அதிகரிக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் கட்டணம் அதிகமாக உள்ளதால், அன்றாட தேவைக்குச் செலவழிக்க வேண்டிய பணத்தை, அந்த கட்ட ணத்தை செலுத்தவே செலவிட வேண்டியுள்ளதாக, நுகர்வோர் கூறுகின்றனர். (அ)

## வீட்டில்...

மனுவேற்பிள்ளை அசலின் பௌலினா, யேசுதாசன் விக்ரோரியா ஆகிய வயோதிபப் பெண்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் மறைந்த ஊடகவியலாளரும் கருத்தோவியருமான பயஸின் தாய் மற்றும் சிறிய தாயாரெனத் தெரிவிக்கப்பட்டது.

நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## கட்டுநாயக்க...

இந்த நபருக்கு எதிராக அவரது உண்மையான பெயரிலும், அவர் பயன்படுத்தும் போலி பெயரிலும் இரண்டு வெளிநாட்டு பயணத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நபர் தனது ஆவணங்களை குடியகல்வுத் துறையிடம் சமர்ப்பித்ததையடுத்து, அவர் வெளிநாடு செல்ல முடியாதென அறிவிக்கப்பட்டது.

அத்துடன், அவர் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதன் பின்னர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் குழு குடிவரவு திணைக்கள வளாகத்திற்கு வந்து அவரை கைது செய்துள்ளனர்.

விசாரணையின்போது, தான் இலங்கை கடற்படையில் இருந்து தப்பியோடியவர் என்றும், இலங்கை முழுவதும் 9 கொலைகளை செய்துள்ளதாகவும், சமீபத்தில் ஹன்வெல்ல பகுதியில் நடந்த கொலையும் அவற்றில் ஒன்று என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிது நேரம் கழித்து, இந்த நபரை விடுவிக்குமாறு குறிப்பிட்டு இருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் வந்தனர்.

அப்போது செல்லில் இருந்தவர் அதிலிருந்து வெளியே எடுக்கப்பட்டார்.

இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் இருந்து இந்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொறுப்பதிகாரியும் மேலும் 3 பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## விக்கிரமசிங்க...

திறைச்சேரியின் செயலாளர், அரச அச்சகத் திணைக்களத்தின் தலைவர் தடையாக செயற்படுகிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் உடல் விக்ரமசிங்க மலர்ச்சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளமை தெளிவாகியுள்ளது.

ஜனநாயகத்திற்கு முரணாக செயற்படும்போது ஏற்படும் பாரிய விளைவுகள் தோற்றம் பெற்றுள்ளன. இதற்கு பல சம்பவங்கள் எடுத்துக்காட்டாக காணப்படுகின்றன.

நாட்டு மக்களின் அடிப்படை வாக்குரிமை பிற்போட்டதன் பின்னணியில் தான் நாட்டில் யுத்தம் தோற்றம் பெற்றது என்பதை எவரும் மறக்க முடியாது.

வடக்கு மக்களின் வாக்குரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதை தொடர்ந்து ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது. இதற்கு ஐக்கிய தேசிய கட்சியே தலைமை தாங்கியது.

நாட்டில் மீண்டும் அமைதியற்ற தன்மையை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை ஜனாதிபதி தற்போது முன்னெடுத்துள்ளார். தவறான வரலாற்று சம்பவத்திற்கு மீண்டும் அழைப்பு விடுக்க வேண்டாம் என ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பதவியை நிராகரித்தார் செல்வம் அடைக்கலநாதன்!

## விக்னேஸ்வரன் எம்.பியும் மறுத்துவிட்டார்

கொழும்பு, பெப். 26

**மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது.**

**தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி. விக்னேஸ்வரனும் இதேபோன்ற அழைப்பை நிராகரித்துள்ளார்.**





ரணில்-பெரமுன ஆட்சியமைந்த பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களும் புதிதாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

முன்னைய கோட்டாபய விசுவாசிகளும், அப்போதைய பொதுஜன பெரமுன அரசின் பங்காளிகளும் கோட்டாபய ராஜபக்ஷவினால் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆட்சி மாற்றத்தின் பின், ரணில் - பெரமுன தரப்பினரால் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

தற்போது, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவராக டக்ளஸ் தேவானந்தாவும், வவுனியா அபிவிருத்திக்குழுத் தலைவராக ஈ.பி.டி.பியின் மற்றொரு எம்.பியான கு.திலீபனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டக்ளஸ் தேவானந்தா கடந்த ஆட்சியில் கிளிநொச்சி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அப்போது யாழ். மாவட்டத்தின் தலைவராகவே விரும்பியிருந்தார். என்றாலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் அங்கஜன் இராமநாதனே யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய புதிய நியமனங்களின்போது, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களை நியமிக்கவே அரசாங்கம் விரும்பியிருந்தது.

யாழ்ப்பாணத்துக்கு க.வி.விக்னேஸ்வரனையும், மன்னாருக்கு செல்வம் அடைக்கலநாதனையும் நியமிக்க அரசு விரும்பியிருந்தது.

எனினும், இருவருமே அந்த யோசனையை நிராகரித்துவிட்டனர். விக்னேஸ்வரன் ஒருமுறை மறுத்ததை அடுத்து, அரசாங்க தரப்பிலிருந்து கேட்பதை நிறுத்திவிட்டார்கள்.

ஆனால் செல்வம் அடைக்கலநாதனை அரச தரப்பு விடவில்லை. மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைமையை ஏற்றுக்கொள்ளுங்கள் எனத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை புதிய நியமனங்கள் வழங்கப்பட்டபோதும், பிரதமர் தொலைபேசியில் செல்வம் அடைக்கலநாதனை அழைத்து, மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுள்ளார். இந்தப் பதவியை ஏற்பதன் மூலம், மக்களுக்கு அபிவிருத்தி சார்ந்த பணிகளை மேற்கொள்ளலாமென பிரதமர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்றாலும், செல்வம் அடைக்கலநாதன் அந்த கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

இனப்பிரச்னைக்கான நிரந்தர தீர்வை நோக்கிய செயன்முறையில், நம்பிக்கை கொள்ளத்தக்க எந்தவிதமான உடனடி நடவடிக்கைகளையும் காண முடியவில்லை. காணி சுவீகரிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம், மக்களின் வாக்குரிமையை உறுதி செய்யவேண்டிய நடவடிக்கைகள் என எதையும் அரசாங்கம் செய்யாத சூழலில், அரசை காப்பாற்றும் விதமான எந்த முடிவுகளையும் எடுக்கமாட்டோம் என செல்வம் அடைக்கலநாதன் நேரடியாக குறிப்பிட்டுள்ளார். (அ)

# மஹிந்தவை பிரதமராக்க ஆளும் தரப்பினர் திட்டம்?

கொழும்பு, பெப். 26

பிரதமர் தினேஷ் குணவர்தனவை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அதற்கு ஆளுங்கட்சியிலுள்ள பலர் தங்களிடம் ஆதரவு கோரினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதமர் பதவியை மாற்றுவதற்கு திட்டமிருப்பதாக பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியிலுள்ள சிலர் எங்களிடம் கூறினர். அதன்படி தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த னவை நீக்கிவிட்டு மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படு றீகின்றன.

தலையணையை மாற்றினால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இந்த அரசாங்கமே வீட்டுக்குச் செல்லவேண்டும்..பிரதமர் பதவியை மாற்றுவதன் மூலம் நாட்டின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது - என்றார். (அ)

# சீனாவால் இலங்கைக்கு ஆபத்து!

## எச்சரிக்கை விடுத்தது அமெரிக்கா



நியூயோர்க், பெப். 26

சீனாவினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வழங்கிய கடனைப் பயன்படுத்தி இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு சீனா அழுத்தங்களை பிரயோகிக்கும் சாத்தியங்கள் காணப்படுவதாக அமெரிக்கா அச்சம் வெளியிட்டுள்ளது.

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணைச் செயலாளர் டொனால்ட் லூ இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு மிக அருகில் காணப்படும் நாடுகளுக்கு சீனா கடனுதவிகளை வழங்கி அவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புறச்சக்திகளின் அழுத்தங்களுக்கு அடி பணியாது தாங்களாகவே பிராந்திய வலய நாடுகள் தீர்மானம் எடுப்பதை உறுதி செய்ய வேண்டுமெனவும் அதற்கான உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கடமையை புறக்கணித்தார் ஜெனரல் சவேந்திர சில்வா

## விசாரணை நடத்துமாறு கோரும் வசந்த கரன்னகொட அறிக்கை

கொழும்பு, பெப். 26

கடந்த ஆண்டு மே மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்களை கட்டுப்படுத்த இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா தவறிவிட்டார் என முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தலைமையிலான மூவரடங்கிய குழு பரிந்துரை செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த வசந்த கர்னகொட, தயா ரத்நாயக்க மற்றும் ரொஷான் குணதிலக்க ஆகியோர் அடங்கிய குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி கடந்த மே மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பலரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, ஏராளமான ஆவணங்களை ஆய்வு செய்த பின்னரே இறுதி பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்த சம்பவம் தொடர்பாக, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பில் விசாரணை நடத்துமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. (அ)

## கிளிநொச்சியில் விபத்து:

# சைக்கிளில் சென்ற முதியவர் பாரவூர்தி மோதி உயிரிழப்பு!

கிளிநொச்சி, பெப். 26

கிளிநொச்சி ஏ-35 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில், முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று பிற்பகல் கிளிநொச்சி ஏ-35 வீதி கண்டாவளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கித் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த முதியவர், அந்த வீதியில் நெல் உலரவிடப்பட்டிருந்த நிலையில், அதனை விலத்தி அருகினால் சென்றுகொண்டிருந்தார் எனவும், இதன்போது முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கி வந்த பாரவூர்தி அவரை மோதியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த முதியவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

உயிரிழந்தவர் வட்டக்கச்சிப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஜனாதிபதி - தொழிற்சங்கம் பேச்சுவார்த்தை தோல்வி!

கொழும்பு, பெப். 26

ஜனாதிபதி மற்றும் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பிற்கு இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

இதனால் தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன ரட்ணசிங்கம் கூறினார்.

ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிக சம்பளம் பெறுவோரிடம் ஜனவரி மாதம் முதல் 36 வீதம் வரை வரி அறவிடும் கொள்கைக்கு எதிராக தொழில் வல்லுநர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற நிலையிலேயே, நேற்று அது தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் ஆக்கபூர்வமான எந்தவித தீர்வும் எட்டப் படவில்லை என அவர் குறிப்பிட்டார். (அ)

# தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 26

தேசிய மக்கள் சக்தியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாகநேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

மின்சாரம், நீர், சமையல் எரிவாயு, உணவுகளின் விலைகளை அதிகரித்து மக்களை வதைக்கும் அரசாங்கத்தை விரட்டியடிக்கவும், தேர்தலை வென்றெடுக்கவுமே இந்த போராட்டம் நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



இந்தப் போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் உட்பட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.